22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்

(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



Join Our Brokerage - Real Estate Needs

416.315.9397

www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.

Email: raja@mahendran.ca



நதி 22 பாலம் 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2012


# மத்திய அரசின் வரவுசெலவுத்திட்டம்

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பழமைவாத கட்சி அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 450 பக்கங்களை கொண்ட வரவு செலவுத்திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு மே 14, 2012 இல் 149 இற்கு 132 என்ற வாக்கு வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இவ் வரவுசெலவு திட்டத்தின் மீதான வாக்கெடுப்பை பிற்போடுவதற்கு எதிர்க்கட்சிகள் பகீரத பிரயத்தனம் செய்தும் வாக்கெடுப்பு நடைபெற்று வரவு செலவுத்திட்டமும் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. தற்போது வரவுசெலவுத் திட்டம் குழுநிலை விவாதங்கள் மூலம் அலசி ஆராயப்பட்டு மூன்றாவது இறுதி வாக்கெடுப்புக்கு தயாராகி வருகிறது. எதிர்கட்சிகள் இந்த இறுதி வாக்கெடுப்பை பிற்போடுவதற்கு பகீரத முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதன் ஒரு அம்சமாக எதிர்க்கட்சிகள் இந்த வரவுசெலவுத்திட்டத்திற்கு 871 திருத்தங்களை கொண்டுவந்துள்ளன. இந்த மூன்றாவது வாக்கெடுப்பு யூன் 13, 2012 மாலை 5.00 மணிக்கு ஆரம்பமானது. இந்த 871 திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் வாசிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட பின்னரே வரவு செலவுத்திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறும். இந்த 871 திருத்தங்களும் விவாதித்து வாக்கெடுப்பிற்கு விட 26 மணித்தியாலங்களுக்கு மேல் நாடாளுமன்றம் தொடர்ந்து நடைபெற்றுகொண்டிருக்க வேண்டும். சபாநாயகர் இந்த 871 திருத்தங்களையும் 157 தொகுதியாக சேர்த்திருந்தாலும் இவ்விவாதம் புதன்கிழமையையும் (யூன் 13, 2012) தாண்டி வியாழக்கிழமையும் (யூன் 14, 2012) நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



எதிர்கட்சிகள் இவ்வாறு திருத்தங்களை கொண்டு வந்தாலும் நாடாளுமன்றத்தில் பழமைவாதக்கட்சிக்கு பெரும்பான்மை ஆசனங்கள் இருப்பதால் அவர்கள் இத்திருத்தங்களை தோற்க்கடித்து வரவுசெலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பண்ணுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்கட்சிகள் இவ்வாறு இடைஞ்சல் கொடுப்பதற்கான முக்கிய காரணம் அவர்கள் இந்த வரவு செலவுத்திட்டத்தில் நாட்டின் வரவு செலவுத்திட்டத்திற்கு தேவையான நிதி மற்றும் வரி சம்பந்தமான விடயங்களை தவிர பல விடயங்கள் அடங்கி இருக்கின்றன எனவும், அவர்கள் அரசாங்கத்தை இந்த வரவுசெலவுத்திட்டத்தை இரண்டு சட்டமூலங்களாக பிரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தன. அரசு அதற்கு மறுப்பு தெரிவித்ததால் எதிர்கட்சிகள் தங்களால் இயலுமானவரை அரசுக்கு இடைஞ்சல் கொடுக்க முன்வந்துள்ளன.

இது விடயமாக எதிர்கட்சிகள் கருத்துத் தெரிவிக்கையில் அரசு பல முக்கிய விடயங்களை விவாதிக்காமல் வரவு செலவுத்திட்டம் என்ற போர்வையில் விரைவாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முயல்கின்றது. இதை மக்களுக்கு வெளிக்கொணரவே தாங்கள் இவ்வாறு பெரும் தொகையான திருத்தங்களை கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க முயல்கின்றோம் என்றனர்.

இவ்வரவு செலவுத்திட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள சில முக்கிய விடயங்கள் பின்வருமாறு.

**சுற்றுப்புறச் சூழல்:** தற்போது ஒரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் அத்திட்டத்தால் சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கையை அந்த செயற்திட்டத்திற்கான அனுமதி பெற சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இதில் பெரிய மாற்றங்களை இந்த வரவு செலவுத்திட்டம் கொண்டு வருகிறது. மந்திரி சபைக்கு இந்த சுற்றுப்புற சூழலில் ஏற்படும் பாதிப்பு பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்க காலக்கெடு விதிக்கும் உரிமையை இந்த வரவு செலவுத்திட்டம் அளிக்கிறது.


தொடர்ச்சி 02ஆம் பக்கம்




தமிழ் இலக்கியத்தோட்டம் வழங்கும் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருதைப் பெறும் எஸ். ராமகிருஷ்ணன் இந்தியாவில் இருந்து பியர்சன் விமான நிலையத்தை வந்தடைந்தபோது எடுக்கப்பட்டது.


Raj A. Rasaratnam

Sales Representative

Cell: 416-726-8055

Bus: 416-321-6969

HomeLife/GTA Realty Inc

Real Estate Brokerage*

5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2

*Independently Owned and Operated



உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்

Gteat Options for all your Mortgage needs

• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist

416.569.3099

E-mail: paski.kanagasabapathy@rbc.com



வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker

Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated



Sales & LEASING

MARKVILLE TOYOTA

KUMAR JEGASOTHY

905.294.8100 & 416.798.7234

Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <

9 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585



துரித பணமாற்றுச் சேவை

• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

MONEY TRANSFER

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3 416.267.8221

3351 Markham Rd. #109 416.321.8221



இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD

DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5 Markham & Eglinton Tel:416.264.3232

3351Markham Rd., #129 Markaham & Steeles Tel: 416.609.2022

# மத்திய அரசின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

**வேலைக்கால காப்புறுதி:** இவ் வரவுசெலவுத்திட்டம் வேலைக்கால காப்புறுதி (EI) யிலும் பாரிய மாற்றத்தை கொண்டு வருகிறது. வேலை இழந்தவர் இக்காப்புறுதியில் இருந்து பணம் பெறும்போது அவர் தனக்கு கிடைக்கும் எந்த "தகுதியான வேலை" யையும் செய்ய முன்வர வேண்டும். இந்த "தகுதியான வேலைக்கு" வரைவிலக்கணம் வரவு செலவுத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

**குடிவரவு விண்ணப்பங்கள்:** இவ் வரவுசெலவுத்திட்டம் தற்போது தேங்கிக் கிடக்கும் 280,000 இற்கும் மேற்பட்ட குடிவரவு விண்ணப்பங்களை (முறைப்படி சமர்ப்பிக்கப்பட்டவை) செயலிழந்தவை யாக்குகின்றது. இதனால் இவர்கள் கனடா வர மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

**வரிவிலக்கு:** இவ் வரவு செலவுத்திட்டம் சில மருந்து வகைகளுக்கும், மருத்துவ உபகரணங்களுக்கும் HST வரிவிலக்கு அளிக்கிறது. கனடாவை விட்டு வெளிநாடுகளுக்கு சென்று வருபவர்கள் கொண்டுவரும் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**SIN அட்டை:** SIN பிளாஸ்டிக் அட்டை விநியோகம் இவ் வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நிறுத்தப்படுகிறது. புதிய விண்ணப்பத்தாரர்களுக்குரிய SIN எண் அவர்களுக்கு தபாலில் அனுப்பப்படும். அத்துடன் அவர்களுக்கு அவ்வெண் உள்ள பிளாஸ்டிக் அட்டை அனுப்பப்பட மாட்டாது.

**வயது வந்தவர்களுக்கான ஓய்வூதியம்:** இவ் வரவுசெலவுத்திட்டம் மூலம் வயது வந்தவர்களுக்கு வழங்கப்படும் OAS எனப்படும் ஓய்வூதியம் வழங்கப்படும் வயது எல்லை 65 இல் இருந்து 67 ஆக 2023 இல் இருந்து படிப்படியாக அதிகரிக்கப்படுகிறது.

**ஒரு சத நாணயம்:** இவ் வரவுசெலவுத்திட்டம் மூலம் ஒரு சத நாணயங்களின் தயாரிப்பு நிறுத்தப்படுகிறது.

**ஆளுனர் நாயகம்:** கனடாவிற்கான இராணியால் நியமிக்கப்படும் ஆளுனர் நாயகம் (Governor General) இவ்வரவு செலவுத்திட்டம் மூலம் இனிமேல் வருமானவரி கட்டவேண்டும். ஆனால் இது அவர் தற்போது வருமானவரி விலக்குடன் பெறும் சம்பளத்தின் அளவை பாதிக்கா வண்ணம் அவருக்கு சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. தற்போது ஆளுனர் நாயகம் David Johnston பெறும் சம்பளமான $137,500, ஜனவரி 2013 இல் இருந்து $270,602க்கு அதிகரிக்கப்படுகின்றது.



**பொதுச்சேவை கணக்காளர் நாயகம்:** தற்போது பொதுச்சேவை கணக்காளர் திணைக்களத்தை சேர்ந்த கணக்கு பரிசோதகர் அரச நிறுவனங்களின் கணக்குகளை வருடந்தோறும் பரிசோதித்து வருகிறார். இது இந்த வரவுசெலவுத்திட்டம் மூலம் மாற்றப்பட உள்ளது. இனிமேல் அரச நிறுவனங்கள் அமைச்சருக்கே வருடம் தோறும் கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

**வரிவிலக்கு பெறும் பொதுச்சேவை நிறுவனங்கள்:** இவ் வரவுசெலவுத்திட்டம் வரிவிலக்கு பெறும்போது சேவை நிறுவனங்கள் அரசியல் விடயங்களிற்கு செலவழிக்கும் பணத்திற்கு கட்டுப்பாடு விதிக்கிறது.

**பணிக்குறைப்பு:** இவ் வரவுசெலவுத்திட்டம் மூலம் பல அரச உதவி பெறும் நிறுவனங்கள் மூடப்படுகின்றன. அவற்றுள் சில

1. National Council of welfare.
2. Public Appointments Commissions.
3. Rights and Democracy.
4. National round table on the environment and the economy.
5. Assisted human reproduction Canada.

அரசசேவையாளர்களது எண்ணிக்கையையும் இவ் வரவுசெலவுத் திட்டம் மூலம் குறைக்கப்படவுள்ளது.

## பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை கொண்டுவர ரொறொன்ரோ மாநகராட்சி முடிவு!

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பை தடை செய்வது என ரொறொன்ரோ மாநகராட்சி கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்த தடை ஜனவரி 01, 2013 அன்று ரொறொன்ரோ மாநகர் முழுவதும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும். இதன் பின்னர் சில்லறை வணிகர்கள் பொருட்கள் வாங்குவோருக்கு அவற்றை ஒருமுறை பயன்படுத்தக் கூடிய பொலித்தீன் பைகளில் போட்டுத் தரக் கூடாது என்ற சட்டமும் நடைமுறைக்கு வரும். இது தொடர்பாக மாநகர அவையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 24 பேர் மாநகராட்சியின் முடிவை ஆதரித்தும் 20 பேர் இதனை எதிர்த்தும் வாக்களித்தனர். முன் ஆய்வு மற்றும் ஆலோசனைகள் ஏதுமின்றி சுற்றுச் சூழலை கருத்தில் கொண்டு திடீரென பொலித்தீன் பைகளுக்குத் தடை விதிப்பது என ரொறொன்ரோ மாநகராட்சி எடுத்துள்ள முடிவினை சுற்றுச் சூழல் நிபுணர்கள் பாராட்டியுள்ளனர். அதே நேரத்தில் மாநகராட்சியின் இந்த முடிவுக்கு எதிராகவும் சிலர் நீதிமன்றத்தை நாடக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிளாஸ்டிக் பைகளின் மூலம் மட்டுமே மக்களிடமிருந்து கடைக்காரர்களுக்கு $5-மில்லியன் வருமானமாகக் கிடைக்கிறது. இதனை மையமாக வைத்தே சில நிறுவனங்கள் பிளாஸ்டிக் பைகளை அதிகம் தயாரித்து வருகின்றனர் என நகரசபை உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டினார். பிளாஸ்டிக் பைகளினால் சுற்றுச் சூழல் மாசுபடுவதுடன் பொதுமக்களுக்கு ஒவ்வாமை நோயும் உருவாகிறது என்பதாலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மாநகராட்சி கூட்டத்தில் விளக்கமும் அளிக்கப்பட்டது.




விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,
TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

# இலங்கையில் மீண்டும் புரட்சி வெடிக்கும் –சரத் பொன்சேகா



சிறை விடுதலைக்குப் பின் சர்வதேச அளவில் பொன்சேகா ஆனந்த விகடனுக்கு அளித்த பிரத்யேகப் பேட்டியே இது. முப்படைகளையும் கொண்ட விடுதலைப் புலிகளை வீழ்த்தியபோது மஹிந்த ராஜபக்ஷே - ஃபொன்சேகா கூட்டணி ஆசியக் கண்டத்தைத் தாண்டியும் கவனத்தை ஈர்த்தது. ஆனால், வெற்றியின் பலனை அறுவடை செய்வதில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் போட்டி ஃபொன்சேகாவைச் சிறைக்குள் தள்ளியது. அமெரிக்கா கொடுத்த அழுத்தத்தால் இரண்டு ஆண்டு சிறைவாசத்துக்குப் பின் வெளியே ஃபொன்சேகா வந்திருக்கிறார். அவருடைய ஒவ்வோர் அசைவும் இன்று இலங்கை அரசால் கண்காணிக்கப்படுகிறது.

ராஜபக்ஷே நினைத்ததை முடிப்பவனாக இருந்த நீங்களே, அவருக்கு எதிரியாகிப்போனதன் பின்னணி என்ன?
"இலங்கை மக்களிடையே எனக்கு ஒரு கதாநாயகன் அந்தஸ்து கிடைத்ததுதான் காரணம். எங்கள் மக்கள் இந்தப் போர் வெற்றியை இன்னொரு விடுதலையாகக் கருதினார்கள். இந்த வெற்றிக்குப் பின் ராணுவம் எவ்வளவு பெரிய விலை கொடுத்திருந்தது என்பது மக்களுக்குத் தெரியும். அதனால், என்னைக் கொண்டாடினார்கள். என்னைப் பொறுத்த அளவில், இந்தப் போர் பயங்கரவாதத்தில் இருந்து மக்களை விடுவிக்க நாங்கள் நடத்திய போர். ஒரு ராணுவத் தளபதியாக அதை மீறிய எதிர்பார்ப்பு எதுவும் எனக்கு இல்லை. ஆனால், ராஜபக்ஷேவுக்கு நிறைய உள்நோக்கங்கள் இருந்தன. போர் வெற்றியைத் தன்னுடைய அரசியல் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்வது அதில் முக்கியமானது. போர் வெற்றிக்குப்பின் மக்கள் என்னைக் கொண்டாடியது, அவருக்குப் பெரிய பொறாமையை உருவாக்கியது. அவருடைய அரசியல் கணக்குகள் காலியாகிவிடுமோ என்று பயப்பட்டார். அதனால், அவரே என்னை அவருக்கு எதிரி ஆக்கினார்."

"உங்கள் அரசியல் அபிலாஷையும் அதற்கு ஒரு காரணம் அல்லவா?"
"இல்லை. போருக்குப் பின் பல்வேறு தரப்பினரும் என்னைச் சந்தித்தபோது, ஊழலும் அடக்குமுறையும் கொண்ட ராஜபக்ஷே குடும்பத்தின் காட்டாட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற விஷயத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். ஆனாலும், நான் அமைதியாகத்தான் இருந்தேன். ஒரு கட்டத்தில் ராஜபக்ஷேவே என்னை அரசியலை நோக்கித் தள்ளினார்."

"சரி, போர் காலகட்டத்துக்குப் போவோம். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு எது காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? புலிகளின் பலம் என்ன... பலவீனம் என்ன?"
"இலங்கை ராணுவத்தின் பலவீனம்தான் புலிகளின் பலமாக இருந்தது. நான் பொறுப்பேற்பதற்கு முன்பு இலங்கை ராணுவம் எல்லா வகைகளிலும் பின்தங்கி இருந்தது. குறிப்பாக, தொழில்நுட்பத்தில். அதேபோல, எங்கள் கடற்படை பலவீனமாக இருந்தது. அரசியல் சூழலும் புலிகளுக்குச் சாதகமாக இருந்தது. இவைதான் புலிகளின் முக்கிய பலமாக இருந்தது. நான் பொறுப்பேற்றதும் இவை எல்லாவற்றையுமே மாற்றினேன். இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், புலிகள் நவீன போர் உத்திகள், தொழில்நுட்பங்களில் மிகவும் பின்தங்கி இருந்தார்கள். அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகான சர்வதேசச் சூழலை அவர்கள் உணராததும் முக்கியக் காரணம்."

"உண்மையைச் சொல்லுங்கள்... பிரபாகரனின் முடிவு என்னவானது?"
"ஒரே உண்மைதான். பிரபாகரன் இப்போது உயிரோடு இல்லை. போரில் அவர் இறந்துவிட்டார்!"

"போரில் சண்டையின்போதுதான் பிரபாகரன் இறந்தாரா? அவர் சரணடையவில்லை என்றும் சித்ரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படவில்லை என்றும் உங்களால் உறுதி அளிக்க முடியுமா?"
கண்டிப்பாக. அந்த இரவு எனக்கு எப்போதுமே மறக்க முடியாதது. ஒரு சின்னப் பகுதிக்குள் பிரபாகரனைச் சுற்றி வளைத்தோம். மூன்று அணிகளைக்கொண்டு மூன்று வளையங்களை புலிகள் அமைத்திருந்தார்கள். அதிகபட்சம் அவர்கள் 400 பேர் இருந்திருக்கலாம். முதல் அணியில் 100 பேர். நடேசன், புலித்தேவன் தலைமையிலானது அது. அழித்தோம். அடுத்த அணியில் 200 பேர். பிரபாகரனின் மூத்த மகன் சார்லஸ் தலைமையிலானது. அழித்தோம். கடைசிக் கட்டத் தாக்குதல் நள்ளிரவில் நடந்தது. 100 பேர்கொண்ட அணி அது. பிரபாகரன் தலைமையிலானது. அழித்தோம். சண்டையில் குண்டடிபட்டுத்தான் பிரபாகரன் இறந்தார்."

"உங்கள் கூற்றுப்படி, நீங்கள் கொன்றது உண்மையான பிரபாகரனைத்தான் என்றால், ஊடகங்களைக் கூட்டிக் காட்டுவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை?"
"உங்கள் கேள்வியில் ஒரு திருத்தம். நாங்கள் பிரபாகரனைக் கொல்லவில்லை. அவர் போரில் இறந்தார் என்பதே சரி. யுத்த களத்துக்குச் செல்லும்போது அங்கு என்ன நடக்கும் என்பதை யாராலும் அனுமானிக்க முடியாது. பத்திரிகையாளர்களை உடன் அழைத்துக்கொண்டு போருக்குப் போக முடியாது. அங்குள்ள சூழலே வேறு. பிரபாகரன் சடலம் கிடைத்தவுடன் அவருடைய மரணத்தை அறிவிப்பதற்கு முன் நாங்கள் அதைத் துளியும் சந்தேகம் இன்றி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டி இருந்தது. பிரபாகரனைத் தெரிந்தவர்களை அழைத்துவந்தோம். பிறகு, மரபணுப் பரிசோதனை மேற்கொண்டோம். முற்றுமுழுதாக இறந்தது பிரபாகரன் என்று தெரிந்துகொண்ட பின்னரே அறிவித்தோம். உங்களுக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம். நம்புங்கள். ஊடகங்களில் நீங்கள் பார்த்த சடலம் பிரபாகரனுடையது தான்."

"எந்தத் தருணத்திலாவது பிரபாகரனுடன் பேசி இருக்கிறீர்களா?"
"ஒருபோதும் இல்லை!"

"சரண் அடையும் முடிவை விடுதலைப் புலிகள் எடுத்த பின்னணி என்ன?"
"அவர்கள் அந்த முடிவை எடுக்கவில்லை. அந்த முடிவை நோக்கித் தள்ளப்பட்டார்கள். நாலாபுறமும் நாங்கள் சுற்றி வளைத்து இருந்தோம். அவர்கள் வசம் இருந்த பகுதி கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கிக்கொண்டே வந்தது. தப்பிக்க வழியே இல்லாத நிலையில்தான் அவர்கள் ஆயுதங்களை மௌனிக்கச் செய்தார்கள்."

"ஆனால், சரண் அடைவது தொடர்பாக ராணுவத்துடன் புலிகள் பேசினார்கள் இல்லையா?"
"இல்லை. இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் எதிலும் ராணுவம் புலிகளுடன் ஈடுபடவில்லை."

"அப்படி என்றால், சரண் அடைவது தொடர்பாக யார் யாருக்கிடையே பேச்சுவார்த்தை நடந்தது? தமிழகத் தலைவர்கள் யாரெல்லாம் தொடர்பில் இருந்தார்கள்? அப்போது ராணுவத்தின் நிலைப்பாடு என்னவாக இருந்தது?"

"அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தன. தமிழகத் தலைவர்கள் யாரெல்லாம் பேசினார்கள் என்று தெரியவில்லை. அரசு சாரா அமைப்புகள் பேசியது தெரியும். எங்களிடம் கேட்டபோது, "யார் சரண் அடைந்தாலும் நாங்கள் வரவேற்கிறோம். சர்வதேசப் போர் விதிமுறைகளின்படி சரண் அடைபவர்கள் கண்ணியமாக நடத்தப்படுவார்கள்" என்று சொன்னோம். எங்களை நம்பி வந்த பொதுமக்களையும் சரி, புலிகளையும் சரி, அப்படித்தான் நடத்தினோம்."

"வெள்ளைக் கொடி ஏந்தி சரண் அடைய வருபவர்கள் கொல்லப்பட்டதுகூட போர் விதிமுறைகள்படிதானா?"
"சரண் அடைய வருபவர்கள் தொடர்பாக என் வீரர்களுக்கு நான் தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்து இருந்தேன். அதனால்தான் இன்றைக்கு உயிரோடு விடுதலையாகும் புலிகளை நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதுபோல வெள்ளைக் கொடியை ஏந்திக் கொண்டெல்லாம் எவருமே சரண் அடைய வரவில்லை. நாங்கள் போர் அற நெறிகளை எந்த வகையிலும் மீறவில்லை என்பதுதான் உண்மை."


"எண்ணற்ற குழந்தைகள் போரில் கொல்லப்பட்டார்கள். உதாரணமாக, பிரபாகரனின் இளைய மகன். அவர் மீது இருந்த காயங்கள் மிகக் குறைந்த தூரத்தில் இருந்து அவர் கொல்லப்பட்டதை உறுதி செய்கின்றன. அதாவது, பிடித்துவைத்துக் கொன்று இருக்கிறீர்கள். உங்கள் போர் அறம் இதுதானா?"
"நீங்கள் தொடர்ந்து யூகத்தின் அடிப்படையிலான விஷயங்களை முன்வைத்தே கேள்விகளைக் கேட்கிறீர்கள். நீங்கள் குறிப்பிடுவதுபோல பிரபாகரனின் இளைய மகன் கொல்லப்பட்டுவிட்டதாக நான் நம்பவில்லை. கடைசி நாள் தாக்குதல் நடந்த இடங்களில் சில பெண்கள், நான்கைந்து சிறுவர்களின் சடலங்களைக் கைப்பற்றினோம். அதில் பெரும்பாலானவர்கள் சயனைடு உட்கொண்டு இறந்தவர்கள்.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# வாழ்க்கையின் குறிக்கோள் எது? அதை எப்படி அடைவது?



சத்குரு வாசுதேவ்

வாழ்க்கையை முழுமையாக தங்கள் அனுபவத்தில் உணராதவர்கள்தான் எப்போதும் வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றியே பேசி வருகின்றனர். தற்போது ஆனந்தக் களிப்புடன் இருந்தீர்கள் என்றால் நீங்கள் வாழ்க்கையின் குறிக்கோளில் அக்கறை கொள்ள மாட்டீர்கள்.

வாழ்க்கையை பல்வேறு விதங்களில் துன்பமாக உணர்வதால்தான் மனிதர்கள், வாழ்க்கையின் குறிக்கோள்தான் என்ன? என்று கேட்கிறார்கள். இதெல்லாம் தேவைதானா என்ற சந்தேகம் வந்து விடுகிறது. வாழ்க்கையை முழுமையாக அனுபவித்து வாழ்ந்து வந்திருந்தால், வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றி நினைக்க மாட்டீர்கள். ஏனெனில் வாழ்க்கை என்பதே உங்களை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளும் வகையிலான பிரம்மாண்டமான ஒன்றுதான். உங்களுக்கு வேறு ஒரு லட்சியம் தேவையில்லை.

நீங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி. தற்போது நீங்கள் உங்களை எத்தனையோ விதமாக நினைத்துக் கொண்டிருக்கலாம். ஒரு பத்திரிகையாளராகவோ, வேறு ஏதாவதாகவோ தற்போது உங்களை நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். அது நீங்கள் செய்து வரும் ஒரு வேலை. அவ்வளவுதான். ஆனால் அடிப்படையில் நீங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி. எனவே உங்களின் இலட்சியமாக இருக்க வேண்டியது இந்த வாழ்க்கையை அதன் உச்சக்கட்ட சாத்தியத்திற்கு எடுத்துச் செல்வதுதான்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

எல்லா எல்லைகளையும், எல்லா கட்டுப்பாடுகளையும் கடந்து, நான் யார்? இந்த வாழ்க்கை எதற்காக? என்பதைப் பற்றி உணர்வதுதான் வாழ்க்கையின் இறுதி இலட்சியம். இதுவே ஆன்மீக செயல்முறை. இதைத்தான் அனைவருமே செய்கின்றனர். ஆனால் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் வெவ்வேறு விதமாக செய்கின்றனர்.

பணத்தைப் பற்றி அறிந்திருந்தால், அதை இன்னும் சிறிது அதிகமாகச் சம்பாதிக்க நினைக்கின்றனர். அதிகாரம் அறிந்திருந்தால், மேலும் அதிக அதிகாரம் பெற நினைக்கின்றனர். எதை நன்றாக அறிவார்களோ, அதில் தற்போது இருப்பதைவிட மேலும் சிறிது அதிகமாக பெற முயற்சிக்கின்றனர். அப்படியானால் ஒவ்வொருவருக்குமே ஆவல் இருக்கிறது. இந்த ஆவல் எந்நிலையிலும் நின்று போகாது. இது விரிவடைய வேண்டும் என்பதற்கான முடிவில்லாத ஏக்கம். எல்லையில்லாத நிலைக்குப் போக உங்களை அறியாமலேயே முயற்சிக்கிறீர்கள். அதுதான் ஆன்மீக லட்சியம். ஆன்மீக இலட்சியம் என்பதே எல்லையில்லாத நிலையை அடைவதுதான்.

அந்த எல்லையில்லாத நிலையை அடைய இரண்டே வாய்ப்பு தான். ஒன்று விழிப்புணர்வுடன் அடையலாம் அல்லது விழிப்புணர்வில்லாமல் அடையலாம். அந்த எல்லையில்லாத நிலையை அடைய 1, 2, 3, 4 என்று எண்ணிக்கொண்டே சென்றால் அங்கு சென்றடைய முடியுமா? ஆனால் நீங்கள் விழிப்புணர்வில்லாமல் அதை அடைய நினைக்கும்போது இப்படித்தான் எண்ணிக் கொண்டே செல்கிறீர்கள். இப்படிச் செல்லும்போது ஒரு காலத்திலும் நீங்கள் அங்கு சென்றடைய முடியாது.

இந்த பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொருவரும் அந்த எல்லையில்லாத நிலையை அடையவே முயற்சிக்கின்றனர். ஆனால் விழிப்புணர்வில்லாமல் முயற்சிக்கின்றனர். விழிப்புணர்வின்றி எதை எல்லாம் செய்கிறீர்களோ, அதை எல்லாம் விழிப்புணர்வோடும் செய்ய முடியும். விழிப்புணர்வின்றி செய்தால், அடையக்கூடிய வாய்ப்பு மிகக் குறைவு. விழிப்புணர்வோடு செய்தால், அதை அடையக்கூடிய வாய்ப்பு மிக அதிகம். இதிலுள்ள வேறுபாடு இதுதான்.

ஆன்மீகப் பாதையில் இல்லாதவர் என்று யாரும் கிடையாது. ஒவ்வொருவரும் ஆன்மீகப் பாதையில்தான் இருக்கின்றனர். ஆனால் விழிப்புணர்வின்றி முயற்சிக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்வு தங்களுக்குத் தெரிந்த வகையில் விரிவடையவே விரும்புகின்றனர். எவ்வளவு விரிவடைய வேண்டும்? அவர்கள் எதிர்நோக்குவது, உண்மையில் எல்லையின்றி விரிவடைவதையே. ஆன்மீகம் என்பது கூட அதுதான்.

# இலங்கையில்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரபாகரனுக்கு நெருக்கமானவர்கள் - கருணா அம்மான் போன்றவர்களை அழைத்துவந்து காட்டினோம். பிரபாகரன் மனைவியோ, இளைய மகனோ, மகளோ அதில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எங்களைப் பொறுத்த அளவில் பிரபாகரன் குடும்பத்தில் கொல்லப்பட்டது பிரபாகரனும் அவருடைய மூத்த மகனும் மட்டும்தான். மற்ற மூவரின் நிலைபற்றி எங்களுக்கே இதுவரை எந்தத் தகவலும் தெரியாது.”

“ஒரு போர் அறநெறியும் பின்பற்றப்படாத இறுதிக் கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டபோது, இந்தப் போரை முன்னெடுத்த மனிதனாக உங்கள் மனநிலை எப்படி இருந்தது?”
“இந்தப் போரைத் தொடங்கியபோதே என் வீரர்களுக்கு நான் பிறப்பித்த முக்கியமான உத்தரவு, பொதுமக்கள் உயிர் முக்கியம். கடைசி வரை அந்த உத்தரவை என் வீரர்கள் காப்பாற்றினார்கள். நீங்கள் சொல்வதுபோன்றெல்லாம் நடக்கவே இல்லை. ஒரு போரை முன்னெடுத்தவனாக நான் முழுத் திருப்தியான மனநிலையிலேயே இருக்கிறேன்.”

“இந்தப் போரில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளின் பங்களிப்பு என்ன? விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கக் காரணம் என்ன?”
“அது அமெரிக்காவோ, ஐரோப்பிய நாடுகளோ... பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று எல்லா நாடுகளுமே நினைக்கின்றன. புலிகள் விஷயத்தைப் பொறுத்த அளவில் மாற்றுப் பாதை அல்லது வேறுவிதமான தீர்வுகளுக்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை இந்த நாடுகள் தெளிவாகப் புரிந்துகொண்டன. அதற்குப் பிறகுதான் எங்கள் நிலைப்பாட்டை ஆதரித்தன. சீனாவைப் பொறுத்த அளவில் அது எப்போதுமே எங்கள் நண்பன். எங்களுக்கு முக்கியமான ஆயுத இறக்குமதியாளர் சீனா என்பதும் முக்கியமானது.”

“விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுக்கும் வாய்ப்புகள் இருக்கின்றனவா?”
“இலங்கை இன்றைக்கு அழிந்துகொண்டு இருக்கும் தேசமாகிவிட்டது. பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருக்கிறது. விலைவாசி உயர்வோ மக்களைக் கொல்கிறது. அடித்தட்டு மக்கள் செய்வது அறியாது நிற்கிறார்கள். அரசிடமோ சுருட்டுவதைத் தவிர வேறு எந்தத் திட்டங்களும் இல்லை. இங்கு சுதந்திரம் இல்லை. ஜனநாயகம் இல்லை. யாருக்கும் எந்தப் பாதுகாப்பும் இல்லை. உங்களைச் சர்வ நேரமும் யாரோ கண்காணித்துக்கொண்டும் வேவு பார்த்துக்கொண்டும் உங்கள் உரையாடல்களை ஒட்டுக் கேட்டுக்கொண்டும் இருந்தால் நீங்கள் எப்படி உணர்வீர்கள்? நாங்கள் அப்படித்தான் இருக்கிறோம். ஊடகங்கள் முழுமையாக முடக்கிவைக்கப்பட்டு இருக்கின்றன. அரசு ஊடகங்கள் சொல்வதுதான் செய்தி. அரசுக்கு எதிராக யோசிப்பதுகூடக் குற்றம் என்று நினைக்கிறது அரசு. தான் ஆட்சியில் இருப்பதற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார் ராஜபக்ஷே. எங்கள் நாட்டில் இப்போது சர்வ சுதந்திரத்துடனும் சகல வசதிகளுடனும் இருப்பது ஒரே ஒரு குடும்பம்தான். அது... ராஜபக்ஷேவின் குடும்பம். நாட்டைச் சூறையாடிக்கொண்டு இருக்கிறார்கள் அவர்கள். எங்கு பார்த்தாலும் ஊழல், ஊழல், ஊழல்... மக்கள் வெறுத்துப் போய் இருக்கின்றனர். குறிப்பாக, இளைஞர்கள் கொந்தளிப்பில் இருக்கின்றனர்.

ராஜபக்ஷேவின் அடக்குமுறையும் ஊழலும் மிக்க இந்தக் காட்டாட்சி தொடர்ந்தால், விடுதலைப் புலிகள் மட்டுமா? இன்னும் ஆயிரமாயிரம் பேர் வருவார்கள். வடக்கில் இல்லை, தெற்கிலேயே அரசுக்கு எதிரான இளைஞர்களின் புரட்சி வெடித்தாலும்... ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.”

“முன்பு ஒரு முறை “சிங்களர்களிடம் தமிழர்கள் அடங்கித்தான் போக வேண்டும்” என்று பேசி இருந்தீர்கள். இப்போதும் “தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகக் காத்திருக்கத்தான் வேண்டும்” என்று பேசி இருக்கிறீர்கள். தமிழர்கள் மீதான உங்கள் வெறுப்புக்குக் காரணம் என்ன? சிங்களர்களுக்குக் கீழேதான் தமிழர்கள் இருக்க வேண்டுமா?”
“என்னுடைய பேச்சுகள் திரிக்கப்படுகின்றன என்று நினைக்கிறேன். நான் அப்படிப் பேசுபவன் இல்லை. தமிழர்கள் மீது எனக்கு வெறுப்பு எதுவும் இல்லை. இலங்கை இன்றைக்கு ஒரே நாடு. அதில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. எல்லோரும் கூடி வாழ வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். அமெரிக்காவில் எப்படி ஒபாமா அதிபர் ஆனாரோ... அதேபோல, இலங்கையில் ஒரு தமிழர் அதிபராகும் நாள் வர வேண்டும் என்றே விரும்புகிறேன்.”

“போருக்குப் பின் தமிழர் பகுதிகள் ராணுவமயமாக்கப்பட்டு இருக்கின்றன. இன்னமும் அங்கு இவ்வளவு ராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருக்க என்ன தேவை இருக்கிறது?”
“நான் இப்போது ராணுவத் தளபதி இல்லை என்பதை முதலில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், 2010-க்குள் அங்கு எல்லா புனரமைப்புப் பணிகளையும் முடித்து, படையினரை வெளியேற்றிவிட வேண்டும் என்று அப்போது அரசிடம் சொல்லி இருந்தேன். அரசு இன்னமும் புனரமைப்புப் பணிகளை முடிக்கவில்லை. பணிகள் முடியாத நிலையில், படையினரை முழுமையாக வெளியேற்றுவது தொடர்பாகவும் முடிவெடுக்க முடியாது.”

“இந்தியா - சீனா... இலங்கையின் இணக்கமான கூட்டாளி யார்?”
“இந்தியா எங்களுக்கு மிக அருகில் இருக்கும் நாடு. வரலாற்று ரீதியாக, கலாசார ரீதியாக நம் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவு முக்கியமானது. எந்த ஒரு கட்டத்திலும் நாங்கள் இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட மாட்டோம். அதேசமயம், சீனா எங்களுக்கு மிக முக்கியமான நண்பன். இரு நாடுகளுமே இலங்கையால் தவிர்க்க முடியாதவர்கள்.”

“உங்களுடைய அடுத்த கட்ட அரசியல் திட்டங்கள் என்ன?”
“இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை மலரச் செய்வது... எல்லோருக்கும் பேச்சு உரிமை, எழுத்துரிமை, வாழ்வுரிமை கிடைக்கவும் ஊழலற்ற நிர்வாகத்தைக் கொண்டுவரவும் உழைப்பது!”

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

- மோட்கேஜ் பேமென்ட் பிந்திபோச்சு !
- புறப்பட்டி ரக்ஸ் பேமென்ட் பிந்திபோச்சு !
- கிரடிட் காட்டிலையும் எடுக்க காசு இல்ல !
- றினுவல் வந்திருக்கு ஆனால் வட்டி கூட போட்டிருக்கினம் !

*போனில எல்லாம் செய்து தரலாம் எண்டு சொல்லுவினம்! பிறகு .......................... ......*

இந்தா, அந்தா, எண்டு இழுத்தடிப்பு !

கடைசி நேரத்தில கையை விடுகிறது !

போன் அடிச்சா எடுக்கிறதில்ல , !!!

**Our New Rates:**

| | |
|---|---|
| 3 Yr Fixed Rate | : 2.69 % |
| 5 Yr Fixed Rate | : 3.19 % |
| 10 Yr Fixed rate | : 3.89 % |
| 5 Yr Variable Rate | : 2.6 % |

OAC

உதுக்குத்தானே இப்ப **வோக் - இன்**

**மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !

அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !



# 416-644-3555

FSCO LIC # 10156

**CENTUM Rapid Mortgages Inc.**

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

# ஐரோப்பிய 2012 - கால்பந்து

## விளையாட்டுத்தகவல் 330

கால்பந்து போட்டிகளில் மிகவும் பிரசித்து பெற்றது உலகக் கிண்ண கால்பந்து போட்டி ஆகும். கால்பந்து போட்டிகளில் 2வது மிகப்பெரிய போட்டி ஐரோப்பிய கிண்ண போட்டி ஆகும். ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகள் மட்டுமே இதில் பங்கேற்கும். உலகக் கிண்ண கால்பந்து போட்டியை போலவே ஐரோப்பிய (யூரோ) கால்பந்து போட்டியும் 4 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது.

14வது ஐரோப்பிய கிண்ண கால்பந்து போட்டியை போலந்து, உக்ரைன் ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன. 8ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டி யூலை 1ம் திகதி வரை நடைபெறும். இதில் 16 அணிகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் இடம் பெற்றுள்ள அணிகள் வருமாறு:

குரூப் ‘ஏ’: போலந்து, ரஷ்யா, செக்குடியரசு, கிரிஸ்.
குரூப் ‘பி’: நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, போர்ச்சுக்கல்.
குரூப் ‘சி’: ஸ்பெயின், இத்தாலி, அயர்லாந்து குடியரசு, குரோஷியா.
குரூப் ‘டி’: பிரான்ஸ், இங்கிலாந்து, உக்ரைன், சுவீடன்.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். “லீக்” முடிவில் புள்ளிகள் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் “நொக்அவுட்” டான 2வது சுற்றுக்கு தகுதி பெறும். கிளாஸ் ஹண்ட்லேர், ராபின்வான் பெரிஸ் (நெதர்லாந்து), சோமஸ் குளுஸ் (ஜெர்மனி), கிறிஸ்டியானா ரொனால்டோ (போர்ச்சுக்கல்), ரோபிகீன் (அயர்லாந்து), ரூனி (இங்கிலாந்து) ஆகிய வீரர்கள் முத்திரை பதிக்க கூடியவர்கள். நடப்பு சாம்பியனும், உலக சாம்பியனுமான ஸ்பெயின் அணி இந்த போட்டியில் ஆதிக்கம் செலுத்த முயிற்சிக்கும். அந்த அணியில் முன்னணி வீரரான டேவிட் வில்லா காயம் காரணமாக இந்தப்போட்டித்தொடரில் ஆடவில்லை. இது அந்த அணியை பாதிக்கலாம். யூரோ கிண்ணத்தை ஜெர்மனி அதிகபட்சமாக 3 முறை வென்றுள்ளது. ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் தலா 2 முறையை வென்றுள்ளன.

### யூரோ கால்பந்து: ஜேர்மனியிடம் வீழ்ந்தது. போர்ச்சுக்கல்

யூரோ கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் நடந்த ஆட்டத்தில், போர்ச்சுக்கல் அணியை 1-0 என்ற கணக்கில் ஜேர்மனி வீழ்த்தியது.
யூரோ கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் கீவ் நகரில் நடந்த பி பிரிவு ஆட்டத்தில் ஜேர்மனி போர்ச்சுகல் அணியுடன் மோதியது. ஆட்டத்தின் 44வது நிமிடத்தில் போர்ச்சுக்கல் வீரர் பெப் அடித்த பந்து கோல்கம்பத்தில் மோதி களத்திற்குள் திரும்பியதால் ஜேர்மனி தப்பியது. முதல்பாதியை பொறுத்தவரை 63.7 சதவீத நேரம் பந்தை தன் கட்டுப்பாட்டில் வைத்து விளையாடியது மட்டுமே ஜேர்மனி வீரர்களிடம் குறிப்பிடத்தக்க விடயம்.

இதுவரை ஜேர்மனி விளையாடிய ஆட்டங்களில் மிட்பீல்டு இவ்வளவு மோசமாக இருந்தது இல்லை. அது மட்டுமல்லாமல் முன்கள வீரர்கள் ஒழுங்காக விளையாடவில்லை. இந்நிலையில் ஆட்டத்தின் 72வது நிமிடத்தில் ஜேர்மனி முதல் கோலை அடித்தது. இந்த கோலை மரியோ ஹோம்ஸ் தலையால் முட்டி அடித்தார். போர்ச்சுக்கல் கடைசி வரை எந்த கோலையும் அடிக்காததால், 1-0 என்ற கணக்கில் ஜேர்மனி வெற்றி பெற்றது.

### யூரோ கால்பந்து: 45 ஆண்டுகளுக்கு பின் நெதர்லாந்தை வீழ்த்தியது டென்மார்க்

நெதர்லாந்து அணிக்கு எதிரான யூரோ கிண்ண கால்பந்து போட்டியில், டென்மார்க் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஐரோப்பிய அணிகள் பங்கேற்கும் 14வது யூரோ கிண்ண கால்பந்து தொடர் போலந்து மற்றும் உக்ரைனில் நடக்கிறது. இதில் ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட 16 அணிகள் நான்கு பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன. கார்கிவ் (உக்ரைன்) நகரில் உள்ள மெட்டாலிஸ்ட் மைதானத்தில் நடந்த பி பிரிவு லீக் போட்டியில், பிபா தரவரிசைப் பட்டியலில் 4வது இடத்தில் உள்ள நெதர்லாந்து அணி, 9வது இடத்தில் உள்ள டென்மார்க் அணியை எதிர்கொண்டது. ஆரம்பத்தில் இருந்தே இரு அணி வீரர்களும் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, கோல் அடிக்க முடியாமல் திணறினர். இந்நிலையில் ஆட்டத்தின் 24வது நிமிடத்தில் டென்மார்க் வீரர் மைக்கேல் குரோன் டெல்லி, ஒரு கோல் அடித்தார். இதற்கு நெதர்லாந்து வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் முதல் பாதி முடிவில் டென்மார்க் அணி 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் நெதர்லாந்து அணியின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. அதிக நேரம் பந்தை தங்கள் வசம் வைத்திருந்த நெதர்லாந்து அணியினரின் கோல் அடிக்கும் முயற்சியை, டென்மார்க் கோல் கீப்பர் அருமையாக தடுத்தார். ஆட்டநேர முடிவில் டென்மார்க் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




### யூரோ கால்பந்து: ஸ்பெயினுக்கெதிரான ஆட்டத்தை சமன் செய்தது இத்தாலி

யூரோ கால்பந்து போட்டியின் ஸ்பெயினுக்கெதிரான போட்டியில் அதிரடியாக விளையாடிய இத்தாலி அணி இறுதி வரை சென்று ஆட்டத்தை சமன் செய்தது. நடைபெற்ற சி பிரிவு லீக் ஆட்டத்தில் இத்தாலி, ஸ்பெயின் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க முடியவில்லை. இரு அணி வீரர்களும் பலமுறை கோல் அடிக்க முயன்றாலும் அவர்களது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. ஆட்டத்தை நிர்ணயிக்கும் இரண்டாவது பாதியின் 60வது நிமிடத்தில் பலமுறை கோல்களை தவற விட்ட இத்தாலியின் அண்டானியோ டி நடாலி, அதிரடியாக சூப்பர் கோல் அடித்தார். இதனையடுத்து இத்தாலி அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. அடுத்த 4 நிமிடங்களில், அதாவது ஆட்டத்தின் 64வது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் பெர்னாண்டோ டோரஸ் கோல் அடித்து இத்தாலிக்கு பதிலடி கொடுத்தார். 90 நிமிடங்கள் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்ததால், டைபிரேக்கர் ஆட்டம் நடந்தது. டைபிரேக்கரில் இரு அணியினரும் ஆக்ரோஷமாக ஆடியும், கோல் அடிக்க முடியவில்லை. இதனால் இத்தாலி-ஸ்பெயின் இடையிலான லீக் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஸ்பெயின் அணிக்கு இது பெரிய ஏமாற்றமாக அமைந்தது.

### யூரோ கால்பந்து:

இங்கிலாந்து-பிரான்ஸ் அணிகள் மோதிய போட்டி சமன் ஆனது. யூரோ கால்பந்து போட்டியில் டொனாஸ்க் நகரில் நடந்த இங்கிலாந்து பிரான்ஸ் அணிகளுக்கிடையேயான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. யூரோ கால்பந்து போட்டியில் “டி” பிரிவில் இடம் பெற்றுள்ள இங்கிலாந்து-பிரான்ஸ் அணிகள் டொனாஸ்க்கில் உள்ள டான்பாஸ் ஏரானா மைதானத்தில் மோதின. இந்த யூரோ போட்டியின் முதல் சுற்றில் மிகுந்த எதிர்பார்ப்புக்குள்ளான ஆட்டம் இது. இங்கிலாந்து அணியில் 18 வயது சம்பர்லைன் களமிறங்கியது வியப்பை ஏற்படுத்தியது. மற்றபடி இரு அணியிலுமே முன்னணி வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். ஆட்டத்தின் முதல் 5 நிமிடங்கள் பிரான்ஸ் வீரர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. இங்கிலாந்து வீரர்கள் படிப்படியாக தாக்குதலை தொடர்ந்தனர். போட்டியின் 30வது நிமிடத்தில் அணித்தலைவர் ஸ்டீவன் ஜெரார்டு அடித்த ப்ரீகிக்கை தலையால் முட்டி ஜோலன் லெஸ்காட் கோல் அடித்தார். இந்த கோல் மூலம் இங்கிலாந்து 1-0 என்று முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடியாக போட்டியின் 39வது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் சமீர் நஸ்ரி சுமார் 25 அடி தொலைவில் இருந்து கோலை நோக்கி அடிக்க, இங்கிலாந்து கோல்கீப்பர் ஜோ ஹர்ட் பந்தை விழுந்து தடுக்க முயன்றார். ஆனால் பந்து கையில் சிக்காமல் வலைக்குள் பாய்ந்தது. முதல் பாதி ஆட்டம் 1-1 என்று சமநிலை கண்டது. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கடுமையாக முயற்சித்தும் கோல் அடிக்க முயலாமல் போனது. இறுதியில் முதல் பாதி ஆட்டத்தின் முடிவுகளோடு போட்டி சமன் ஆனது.



**எஸ். கணேஷ்**

**நினைவில் வைத்திருக்க**

### யூரோ 2012 - கால்பந்து

**காலம்** - யூன் 09 - யூலை 01, 2012
**இடம்** - போலந்து & உக்கிறெயின் (Poland & Ukraine)

**தெரிந்திருக்க** - இரு வருடங்களின் முன்பாக உலகளாவிய உதைபந்தாட்டப் போட்டியில் (தென் ஆபிரிக்காவில்) ஸ்பெயின், நெதர்லாந்தை வெற்றி கொண்டது.

### ஒலிம்பிக் 2012 - கால்பந்து

**காலம்** - யூலை 27 - ஆகஸ்ட் 12, 2012
**இடம்** - இலண்டன் - இங்கிலாந்து
**மெடல்கள்** - தங்கம், வெள்ளி, வெண்கலம்
**தெரிந்திருக்க** - இங்கிலாந்து மூன்றாவது தடவையாக, ஒலிம்பிக் போட்டியை நடத்துகின்றது. (Record Third Time) 100 மீற்றர் தூரத்தை Usain Bain 8.99 செக்கனில் தாண்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றும் சீனா, ஏறக்குறைய 100 மெடல்களைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் அதிகம். கடந்த தடவை (2008) சீனாவில் ஒலிம்பிக் மிகவும் கோலாகலமாக நடைபெற்று உலகளாவிய கவனத்தைப் பெற்றது.



YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# அடுக்குமாடி மனையின் விலையில் திருப்பம் ஏற்படுமா?

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 368**

கடந்த ஓர் ஆண்டிற்கு மேலாக மத்திய நிதி மந்திரி திரு. ஜிம். பிளகற்றி மற்றும் மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்னி போன்றவர்கள் ரொறொன்ரோ மற்றும் வன்கூவரில் அதிகரித்து வரும் ஆதன விலையைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை, எடுத்து வந்தார்கள். அதன் பலன் இப்பொழுது ஏற்படும் போலத் தோன்றுகின்றது. இதன் தொடக்கமாக சில அடுக்குமாடி கட்டும் நிறுவனங்கள் (Builders) புதிதாக நிலம் வாங்குவதனை தள்ளிப்போடுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



அண்மைக்கால கிழமைகளில், திருப்பி விற்கப்படும் வீடுகளின் (Resale Houses) விலைகளில் சிறிதளவு இறக்கத்தை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் புதிதாக கட்டுபவர்களும் தமது மனதை மாற்றுவதனையும் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு காரணமாக, குறிப்பாக புதிய அடுக்குமனைகளை வாங்குபவர்கள் வாங்குவதற்கு முடிவு எடுக்க காலத்தை பின் போடுவதே காரணம் ஆகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 50% இற்கு மேலான விலை அதிகரிப்பும், பல வாங்குனர்களையும் சிந்திக்க வைத்துள்ளது. விலையில் இறக்கம் ஏற்பட்டாலும் பாரியளவு இறக்கம் (1989 இலிருந்து 2007 வரை நடந்தது போலல்லாது) பெரிதளவில் இருக்காது என சில ஆய்வாளர்களால் எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த வருடத்தில் (2012) ஜனவரியிலிருந்து மார்ச் வரை 6,000 இற்கு மேற்பட்ட புதிய மனைகள் விற்கப்பட்டுள்ளன. இதுவே சரித்திரத்தில் இந்தக்காலப்பகுதியில் விற்கப்பட்ட அதிகூடிய மனைகளாகும். வடஅமெரிக்காவில், இன்றைய காலகட்டத்தில், ரொறொன்ரோவிலேயே அதிகூடிய அடுக்குமாடி மனைகள் கட்டப்படுகின்றன. அடுக்குமாடி கட்டும் நிறுவனங்கள் மிகவும் விரைவாக கட்டிமுடித்து பணத்தை பெறுவதனையே நோக்கமாக கொண்டுள்ளார்கள்.

திங்கள், யூன் 11, 2012 கனடிய நிதி நிறுவனம் Toronto Dominion Canada Trust (TDCT) பொருளாதார விற்பனர்களின் கூற்றின்படி எதிர்வரும் இரண்டு மூன்று வருடங்களில் 10 தொடக்கம் 15 வீதமான விலை இறக்கம் ரொறொன்ரோ மற்றும் வன்கூவரில் ஏற்படலாம் என எதிர்வு கூறியுள்ளனர்.

இந்த வருடத்தின் இறுதியில் (2012) அல்லது அடுத்த வருட (2013) தொடக்கத்தில் வட்டிவீதம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு நிலைமை ஏற்பட்டால், ஆதனம் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்டளவு குறையும். இதுவும் விலையை குறைக்கக் கூடிய சந்தர்ப்பத்தை தோற்றுவிக்கலாம். விலையில் பெரிய இறக்கம் ஏற்படுவதனை நிதிமந்திரி மற்றும் ஆளுனர் பெரிதாக விரும்பப் போவதில்லை. அவ்வாறான நிலைமை ஏற்படாமல் முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்பதனையும் மனதில் கொள்ளலாம். 2008/2009 இல் ஏற்பட்ட ஆதன விலை இறக்கத்தை சமாளித்த முறை ஞாபகம் இருக்கலாம். அண்மைக்காலங்களில் திரு. ஜிம் பிளகற்றியின் கனடிய பொருளாதாரம் சம்பந்தமாக அச்சப்படுத்தும் வார்த்தை பிரயோகங்கள், ஆதனம் குறிப்பாக அடுக்குமனை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

HomeLife/GTA Realty Inc. Brokerage* *Independently Owned & Operated




Raja Mahendran, P. Eng. Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

CONDO FOR RENT
KENNEDY & HWY 401
1 Bedroom condo for rent.
1 Parking,
1 Year old building.
Easy access. Rent $1100+

CONDO. FOR SALE
FINCH & MIDDLEFIELD



2 + Den condo.
Close to GTA Square.
Asking Price $229,000

OFFICE SPACE FOR
LEASE / SALE
FINCH & MIDDLEFIELD
2 Room renovated.
Many uses Available.

OFFICE SPACE
FOR LEASE



745 Sq.ft Embassy plaza.
2nd floor. All inclusive
Resonable rent. ($850)

CONVENIENCE STORE
FOR SALE
Weekely sale (18k - 22k).
Lotto, video, CD, DVD.
Established store
Asking only $139,900.
Many other businesses can
be done in this location.

BUSINESS SPACE
FOR SALE
MARKHAM & STEELES
-700 Sq.ft
-731 Sq.ft
Price negotiable.
Building sale.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# கனடா வீதிகளில் - சில தகவல்கள்

**ரொறொன்ரோ நகரில் சில பிரதான சந்திகளில் பொருத்தப்பட்டிருக்கும் 'சிவப்பு நிற சைகை ஒளி' கமராக்கள்** (Red Lights Cameras)

## வாகனங்களை எப்படி படம் பிடிக்கின்றது?

• **சிவப்பு நிற சைகை ஒளி** ((Red Traffic Lights) **பிரகாசிக்கும் அந்த சில கணநேரம் சந்திகளில் உள்ள தடித்த வெள்ளை கோட்டினை** (Thick white line) **கடந்தது வாகனம் ஒன்றின் முன் இரு சக்கரங்களும் பிரவேசிக்கும் அந்த ஆரம்பபடி நிலையில் முதல் படம் கிளிக்பண்ணப்படும்.**

• **பிரவேசித்த அதே வாகனம் அந்த கணநொடியில் சிவப்பு நிற சைகை ஒளியில் சந்தியின் மையப்பகுதியில் கடந்து போகும் போது இரண்டாவது படம் கிளிக் பண்ணப்படும்.**

வாகனத்தின் இலக்கத்தகடு தெளிவாக இருக்கும் நிலையில் பிடிக்கப்பட்ட இரு படங்களும், எந்த திகதியில், எந்த நேரத்தில், எந்த சந்தியில் படம் பிடிக்கப்பட்டது என்ற தகவல்களுடன் வாகனத்தின் சட்டரீதியான உரிமையாளரின் விலாசத்திற்கு தண்டனை ரிக்கற் தபாலில் தேடிவரும். இந்த சம்பவத்தில் வாகனத்தினை அந்த நேரம் எவரும் செலுத்தி இவ்வாறு படம் பிடிக்கப்பட்டிருக்க லாம். ஆனால் குற்றத்தின் பொறுப்பினை வாகன உரிமையாளர் மட்டும் ஏற்றுக்கொள்வதில் இருந்து தப்பிக்கவே முடியாது.

### இங்கு முக்கியமான சில விடயங்கள்!

1. மஞ்சள் நிற சைகை ஒளியில் (Yellow Amber Traffic Light) சந்தியினுள் பிரவேசித்திருந்தால் இந்த கமராக்கள் படம் பிடிக்கமாட்டாது. (ஆனால் பொலிஸ் உத்தியோகத்தர் இந்த நிலையினை நேரடியாக பிடிக்கும்போது தண்டனை ரிக்கற் வழங்குவார்கள்)

2. சில நேரங்களில் இடது பக்கம் திருப்பும் போது நடுச்சந்தியில் நேரே வரும் வாகனங்களுக்கு முதல் உரிமை கொடுப்பதற்காக நிற்கும் போது சிவப்பு நிற சைகை ஒளி என்ற நிலைமைக்கு மாறியிருந்தாலும் படம் பிடிக்கப்படமாட்டாது.

அதாவது சந்தியினுள் தடித்த வெள்ளை கோட்டினை (Thick White Line) சிவப்பு நிற சைகை ஒளியில் கடந்து உள்ளே பிரவேசிக்காமல் இருந்தால் மட்டுமே தப்பித்து கொள்ளலாம்.

3. கமராக்களின் படப்பிடிப்பில் அகப்பட்ட குற்றசாட்டுகளில் புள்ளிமதிப்பீட்டு இழப்புகளோ (DeMerit Points) அல்லது குற்றப்பதிவுகளோ எதுவும் இருக்கமாட்டாது தண்டனை பணம் மாத்திரமே செலுத்த வேண்டும்.

இடங்களில் பொருத்தப்பட்ட சைகை ஒளி விளக்குகள் உள்ள சந்திகளே இவைகள் ஆகும். இத்தகைய சந்திகளில் சிறு வீதியால் வாகனத்தினை செலுத்தி வருபவர், பாரிய வீதியில் பிரவேசிக்கும் போது, அதே பிரவேசிக்கும் பக்கத்தில் உள்ள சைகை ஒளி விளக்குகள் துரிதமாகவோ அல்லது சமநேரத்திலோ பச்சை நிற சைகை ஒளிக்கு மாற்றி கொடுக்காது.




## கனடிய தகவல் தொடர் 174

ஆனால் இந்த நிலையில் பொலிசாரின் கண்களில் கையும் மெய்யுமாக பிடிபட்டால் தண்டனை பணம் மேலதிகமாக மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் மற்றும் குற்றப்பதிவுகள் யாவற்றினையும் ஒன்றாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

4. $325 டொலருக்கு தண்டனை ரிக்கற்றினை ரொறொன்ரோ நகரினுள் எதிர்கொள்ள வேண்டிவரும். நீதிமன்றத்திற்கு சென்று குற்றத்தினை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தண்டனை ரிக்கற் தொகையினை குறைத்து வழங்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் படங்களுடன் குற்றச்சாட்டில் அகப்பட்டதால் தண்டனையி லிருந்து தப்பிக்கும் வழி என்பது கிடைப்பது அபூர்வம்.

### வீதி ஒழுங்கு சைகை ஒளி விளக்குள் (Trafic Control Signals) எவ்வாறு செயல்படுகின்றன.

சந்திகளில் வாகன ஒழுங்குகளை நெறிப்படுத்தும் 'சைகை ஒளி விளக்குகள்' இரு வகையான முறையில் இணைக்கப் பட்டுள்ளது என இவற்றுடன் சம்பந்தப்பட்ட ரொறொன்ரோவின் தொழில் நுட்பவியலாளர்கள் தங்கள் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளனர். அதாவது இவ் சைகை இரு வகைப்படும்.

1. சம நேர சைகை ஒளி விளக்குகள் (Equal Time Signals) பாரிய சந்திகளில் சம நேரங்களில் சைகை ஒளிகள் மாறிக் கொண்டேயிருக்கும்.

2. பாதி தூண்டும் சைகை ஒளி விளக்குகள் (Semi Actuated Signals) ஒரு சிறு வீதியால் வாகனத்தின் வரும் போது பாரிய வீதியுடன் இணைக்கும் சந்திகளில் (Intersection of a major road & Miner road) தொடுக்கும்

ஆனால் இந்த இடத்திற்கு வாகனங்கள் அணுகும் போது என்ன நடக்கும் என்பதனை இவை தொடர்பான தொழில் நுட்பவியல் கட்டுரைகளில் பின்வருமாறு ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Vehicles on the minor road are detected by electromagnetic wires & loops which are impeded in the payment on the side street near the stop bar.

நிலத்திற்கு கீழே அதாவது சந்தியிலுள்ள தடித்த வெள்ளை கோட்டுக்கு அருகே (White Thick line) வாகனம் ஒன்று சைகை ஒளி மாற்றத்திற்காக காத்து நிற்கின்றது என்ற தூண்டலை உருவாக்கும் மின்காந்த சக்தி வாய்ந்த வயர் நிலத்திற்கு கீழ் பதிக்கப்பட்டிருப்பதாகவும், சந்தியிலிருந்து எட்ட வாகனத்தினை நிறுத்தாது மிக அருகே வாகனத்தினை நிறுத்தி வைத்திருக்கும் போது மின்காந்த சக்தியினூடாக சைகை ஒளி மாற்றி கொடுக்கும் என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அனேகமாக பாதி தூண்டும் சைகை ஒளி விளக்குகள் பொருத்தப்பட்ட சந்திகளில் (Semi Actuated Signal Lights Intersection) கடந்து செல்ல




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


தொடர்ச்சி 09ஆம் பக்கம்


**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**New Market**
7 M/Litre New gas statiuon for sale
Ultramar 3 Acre land

**For Sale**
Markham & Ellesmere 3 Bedrooms Condo. for sale

0 - 5 years Newer homes in Stouffville

**Renovate and Sell**
Old detached bungalow near University of Toronto

# நெஞ்சம் எல்லாம் நிம்மதியே

## யூன் 1-21 வரை கிடைக்கப்பெறும்

**ஒன்டாரியோ சேவிங்ஸ் பாண்ட்-இல் நீங்கள் முதலீடு செய்யும்போது, உங்கள் முதலீடு பலமான அடித்தளம் கொண்டதாயிருக்கும்.**

மாகாணத்தினால் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பான, பத்திரமான, முதலீட்டை நீங்கள் செய்கிறீர்கள் என்பதில் நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம்.

உங்கள் வங்கியில் அல்லது முதலீடு செய்யுமிடத்தில் ஒன்டாரியோ சேவிங்ஸ் பாண்ட் என கேட்டு வாங்குங்கள்.

**விருத்தியடையும்-விகிதம் உடைய பாண்ட்**

இந்த சிறந்த வட்டிவிகிதமானது, அதன் 5 ஆண்டு காலத்தில் ஒவ்வொரு வருடமும் உயர்ச்சி அடையும். ஒவ்வொரு ஆறு மாதமும் நீங்கள் அதை மீட்டுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| 1 ஆம் வருடம் | 1.25% |
| 2 ஆம் வருடம் | 1.50% |
| 3 ஆம் வருடம் | 1.75% |
| 4 ஆம் வருடம் | 2.00% |
| 5 ஆம் வருடம் | 2.25% |

**மாறுகிற-விகிதம் உடைய பாண்ட்**

சிறந்த வட்டியை வழங்குவதற்காக, அதன் 3 ஆண்டுகாலப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய வட்டிவிகிதம் வழங்கப்படும். நீங்கள் அதை ஆண்டுதோறும் மீட்டுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| தற்போதைய விகிதம் | 1.25% |

**நிலையான-விகிதம் உடைய பாண்ட்**

இந்த பாண்ட்-இன் காலம் முழுவதும் நீங்கள் நிலையான சிறந்த வட்டிவிகிதத்தை அனுபவித்து மகிழலாம்.

| | |
|---|---|
| 3 வருட நிலையான-விகிதம் உடைய பாண்ட் | 1.50% |
| 10 வருட நிலையான-விகிதம் உடைய பாண்ட் | 2.80% |

ontario.ca/savingsbonds • 1-888-212-BOND (2663) • TTY: 1-800-263-7776

ஒன்டாரியோ அரசினால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario Savings Bonds | Ontario


# அடுக்குமாடி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வாங்குபவர்களை கிலேசம் கொள்ளச் செய்துள்ளது.

அண்மையில் சந்தைக்கு கொண்டு வரப்பட்ட பல அடுக்குமாடி மனைகளில் 30 தொடக்கம் 40 வீதமான அலகுகளே விற்கப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் ஒன்று/இரண்டு கிழமைகளில் 60 தொடக்கம் 70 வீதமான மனைகள் விற்று முடிந்தது ஞாபகத்தில் கொள்ளலாம்.

இதனால் சில நிறுவனங்கள் புதிதாக கொண்டு வரப்படும் கட்டிடத்தொகுதியை (Projects) காலம் தாழ்த்துவதனைக் காணலாம். பொதுவாக, நிலத்தை கொள்வனவு செய்ததிலிருந்து கட்டிடத் தொகுதியை கட்டிமுடித்து பணத்தை பெற ஏறக்குறைய 5 வருடங்கள் எடுக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், கட்டிடம் கட்டுபவர்கள் பணத்தை முதலிட ஒன்றிற்கு இருதடவை சிந்திப்பார்கள். ஏற்கெனவே ரொறொன்ரோவின் சில பகுதிகளில் ஒரு சதுர அடி $700 ஆக விற்ற மனைகளின் விலை குறைவடைவதனையும் மேலும் பலவிதமான சலுகைகளை (Incentives) வாங்குபவர்களுக்கு கொடுத்து விற்பனையை அதிகரிக்க எத்தனிப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது. எதிர்கால வட்டிவீதத்தின் அதிகரிப்பு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது முக்கிய விடயம். அத்துடன் வீடு, மனை வாங்குபவர்களின் மனநிலை மிக மிக முக்கியமானது. ஐரோப்பிய, அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களும் கனடிய ஆதன விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

# கனடா வீதி...


08ஆம் பக்கத்தொடர்ச்சி

விரும்பும் பாதசாரிகளுக்கு அவர்களுக்கு என சைகை ஒளி மாற்றி கொடுக்கும் (Pedestrian Push Buttons) இருக்கும்.

## 401 அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து வெளியே வரும் ஒவ்வொரு வீதியிலும் வெவ்வேறு இலக்கம் இடப்பட்டு இருப்பதனை அவதானித்து இருப்போம். அதன் அர்த்தம் யாது?

சாரதி பயிற்றுனர்களுக்குரிய வகுப்பறை பயிற்சி திட்டத்தின் போது (Driving Teachers Class Room Training program) இதற்குரிய அர்த்தத்தினை தெளிவுபடுத்தியிருந்தனர். உதாரணத்திற்கு இங்கு 401 அதிவேக நெடுஞ்சாலையினை எடுத்துக்கொள்வோம். இது வின்ஸர் (Windsor) நகரிலிருந்து ஆரம்பித்து கியூபெக் மாகாண எல்லைவரை 817.9 கி.மீ (508.2 மைல்கள்) தூரம் கொண்ட ஒன்ராரியோ மாகாணத்தின் பிரதான நெடுஞ்சாலையாகும்.

இந்நெடுஞ்சாலையிலிருந்து ஸ்காபரோவில் உள்ள மார்க்கம் வீதியில் வெளியே வர வேண்டுமானால் அங்கு வெளியேறும் பாதைக்கு Exit 383 என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் யாதெனில் இவ் 'வின்ஸர்' நகரிலிருந்து இம் நெடுஞ்சாலை ஆரம்பிக்கும்



மார்க்கம் வீதி வரையுள்ள தூரம் 383 கி.மீ என்பதனையே குறிக்கின்றது.

அதே நெடுஞ்சாலையில் 'மோர்னிங்சையிட்' வீதியில் வெளியே வர விரும்பினால் அங்கு வெளியேறும் பாதை இலக்கம் Exit 387 என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மார்க்கம் வீதி வெளியேற்றத்திற்கும் மோர்னிங்சையிட் வீதி வெளியேற்றத்திற்கும் இடையே உள்ளதூரம் 387-383 = 4கி.மீ. என நாமே கணிப்பிடலாம். இதே அர்த்தமே கனடாவில் உள்ள சகல நெடுஞ்சாலைக்கும் இருக்கும் என்று அல்ல. ஒவ்வொரு நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறும் வீதிகளை அடையாளப்படுத்தி கொள்ள வெவ்வேறு அர்த்தங்களில் இலக்கங்கள் குறிப்பிட்டிருக்கும். நாம் இங்கு குறிப்பிட்டது 401 நெடுஞ்சாலை மட்டுமே ஆகும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com

# குளிர்காய்சலும், குளிர்காய்சல் தடுப்பூசியும்

## குளிர்காய்ச்சல் என்றால் என்ன?

புளு (flu) என்று பரவலாக அறியப்படும் குளிர்காய்ச்சல் (influenza) ஒரு நச்சுயிரியால் உண்டாவது. குளிர்காய்ச்சலால் பீடிக்கப்படுவோருக்கு காய்ச்சல், தடிமல், தசைநார் வலி, தலைவலி, தொண்டை நோ, மூக்கொழுகல், இருமல், பலவீனம், களைப்பு ஏற்படும். இந்நோய்க்குறிகள் இரண்டு முதல் ஏழு நாட்கள் வரை நீடிப்பது வழக்கம். இருமலும் பலவீனமும் ஆறு கிழமைகள் வரை நீடிக்கக்கூடும். வயது முதிர்ந்தவர்களுக்கு காய்ச்சல் ஏற்படாது போகலாம். சிறுவர்களுக்கு குமட்டல், வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற வயிற்று நோய்க்குறிகள் ஏற்படக்கூடும்.

## குளிர்காய்ச்சல் பீடிக்கும் ஆபத்தை எதிர்நோக்குவோர் யார்?

குளிர்காய்ச்சல் எவரையும் பீடிக்கக்கூடும். இதனால் பீடிக்கப்படுவோருள் அநேகர் கடுமையாக நோய்வாய்ப்பட மாட்டார்கள். எனினும் குளிர்காய்ச்சல் பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்குவோர் உபநோய்களால் மிகவும் பாதிக்கப்படுவர்: இரண்டு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள், இரண்டு முதல் நான்கு வயதும் உடல்நலமும் கொண்ட பிள்ளைகள் 65 வயதும், அதற்கு மேற்பட்ட வயதும் கொண்டவர்கள் தாதிமை அகங்கள் (nursing homes), அல்லது நீடித்த பராமரிப்பு நிலையங்கள் (chronic care facilities) என்பவற்றில் வசிப்பவர்கள் நீரிழிவு, புற்றுநோய், நுரையீரல் நோய், இதய நோய், சிறுநீரக நோய் போன்ற நீடித்த நோய் பீடித்தவர்கள் கர்ப்பிணிகள் பழங்குடிமக்கள் உடற்பருமன் மிகுந்தவர்கள் அனைவரும் மிகவும் நோய்வாய்ப்படுவர். நுரையீரல் அழற்சி, காதில் நச்சுயிரி வகைகள் பீடித்தல், வறள்வு போன்ற உபநோய்களும், அரிதாக இறப்பும் ஏற்படும்.

## குளிர்காய்ச்சல் எவ்வாறு பரவுகிறது?

இருமல், தும்மல் துளிகள் மூலம் குளிர் காய்ச்சல் மிகவும் எளிதாகப் பரவுகிறது. முத்தமிடல் அல்லது கைகுலுக்கல் மூலமும், குளிர்காய்ச்சல் பீடித்த ஒருவர் தொட்ட புறங்களையோ பொருட்களையோ தொட்டு விட்டு, நச்சுயிரி படிந்த கையினால் உங்கள் கண்ணையோ மூக்கையோ வாயையோ தொடுவதன் மூலமும் அது பரவலாம்.

## குளிர்காய்ச்சலைத் தடுப்பதற்கு நான் என்ன செய்யலாம்?

ஆண்டுதோறும் குளிர்காய்ச்ல் தடுப்பூசி ஏற்றவும். பின்வரும் எளிய நடவடிக்கைகள் மூலம் உங்களைப் பாதுகாக்கவும்: உங்கள் கைகளைக் கழுவவும் உங்கள் கைகளைத் தவிர்த்து, வேறொரு பொருளினால் மூடி இருமவும் அல்லது தும்மவும் கையழுக்குடன் உங்கள் கண்ணையோ, முக்கையோ, வாயையோ தொடுவதைத் தவிர்க்கவும், நோய்வாய்ப்பட்டவர்களுடன் நெருங்கித் தொடர்புகொள்வதைத் தவிர்க்கவும் நோய் வாய்ப்பட்டால், வீட்டிலேயே தங்கியிருக்கவும், நன்கு ஓய்வெடுக்கவும், உடற்செயல் புரியவும், நீர்ம வகைகள் அதிகம் பருகவும் சத்துணவு உண்ணவும்.

## குளிர்காய்ச்சல் தடுப்பூசி என்றால் என்ன, அது என்ன செய்யும்?

ஆண்டுதோறும் மூன்று குளிர்காய்ச்சல் வகைகள் பீடிக்காதவாறு குளிர்காய்ச்சல் தடுப்பூசி (flu shot) பாதுகாக்கிறது. இந்த ஆண்டு H3N2, H1N1, B வகை குளிர்காய்ச்சல் பீடிக்காவாறு குளிர்காய்ச்சல் தடுப்பூசி பாதுகாக்கிறது. ஊசி மூலம் ஏற்றப்படும் குளிர்காய்ச்சல் தடுப்புமருந்தில் உயிருடன்கூடிய குளிர்காய்ச்சல் நச்சுயிரி இல்லை. ஆகவே அதனை ஏற்றுவதால் உங்களுக்கு குளிர்காய்ச்சல் ஏற்படாது. தடுப்பூசி ஏற்றிய பின்னர், நச்சுயிரி பீடிக்காவாறு பாதுகாப்பு ஏற்படுத்த உங்கள் உடலுக்கு இரண்டு கிழமைகள் தேவைப்படும். இப்பாதுகாப்பு நான்கு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் நீடிக்கும். குளிர்காய்ச்சல் தடுப்பூசியால் தடிமல், மற்றும் குளிர்காய்ச்சல் என்று தவறாகக் கருதப்படும் வேறு நச்சுநோய் வகைகள் பீடிக்காவாறு பாதுகாக்க முடியாது.

## கடந்த ஆண்டு நான் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றினேன், இந்த ஆண்டும் நான் தடுப்பூசி ஏற்ற வேண்டுமா?

குளிர்காய்ச்சலை ஏற்படுத்தும் நச்சுயிரிகள் அடிக்கடி மாறுபவை. நீங்கள் ஆண்டுதோறும் தடுப்பூசி ஏற்றி உங்களைப் பாதுகாக்க வேண்டும். நீங்கள் கடந்த ஆண்டு H1N1 தடுப்பூசி ஏற்றியிருந்தாலும், உங்களை வேறு குளிர்காய்ச்சல் வகைகள் பீடிக்காவாறு பாதுகாப்பதற்கு இந்த ஆண்டும் நீங்கள் தடுப்பூசி ஏற்ற வேண்டும். இந்த ஆண்டுக்கான குளிர்காய்ச்சல்-தடுப்பூசி இரண்டு புதிய குளிர்காய்ச்சல் வகைகளுக் குரியது. இந்த ஆண்டு முன்வைக்கப்படும் தடுப்பூசி எதிலும், கடந்த ஆண்டுக்கான H1N1 தடுப்பூசியில் இடம்பெற்ற adjuvant எதுவும் இடம்பெறாது.

## குளிர்காய்ச்சல் தடுப்பூசியின் பக்க விளைவுகள் எவை?

குளிர்காய்ச்சல் தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது. அநேகமான பக்க விளைவுகள் மிருதுவானவை. தடுப்பூசி ஏற்றிய இடம் நோதல், சிவத்தல், தலைவலி, களைப்பு, வேதனை போன்றவை அவற்றுள் அடங்கும். தடுப்பூசி ஏற்றி ஓரிரு நாட்களுள் பக்க விளைவுகள் தென்படும். கடுமையான பக்க விளைவுகள், ஒவ்வாமை விளைவுகள் ஏற்படல் அரிது. கடந்த ஆண்டுகளில் குளிர்காய்ச்சல்-தடுப்பூசி ஏற்றியோருள் ஒருசிலர் விழி-மூச்சுக்குழல் கோளாறுக்கு (Oculo-Respiratory Syndrome) உள்ளானார்கள். விழி-மூச்சுக்குழல் கோளாறினால் கண் சிவக்கும், இருமல், நெஞ்சுப் பிடிப்பு, மூச்சு முட்டு, குரல் கரகரப்பு, தொண்டை நோ முகவீக்கம் உண்டாகும். தடுப்பூசி ஏற்றி 24 மணித்தியாலங்களுள் தோன்றும் இந்நோய்க்குறிகள் 48 மணித்தியாலங்களுள் மறையும். குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதால் மிகவும் அரிதாகவே (பத்து இலட்சம் தடவைகளுள் ஏறக்குறைய ஒரு தடவையே) தசைநார்ப் பக்கவாதம் ஏற்படுத்தும் நரம்புக் கோளாறாகிய Guillain-Barré Syndrome தற்காலிகமாய் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. நீங்களோ, உங்கள் பராமரிப்பில் உள்ள எவருமோ தடுப்பூசி ஏற்றி, பக்க விளைவுக்கு உள்ளானால், சிகிச்சை பெறவும்.

## யார் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்ற வேண்டும்?

குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றாதிருப்பதற்கு மருத்துவ காரணம் இருந்தாலொழிய, பிறந்து ஆறு மாதம் கழிந்தோர் அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் அனைவரும் இத்தடுப்பூசியால் நலம்பெற முடியும். நீங்கள் குளிர்காய்ச்சல் சார்ந்த உபநோய்கள் பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்குபவர் (மேலே 'குளிர்காய்ச்சல் பீடிக்கும் ஆபத்தை எதிர்நோக்குவோர் யார்?' என்னும் கூறினைப் பார்க்கவும்), அல்லது குளிர்காய்ச்சல் சார்ந்த உபநோய்கள் பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்கும் (சுகாதார பராமரிப்பு பணியாளர்கள், அத்தியாவசிய சமூக சேவை பணியாளர்கள் போன்றவர்களுடன்) பணியாற்றுபவர் என்றால், தடுப்பூசி ஏற்ற வேண்டும்.

## நான் எத்தனை தடவைகள் தடுப்பூசி ஏற்ற வேண்டியுள்ளது?

வயது வந்தவர்கள் ஆண்டுதோறும் ஒரு தடவை தடுப்பூசி ஏற்ற வேண்டும். ஒன்பது வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் முன்னொரு பொழுதும் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றவில்லை என்றால், ஒரு மாத இடைவெளி விட்டு இரண்டு தடவைகள் தடுப்பூசி ஏற்ற வேண்டும்.

## யார் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றக்கூடாது?

1. முட்டை அல்லது இத்தடுப்பு மருந்தின் (neomycin, thimerosal போன்ற) கூறுகள் எவையும் ஒவ்வாதவர்கள் அல்லது முன்னொரு தடவை குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றியபொழுது பாரதூரமான விளைவுகளுக்கு உள்ளாகியோர்.

2 பிறந்து ஆறு மாதம் ஆகாத குழந்தைகள்

3 காய்ச்சல் பீடித்த எவரும் குணமடையும் வரை குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதை ஒத்திவைக்க வேண்டும் (மெதுமையான தடிமல் பீடித்தவர்கள் தடுப்பூசி ஏற்றலாம்).

4 Guillain-Barré Syndrome (GBS) நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள் அல்லது நரம்புக் கோளாறு பீடித்துள்ளவர்கள் தடுப்பூசி ஏற்ற முன்னர் ஒரு மருத்துவருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

5 Oculo-Respiratory Syndrome (ORS) நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள் பலரும் மீண்டும் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவது பாதுகாப்பானதே. அதேவேளை அவர்களும் முன்கூட்டியே ஒரு மருத்துவருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

## குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதற்கு சிறந்த பருவம் எது?

ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியே குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதற்குச் சிறந்த பருவம். ரொறன்ரோவில் குளிர்காய்ச்சல் பீடித்தல திசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை உச்சக் கட்டத்தை அடைவது வழக்கம்.

## எனக்கு குளிர்காய்ச்சல் ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

நன்கு ஓய்வெடுக்கவும். அதிக நீர்மம் அருந்தவும். அடிக்கடி கை கழுவவும். பிள்ளைகள், வயது முதிர்ந்தோர் அல்லது கடுஞ் சுகயீனமுற்றோர் எவருக்கும் உங்களிடமிருந்து குளிர்காய்ச்சல் தொற்றாவாறு விலகியிருக்கவும். நோ, வேதனை, காய்ச்சல் தணிக்கும் மருந்து பற்றி உங்கள் மருத்துவரிடம் கேட்டறியவும். (aspirin போன்ற) acetylsalicylic acid கொண்ட மருந்துவகைகளால் Reye's Syndrome என்னும் கோளாறு உண்டாகக் கூடும். அதனால் மூளையும் ஈரலும் சேதமடையக்கூடும். ஆதலால் அவற்றை சிறாருக்கு கொடுக்கக் கூடாது. குளிர் காய்ச்சல் பீடித்தமை வேளைக்கே கண்டறியப் பட்டால், உங்கள் மருத்துவர் சில குளிர்காய்ச்சல் தடுப்பு மருத்துவகைகளைக் குறித்துத் தரக்கூடும். அவை உங்கள் மன உலைவைத் தணித்து, சுகயீனத்தைக் குறுக்கக்கூடும்.

## நான் மேலதிக விபரங்களை எங்கே கண்டறியலாம்?

உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசிக்கவும். அல்லது ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தடுப்புமருந்து தகவல் இணைப்பை அழைக்கவும்: 416-392-1250

*- தமிழில்: மணி வேலுப்பிள்ளை*


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# நற்பொருள் நாற்பது

திருவள்ளு வர்பேர் திகழவ்வை நாலடியார்
பெருவாழ்வு நீதிகளைப் பெட்பாய் - திருவாய்
மலர்ந்தும் மனங்கொள்ளா மக்கள்தமக் கென்ன
கலந்தமருந் தீயும் கதி. (23)

வள்ளுவரை வாயார வாழ்த்திவரும் அன்பர்களும்
எள்ளளவும் ஏற்றவரின் இன்மொழியை - உள்ளமுடன்
வாழ்க்கையிலே பின்பற்றி வாழ்வதில்லை வாழ்வாரேல்
மீக்கொள்வர் வாழ்வில் விரைந்து. (24)
(மீக்கொள்வர் - உயர்வர்.)

கம்பருடன் காளமேகம் கச்சியப்பர் வில்லியென்பார்
அம்புவிக் கன்னார் அளித்தபெரும் - வம்பலரும்
நூல்கள் நுகரார் நுவலுகின்ற நுட்பங்கள்
சால்பறியா வாய்விண்ணர் தாம். (25)

யாதுமூ ரேயாவ ருங்கேளிர் என்றவடி
ஓதுவா ரதற்கப்பால் ஓரடியும் - காதாலும்
கேட்டறியார் கேட்டாலும் கிஞ்சித்தும் பூங்குன்றன்
பாட்டின் பொருளறியார் பார். (26)

ஆணவம் இல்லாத நம்பிக்கை ஆளாக்கும்
மாணுயர் காந்தி மனவுறுதி - காணின்
உலகே எதிர்த்தாலும் ஊன்றுமுழைப் பெல்லாம்
நலமாய் நடந்தேறும் நம்பு. (27)
(காந்தி - மகாத்மா காந்தி.)

மன்னிக்கும் நல்ல மனப்பான்மை உண்டானால்
கன்னிற்கும் நெஞ்சும் கரைந்துருகும் - துன்னற்(கு)
அரிதாவார் தாமும் அருந்தோழர் ஆவார்
பெரிதாகும் இந்தப் பிறப்பு. (28)
(கன்னிற்கும் - கல் நிற்கும். துன்னற்கு - நெருங்குதற்கு.)

பெண்பாலே பண்பு பெருமை அவளாலே
அன்பூறி ஆளும் அதனாலே - பெண்மைதனை
உண்ணேர் உயிர்போல ஓம்புதல் வேண்டுமதே
கண்ணுதலான் காட்டும் கடன். (29)

(கண்ணுதலான் ... - தமது இடப்பாகத்திலே பெண்ணை
வைத்துப் பேணும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் கற்பிக்கும் கடப்பாடு.)

நல்லொழுக்கம் இல்லார்க்கு நாகரிகம் இல்லைநலச்
சொல்லொழுக்கம் இல்லார்க்குச் சொற்பொழிவு - இல்லைவல்ல
ஐவரையும் வெல்லார்க்(கு) அரனார் அறிவில்லைப்
பொய்யருக்கும் இல்லைப் புகழ். (30)

வாழ்க்கை வளமாக வாழ்வதற்கே வையகத்தின்
ஆக்கம் அனைவருக்கும் ஆதலினால் - தேக்கிவைத்துச்
செல்வத்தைப் பேணாது தெய்வத்தால் வந்ததென்று
பல்லோர்க்கும் ஈகப் பகிர்ந்து. (31)



கவிஞர் வி. கந்தவனம்


**50**

**PARTY HALL**
**EVENT CENTRE**
**MEETING PLACE**

**AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய ***50*** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*

தொடர்புகளுக்கு: ***416.917.6883***



**TBC Toronto Business College**

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

**ONLINE STOCKS & OPTIONS TRADING**

**FREE SEMINAR**

**TUESDAY, JUNE 26TH, 2012, 7PM-9PM**
Learn from a Qualified &
Experienced Professional Instructor
*Separate Computer for each Participant
CALL NOW FOR MORE DETAILS

**STAY HOME, EARN MONEY**

**SECOND CAREER**

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005ம் ஆண்டுக்குப் பின் வேலை இழந்தவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்.
Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

**ODSP, WSIB Recepients & New Immigrants Welcome**

**ACCOUNTING & PAYROLL ADMINISTRATOR**
35 WEEKS



JOB OPPORTUNITIES
- Payroll Clerk
- Pay Clerk
- Payroll & Benefit Clerk
- Accounting & Payroll Clerk
- Accounts Assistant

**COMPUTERIZED ACCOUNTING DIPLOMA**
26 WEEKS

JOB OPPORTUNITIES
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Bookkeeper
- Payroll Clerk



**PERSONAL SUPPORT WORKER DIPLOMA**
26 WEEKS

- Hands on Training
- Excellent Instructors
- Well Equipped PSW Lab
- Accredited by NACC
- Good Salary
- 100% Co-op Placement



**MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA**
32 WEEKS



- Computer Skills
- Office Systems
- MO Administrative Procedure
- Medical Terminology
- Medical Billing
- Medical Transcription

**4465 Sheppard Avenue East, Suite 208**
**Toronto (Sheppard & Brimley)**
**info@tbcollege.com** **www.tbcollege.com**
Free Parking & Small Class Size
**416-291-5155**
Registered as a Private Career College under the the Private Career College Act 2005

# Universal Community Help

## 1. EXPRESS METRO HOUSING

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

## 2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

## 3. FOOT CARE CLINIC

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

## 9. தானம் - தர்மம் - தொண்டு

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

***10. Food handling certification certified food handle training.***

***11. UCH Legal Clinic***

## தொடர்புகளுக்கு: *416.744.3011*

***Office Hours -*** 11.00 Am to 4.00 Pm
*Monday to Sunday -* 416.744.4357
12.00pm to 10.00 pm
*Monday to Sunday -* 416.554.5040
9.00 am to 9.00 pm
*Special hot line*

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***


# ஒரு மாணவனும் ஒரு கோடி ஆசிரியர்களும்

## ஓடும் நீர் உறைவதில்லை 144

நமது வாழ்க்கையின் அதிபெரும்பகுதி யானது ஏதோ ஒன்றைத் தேடுவதிலேயே செலவிடப்படுகின்றது. இவ்வாறு செலவிடப் படும் எமது வாழ்க்கையின் பெரும்பகுதி எதைத்தேடுகிறோம் என்பதில் ஒரு தெளிவைக் கொண்டிராமல் செலவிடப்படு கின்றது. இதுவாக இருக்கும், அதுவாக இருக்கும் என்று அலைவதுதான் சாதாரண வாழ்வியலாகப் பெரும்பாலானவர்களுக்கு அமைந்து விடுகிறது. இதுவாகத்தான் இருக்கும் என்று உறுதிப்பாட்டுடன் ஒன்றைத்தேடுவதும் அது கிடைத்ததன் பிற்பாடு இதுவல்லவென்று வேறொன்றைத் தேடுவதுமாக நமது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் நமது வாழ்க்கையானது ஒரு புதிராக அமைந்து விடுகின்றது. அதாவது நமக்கே நமது வாழ்வு ஒரு புரியாத புதிராகிவிடுகின்றது.

நமது வாழ்க்கை ஒரு புரியாத புதிராக அமைவதற்குக் காரணம் நாம் புரியாத, புரியமுடியாத ஒன்றைப் புரிந்துவிட்டதான ஒரு நினைப்பில் வாழ்ந்து கொண்டிருப்பது தான். வாழ்க்கை ஒரு கல்வி என்பதை மறுத்து, வாழுகின்ற ஒவ்வொரு கணப்பொழுதும் நமது ஆசிரியர்கள் என்பதை நிராகரித்து இதுவரை நாம் எதை அறிந்துள்ளதாக நினைக்கின்றோமோ அதுவே இறுதியானது என்று முடிவு செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான மனநிலை ஒருவருக்கு உருவானதன் பின் அவரது வாழ்க்கை பல இடையூறுகளுக்கு வழிவகுப்பதுமல்லாமல் ஏற்படுகின்ற சோதனைகளும் வேதனை களும் அவரது மனோநிலையைப் பாதிப்பதாக அமைந்து விடுகின்றது. நடைமுறையில் வாழ்வியலில் நாம் ஒவ்வொருவரும் மாணவர்களே. நாம் வாழுகின்ற ஒவ்வொருகணமும் ஒவ்வொரு ஆசிரியர். இந்த ஒவ்வொரு கணமும் நமது சிந்தனை, செயல், சொல் என்பவற்றைத் தீர்மானிக்கின்ற காரணியாக அமைவதுடன் ஒரு கணப்பொழுது இன்னொரு கணப்பொழு தில் இருந்து வேறுபட்ட விடயங்களைக் கற்பிப்பதாகவும் அமைகின்றது.

நடைமுறையில் நாம் கற்றல் என்பதை கல்வி எனும் பெயரில் கல்விக்கூடங்கள் மூலமாகப் பெறுவதைக் குறிக்கின்றோம். ஆசிரியர், மாணவர் என்ற அமைப்பு முறையால் பெறப்படுவது என்று பொருள் கொள்கின்றோம். இந்தக் கல்வியானது இந்த அமைப்புமுறை முற்றுப் பெற்றதும் முடிவுக்குவந்து விடுகின்றது. ஆனால் வாழ்க்கை கல்வியானது நம் ஒவ்வொருவரும் வாழும் காலம்வரை நீடிக்கின்றது. இங்கே மாணவனாக ஒருவரும் ஆசிரியர்களாகப் பல கோடி கணப்பொழுதுகளும் அமைந்து விடுகின்றன. இந்தக் கணம் கால அளவால் வகைப்படுத்தப்பட்டு நிமிடம், மணித்தியாலம், நாள், வாரம், மாதம், வருடம் என வரையறுக்கப்படுகின்றது.



வாழ்க்கைக்கல்வியின் விசேட அம்சம் என்னவெனில் ஒவ்வொரு கணப்பொழுதிலும் ஒவ்வொரு மனிதனும் கற்கும் வாழ்க்கைப் பாடம் ஒருவரில் இருந்து மற்றவருக்கு வேறுபடுவது தான். வகுப்பறையில் ஆசிரியர் ஒருவரது கற்பித்தல் மூலம் கண்டறியப்படும் ஒரு பாடமானது ஒரே தகவலைப் பலருக்கு கொடுப்பது போல வாழ்க்கைப் பாடம் அதன் ஆசிரியரான நேரம் அல்லது காலத்தால் கொடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன் என்பது ஒவ்வொருவரது சிந்தனை, செயல், சொல் என்பன மற்றவர்களிடம் இருந்து வேறுபடுவதன் மூலம் அறியப்படுகின்றது. அதாவது ஒரே சூழலில் ஒரேவகையான நிகழ்வில் வெளிப்படுத்தப்படுகின்ற ஒருவிடயம் ஒவ்வொருவர் பார்வைக்கும் வித்தியாசமானதாக அமைவது இயல்பாகவே அமைந்து விடுகின்றது.

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்பதும் ஒவ்வொரு மனிதனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையில் நமது வாழ்க்கை நகர்த்தப்படுகின்றது என்பதும் நிதர்சனமானதே. இதனால் தான் தனித்துவமான ஒரு மனிதன் தனித்துவாழ முடிவதில்லை. இங்கு தனித்துவாழ முடியாமைக்கான அடிப்படைக் காரணியாக அமைவது நம் ஒவ்வொருவருக்கும் மற்றவர் களது அனுபவக்கல்வியும் - வாழ்க்கைக் கல்வியின் பங்களிப்புத் தேவைப்படுவது தான். இதனால்தான் நாம் ஒவ்வொருவரும் தனித்தும் ஒருமித்தும் மாணவர்களாகி விடுகின்றோம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

வாழ்க்கைக் கல்வியில் நாம் எவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது மிக இலகுவாக வரையறுக்கப்படக் கூடியதல்ல. ஏனெனில் நாம் வாழும் ஒவ்வொரு கணப்பொழுதும் நமது வாழ்வியல் எதிர்பார்ப்புகளுக்கு வழிவகுப்பதாக நாம் எண்ணுகிறோம். இந்த எதிர்பார்ப்புகள் நமது கடந்த கால வாழ்வியல் அனுபவங்களினால் அல்லது நாம் அனுபவசாலிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்ட சிலரின் வாழ்வியல் விடயங்களினால் உருவாக்கப்படுகின்றது. எனினும் இந்த எதிர்பார்ப்புகள் மாற்றத்திற்குட் பட்ட காரணிகளால் எதிர்காலத்தில் மாற்றங்கள் இருக்கமாட்டா என்ற எதிர்பார்ப்பின் மூலம் உருவாக்கப்படுவதனால் அந்த எதிர்பார்ப்புகளின் விளைவு எதிர்மாறாக அமைந்து விடுவதைத் தடுக்க முடிவதில்லை. இவ்வாறு எதிர்மாறான விளைவுகளுக்குக் காரணமாக அமைவது எதிர்கால விளைவுகளை நிகழ்கால வாழ்க்கைக் கல்வியினால் வரையறுத்து இதுதான் வாழ்க்கையின் அடிப்படை என்ற மனோபாவத்தைக் கடைப்பிடிப்பதாகும்.

நாம் வாழும் காலம் நமக்குக் கற்பிக்கும் பாடங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்துவப் படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வாறு தனித்துவப்படுத்துவதனால் தான் வாழ்க்கைக் கல்வியின் அனுபவசாலிகள் ஒவ்வொருவரது கற்பித்தலும் மற்றவர்களில் இருந்து வேறுபடுகின்றது. இந்த வாழ்க்கைக் கல்வியின் அனுபவ ஆசிரியர்கள் வார்த்தை களால் மற்றவர்களுக்கும் கற்பிப்பதைவிட வாழ்வியல்முறையால் கற்பிக்கும் விடயங்களே மிகச் சிறப்புடையனவாக அமைகின்றன. இந்தச் சிறப்பு மிக்க விடயங்கள் வெளிச்சவீடு போல் எல்லோருக் கும் பயன்படக்கூடியதாக இருப்பினும் கரையைத் தேடாத படகுகள் போல் வாழ்வியலில் ஒரு குறிக்கோள் இல்லாமல், வாழ்வின் அடிப்படையான நோக்கம் என்ன என்பதில் தெளிவற்ற நிலையில் இருப்பவர்களுக்கு உதவப்போவதில்லை.

மாணவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் வரையறையில்லாத கணப்பொழுதுகள் ஆசிரியர்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது மிகத் தெளிவாக உணரப்பட வேண்டியதே. காலம் என்னும் ஆசிரியனின் சிறப்புமிக்க கற்பித்தலானது மனிதனாகிய மாணவனுக்கு மறுக்கப்படுவதில்லை. இன்னொரு வகையில் கூறுவதாயின் காலத்தின் கற்பித்தலை மனிதனாகிய மாணவன் மறுக்கமுடியாது. இதனால்தான் புத்திசாலித்தனமாக ஒவ்வொரு கணப்பொழுதும் கற்பிக்கும் பாடத்தைச் சிறப்பாக உணர்ந்து கொள்ளும் மனிதன் அதற்கேற்ற சிறப்பான வாழ்க்கை யையும், காலத்தின் கற்கையை உதாசீனம் செய்யும் மாணவர்கள் சிக்கலானதும் சிறப்பற்றதுமான வாழ்க்கையை வலிந்து அழைத்துக் கொள்கிறார்கள்.

நாம் வாழும் கால அளவுகள் கணப்பொழுது களாகக் கணிக்கப்பட்டும் பலகோடிக் கணக்கான கணப்பொழுதுகளாக அமைந்து விடுகின்றன. இந்தப் பலகோடி கணப் பொழுதுகள் பலகோடி ஆசிரியர்களாக நமக்கும் வாழ்வியல் கல்வியைப் போதிக்கின்றன. இவ்வாறு போதிக்கப்படும் வாழ்க்கைக்கல்வியின் அம்சங்கள் எண்ணிக்கையால் வரையறுக்கப்பட முடியாதவை. அதாவது நாம் பெற்றுக் கொள்ளுகின்ற அனுபவக்கல்வியானது ஒரு வரையறைக்கும் உட்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் நேற்றில் இருந்து இன்று (Today) வேறுபடுவதும் இன்றில் இருந்து நாளை (Tomorrow) வேறுபடுவதும் இதற்கும் அடிப்படையாகின்றது.

KG Master-kgmaster@rogers.com
www.kgmaster.com

ஒவ்வொருவரும் மாணவர்கள் என்பதும் கோடிக்கணக்கான கணப்பொழுதுகள் வாழ்க்கைக்கல்வியின் ஆசிரியர்கள் என்பதும் அந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும் பாடங்கள் அனுபவக்கல்வி என்பதும், அந்த சுயஅனுபவக்கல்வி ஆளுக்காள் வேறுபடும் என்பதும் இதுவரை யில் நாம் உணர்ந்து கொண்டோம். இவ்வாறு வரையறையற்றுச் செல்லும் இந்த செயற்பாட்டிலிருந்து குறிப்பாகச் சிலவற்றைத் தெரிவு செய்வதன் மூலம் ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறைகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதாவது சுய அனுபவத்தின் மூலமும் பிறர் அனுபவத்தின் மூலமும் நாம் தெரிவு செய்யும் ஒரு சில முக்கிய விடயங்கள் எமது வாழ்க்கையின் சிறப்பையோ அல்லது சிறப்பின்மையையோ தீர்மானிக்கின்றது. இதனால்தான் நமது தெரிவுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதில் நாம் மிகமிக அவதானமாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை ஏதோ ஒன்றிற்காகச் செலவு செய்கின்றான். மிகச்சிலர் ஆன்மீகத்திலும் மிகுதியானோர் ஆதாயத்திலும் செலவு செய்கிறார்கள். ஆன்மீக அனுபவம் சுய அனுபவமாதலால்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹாராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# வெகுளாமை (Calm) - 16

வெகுளாமை கொண்டு வாழ்வதற்குத் தியானப் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக விருக்கும் என்று இந்தத் தொடர்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். இது பற்றிச் சற்று விரிவாக ஆராய்வோம். தியானம் என்பது மனத்தையும் உடலையும் ஓய்வுநிலைக்குக் கொண்டுவருவதாகும். இவ்வாறான ஓய்வு முறை மன அழுத்தம் சம்பந்தப்பட்ட பழக்கங்களுக்கு மாற்றுச் சிகிச்சை முறையாகக் கருதப்படுகின்றது. நாளாந்தம் எமது மனம் அடையும் குழப்பங்களுக்குத் தியானம் தீர்வைக் கொடுக்கும். அத்துடன் எங்கள் எண்ணங்களை நெறிப்படுத்தி உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டில் வைத்தி ருக்க உதவும். மேலும் உடலிலும், மனதிலும் அமைதி ஏற்பட்டு வெகுளாமை கொண்டிருக்க உதவும்.

நாங்கள் எதிர்பார்த்தவாறு விடயங்கள் நடை-பெறாத நேரங்களில் கோபம் அடைந்து அந்தக் கோபத்தைக் காரணமின்றி எல்லாரிடமும் காட்ட முற்படுகின்றோம். எங்களின் மனம் குழப்பம் அடைந்து இருக்கும் பொழுது மற்றையவர்களுடன் தொடர்பைக் குறைத்து எங்களுக்கு நாங்களே ஆறுதல் செய்து கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் தியானம் செய்தால் எமது வெகுளாமை சீராக இருக்க உதவும். சுவாசப் பயிற்சிகள், யோகா, பிரார்த்தனை ஆகியவை யும் நல்ல பலனைக் கொடுக்கும். எல்லா மதத்திலும் தியானம் ஒரு அடிப்படையான பிரார்த்தனை வடிவமாகக் கொள்ளப்படு கின்றது. தியானப் பயிற்சியினை மாற்று வைத்திய முறையாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தியானத்தினால் பழக்கங்கள் மூலம் ஏற்படும் விடயங்களுக்குத் தீர்வாக அமைவதோடு நோய்களும் நீங்குகின்றன.

வெகுவிரைவில் விளம்பரத்தில்
அகணி எழுதும்
**“காலத்தோடு வளரும் கணினிகள்”**
தொடர்கட்டுரை

தியானத்தின் மூலம் எதிர்மறையான உணர்ச்சிகளைக் களைவதற்கு முதலில் எண்ணங்களில் ஏற்படும் மாற்றத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். எண்ணங்களுக்கென ஒரு வாழ்க்கை வட்டம் உள்ளது. எண்ணங்கள் தோன்றும். சில காலம் இருந்து பின்னர் மறைந்து விடும். நேர் மறையான, எதிர் மறையான மற்றும் நடுநிலையானவென மூன்று வகையான எண்ணங்கள் உண்டு. எதிர்மறையான எண்ணங்கள் எங்களிடம் தங்கியிருக்கக் கூடாது. கோபம் வருவதற்கும் எதிர்மறையான எண்ணங்கள் காரணமாகின்றன. கோபம் முதலில் எண்ணங்களாகத் தோன்றிப் பின்பு உணர்ச்சிகளாக மாறும். இவ்வாறு எதிர்மறையான எண்ணங்களாகத் தோன்றும் பொழுது (உணர்ச்சிகளாக மாறுவதற்கு முன்பாக) அவற்றை நீக்குவது சுலபம். தியானப் பயிற்சியால் இதனைச் செய்ய முடியும்.



அமைதியான ஒரு இடத்தைத் தெரிவுசெய்து வெளிச்சமில்லாத இடத்தில் நேராக இருந்து தியானம் செய்ய வேண்டும். கண்ணை மூடி நீண்ட சுவாசப் பயிற்சி செய்யும் பொழுது எங்களில் ஏற்படும் மாற்றத்தை நாங்கள் உணர்ந்து கொள்ளலாம். சிறிது நேரத்தில் சுவாசம், இதயத்துடிப்பு என்பவை குறைந்து மனதில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படும். நாங்கள் தினமும் தியானம் செய்து வரும்பொழுது பொறுமை கொண்டவர்களாக மாறிவிடுவோம். இதனால் எங்களால் வெகுளாமை கொண்டு வாழ முடியும். தியானம் எங்களை அறிவுபூர்வமாகச் சிந்திக்கச் செய்கின்றது.

கோபத்தைத் தவிர்ப்பதற்காகத் தியானம் செய்யும் பொழுது, பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எதைப்பற்றி கோபம் கொள்கின்றீர்கள் அல்லது யாருடன் கோபம் கொள்கின்றீர்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்காது உள்ளே உள்ள கோப உணர்வில் மட்டும் கவனம் செலுத்துதல் : கோபம் உடலில் மாற்றங்களை ஏற்படுத்துவதால், உடலில் எங்கு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கவனித்தல்: மூச்சை உள்ளே இழுக்கும் பொழுது கோப உணர்வைச் சந்திக்க முயற்சித்தல்: தினமும் 15 நிமிடங்களுக்குத் தியானம் செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். காலையில், பகலில் அல்லது மாலையில் தியானத்தைச் செய்யலாம். தியானம் வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு உதவுவதோடு உடலில் உள்ள சுகயீனங்கள் நீங்கவும் உதவும். நோய்கள் அணுகாது சுகத்தோடு வாழ்வதற்கும் தியானம் உதவும். தியானத்துடன் யோகாவும் செய்து வருவது வெகுளாமை கொண்டு வாழ்வதற்குப் பெரிதும் உதவும். ஆன்மீக வழிகாட்டியான கிருஸ்ணமூர்த்தி நாங்கள் சந்திக்கும் பல்வேறு குழப்பங்களின் மத்தியில் தியானம் எங்களை மிகவும் அமைதியாக வாழ உதவுகின்றது' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் தொடர்ச்சியாக மற்றவர்களின் செயற்பாடுகளில் குறைகளைக் காண்பதால் எங்களின் மனத்தில் பாதிப்பு ஏற்படுவதோடு கோபம் போன்ற எதிர்மறையான உணர்ச்சிகளும் உருவாகும். இதனை ஒரு ஆய்வுத்தகவல் உறுதி செய்கின்றது (Science Daily Aug. 2011). கொன்கோடியாப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் கார்ஸ்ரன் வுரோச் இந்த ஆய்வினைச் செய்திருந்தார். எங்களுக்குப் பிரச்சினைகள் வரும்பொழுது அதற்கு மற்றவர்களே காரணமெனக் கூறிக்கொள்ளும் இயல்பு பொதுவானதாகப் பலரிடமும் காணப்படுகின்றது. இந்தப் பழக்கத்தை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுதல் வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு மிகவும் முக்கியமானதாகும்.

வெகுளாமை கொண்டு வாழ்வதற்கான பல்வேறு வழிமுறைகளை இந்தத் தொடர் கட்டுரையில் ஆராய்ந்து வந்திருக்கின்றோம். இந்த வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி நாங்கள் அகமாற்றம் (Inner Transformation) பெற்று வரும்பொழுது கோபம் உட்படப் பல்வேறு எதிர்மறையான உணர்ச்சிகளையும் நெறிப்படுத்தி வாழும் மனிதர்களாக மாறிவிடுவோம் எனத்திடமாக நம்பலாம். கனடாவில் அண்மையில் நடை-பெற்ற ஒரு கொலைச் சம்பவத்திலும் கொலையாளியின் எல்லை மீறிய கோப உணர்ச்சியே காரணமெனக் கூறப்படுகின்றது. நாளாந்தம் எங்கள் மனதை வாட்டும் குற்றச்செயல் களிலும், வீட்டு வன்முறைகளிலும் கோபம் முக்கிய காரண-மியாக அமைந்திருப்பதைக் கண்டு கொள்கின்றோம். நாங்களும், எங்களைச் சூழ உள்ளவர்களும் கோபத்தினை நெறிப்படுத்தி வெகுளாமை கொண்டு வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொழுதே வன்முறையற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும்.

அண்மையில் இணையத்தளத்தில் ஒரு உண்மைக்கதையை வாசித்தேன். அந்தக் கதையில் தனது மகனைக் கொலை செய்த ஒரு இளைஞனை மன்னித்து அந்த இளைஞனை அரவணைத்த தாயாரின் மன்னிக்கும் மனப்பாங்கை அறிந்து வியந்தேன். மேலும் அந்த இளைஞன் தனது மகனைக் கொலை செய்த குற்றத்திற்காக சிறையில் வாடப்போகின்றானே, தன்னைப் போல் அந்த இளைஞனைப் பெற்ற தாயும் வருந்தப் போகின்றாளே என்றெல்லாம் கவலைப்பட்டிருக்கின்றார். இந்த உண்மைக் கதையைப் பார்க்கும் பொழுது நாங்கள் எதனையும் மன்னித்து விடலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. மன்னிக்கும் மனப்பாங்கு வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு உதவும் செயற்பாடாகும். வெகுளாமை பற்றிய இந்தத் தொடர்கட்டுரையில் நிறைய விடயங்களை ஆராய்ந்திருக்கின்றோம். இந்தக் கட்டுரை பயனுள்ளதாக அமைந்திருக்கும் என நம்புகின்றேன். இந்தத் தொடர்கட்டுரை பற்றிய உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள்.

அன்பான வாசகர்களே!
அடுத்த இதழில்
மீண்டும் சந்திப்போம்.
தொடரும்...



**- அகணி -**
authorakani@yahoo.com

**Professional Pest Control**
*Elimination of Roaches & Mice*
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997



- Cockroaches
- Rats & Mice
- Wasps & bees
- Birds
- Ants & Spiders

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# For All Your Real Estate & Mortgage Needs
# Buying or Selling? Meet a Realty Expert!

- " Buyers Have a 1 in 3 Chance of Receiving Lawn Mowing or Snow Removal Services for Up to One Year!
- "List Your Property with me for the top dollar and be finance free. I provide FREE professional staging, photography, virtual tour and flexible low commission.
- With my 18 years of Real Estate and Mortgage experience I am confident that i will provide and qualify you with your Dream home.



## Nila Ravindran
**Sales Representative**

## 647-836-6502

Pleasant Service with
**LOWEST COMMISSIOM**
Starting from 1%

என்னிடம் வீடு
வாங்குபவர்களுக்கு ஐஸ் வழித்தல்,
அல்லது புல்லுவெட்டுதல் ஒரு வருடத்திற்கு
**இலவசம்**

RE/MAX CROSSROADS REALTY INC., BROKERAGE
1055 Mcnicoll Avenue, Toronto E05, ON M1W3W6
Office:416-491-4002Cell: (647) 836-6502 Fax(416)756-1267
**"Your Referrals Are The Sincerest Compliment I can Receive"**




**HWY 7/ Humber College**
**Condo Apt.**
**BR 1, WR 1**




**Victoria Park / Eglinton**
Condo Town House 3 Storey
**BR 3, WR 3**




**Yonge / King**
**Condo Apt.**
**BR 1+1, WR 2**




**Johnson / Grove**
**Deteched 2 Storey**
**BR 4, WR 3**




**Finch / Markham**
**Semi Deteched Bungalow**
**BR 3+3, WR 3**




**9th Line / 16th Ave**
**Condo Town House**
**BR 2, WR 2**




**Jays / Front**
**Condo Apt**
**BR 1+1, WR 1**




**Markham / Painted Post**
**Deteched Bungalow**
**BR 3+2, WR 2**




**9th Line / Hoover Park**
**Semi Deteched 2 Storey**
**BR 3, WR 3**




**Taunton / Westney**
**Deteched 2 Storey**
**BR 4, WR 4**




**McCowan / 16th Avenue**
**Link 2 Storey**
**BR 4, WR 3**




**Yonge /19th sdrd**
**Detached 2 Storey**
**BR 3, WR 3**




**Leslie /Major Mac.**
**Deteched 2 Storey**
**BR 4, WR 3**




**ElginMills / Woodbine by Pass**
**Deteched 2 Storey**
**BR 4, WR 4**




**Warden/ Ellesmere**
**Deteched Bungalow**
**BR 3+3, WR 3**




**Brock Rd / Finch**
**Deteched 2 Storey**
**BR 4+1, WR 4**

# மாரடைப்பு இனி இல்லை

## NO MORE HEART ATTACK

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

நமது உடலில் மிக சிறிய உறுப்புத்தான் என்றாலும் நுணுக்கமானதும் மிக முக்கியமான உறுப்பு எது என்றால் சந்தேகமே இல்லாமல் இதயம் தான் என்று உறுதியாகச் சொல்லிவிடலாம். இந்த இதயம் இயங்குவதில் சிறிதேனும் கோளாறு ஏற்பட்டாலும் கூட உடல் நலம் பெருமளவில் பாதிக்கப்படும்.


'எனக்கென்னவோ நெஞ்சு படபடவென்று அடிக்கிறது', 'எனக்குத் திடீரென்று கை கால் எல்லாம் நடுங்குது' என்று யாரேனும் சொன்னால் அவரின் இதயத்தின் இயக்கத்தில் கோளாறு ஏற்பட்டிருக்கின்றது என்று பொருள். இது பெரும்பாலும் பெண்களைவிட ஆண்களையே தாக்குகிறது. இது நடைமுறையிலும் நாம் கண்டறிந்த உண்மையாகும். இதயநோய் என்பது பல வகைப்படும். அவை எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியான சிகிக்சைகளை மேற்கொள்ளக்கூடாது. இதயத்திற்கு ஏற்பட்டிருப்பது எந்தவகையான பாதிப்பு என்பதை நன்கு அறிந்த பின்பே அதற்கேற்ற சிகிச்சை முறைகளைக் கையாள வேண்டும்.

ஒருவேளை இதயத்திற்கு போதிய ஓய்வு கிடைக்கவில்லை என்பது தான் காரணமாக இருந்தால் நல்ல இதமான படுக்கையில் படுத்து ஓய்வெடுப்பது சிறந்தது. போதிய உறக்கமும் தேவை. மனக்கவலைகள் ஏதும் இருந்தால் உறக்கமும் வராது. இதயமும் சீரான நிலையை அடையாது. மூளைக்கு அதிகமான வேலை கொடுப்பவர்களுக்கும், அதிகமான உடல் உழைப்பு இல்லாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும் இதய நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புண்டு என்பது தவறான கருத்தாகும். அப்படிப்பட்டவர்கள் சிறிது தூரம் நடப்பது, கைகள், கால்களை அசைத்தபடியிருப்பது, தலையை இருபுறமும் அசைத்துக் கொண்டிருப்பது ஆகியவற்றின் மூலமாகக் கூட இரத்த ஓட்டம் சீராகி இதய பாதிப்பைக் குணப்படுத்தும். அத்துடன் காலையில் வெறும் வயிற்றோடு நடைப்பயிற்சி செய்தல், அதிர்ச்சி தரக்கூடிய செய்திகளைக் கேட்காமல் இருத்தல், உணர்ச்சிகரமாக சில செயல்களில் ஈடுபடுவது ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

துளசி இலையை ஒரு கைபிடியளவு எடுத்து நன்றாகச் சாறு பிழிந்து அத்துடன் சிறிதளவு வெந்நீர், தேன் என்பவற்றைக் கலந்து காலை, மாலை தினமும் அருந்தி வந்தால் இதய நோய் குணமாகும். தேனீர், கோப்பி போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. அத்துடன் காலையில் சிறிதளவு எலுமிச்சம்பழச்சாற்றை இஞ்சிச்சாற்றுடன் கலந்து ஒரு டம்ளர் சுத்தமான நீருடன் பருகி வர இதயம் புத்துணர்ச்சியடையும்.

### இதயத்தை இதமாக்கும் மூச்சுப்பயிற்சி

முதலில் இதயத்தை அமைதிப்படுத்தும் சுவாசப்பயிற்சியில் சரசுவாசம் தான் மிகவும் எளிமையானது. ஆரம்பத்தில் வலதுகை கட்டை விரலால் வலது நாசியை மூடியபடி இடது நாசி வழியாக காற்றினை மெதுவாக உள்ளிழுத்து பின் வலது மோதிர விரலால் இடது நாசியை மூடியபடி வலது நாசி வழியாக மிகவும் மெதுவாகவும் சம நீராகவும் இழுத்த காற்றை வெளிவிட வேண்டும். பின் அதே வலது மூக்கின் வழியாக உள்ளிழுத்த இடது மூக்கு வழியாக வெளிவிடவேண்டும். இவ்வாறு 7முதல் 10 சுற்றுகள் தினமும் காலையிலும்



மாலையிலும் சில நாட்கள் செய்துவர இதய வலிகள் படபடப்பு இளைப்பு போன்றவை நீங்கும்.

### இரத்த குழாய்களின் அடைப்பு நீங்க

உயர் இரத்த அழுத்தம், உள்ளவர்களுக்கு (High Blood Pressure) இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவது இயல்பானதே. இந்த அடைப்பானது உயர் நிலை அடையும்போது அதன் காரணமாக மூளைக்குச் செல்லும் ரத்தம் தடைப்படும் போது மூளை தனது செயலை இழக்கும். இந்த நிலையில் மரணம் சம்பவிக்கலாம். அல்லது நினைவினை இழக்கும் நிலை ஏற்படலாம். எனவே மேற்கூறப்பட்ட அடைப்பினை நீக்கி இருதயத்திற்குச் செல்லும் ரத்த நாளங்களைத் தூய்மைப்படுத்தி ரத்த ஓட்டத்தை சீராக்குதல் இன்றியமையாததாகும்.

பொருத்தமானதும் தான் கபாலபாதி மூச்சுக்கிரிகை முறைகள் இது இதயம் முதலான உடலின் முக்கிய உறுப்புகளை மூளை, நுரையீரல், சிறுநீரகங்கள் கல்லீரல் போன்றவற்றுக்குரிய ரத்த ஓட்டத்தை சீர் செய்து அதிலுள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றுகிறது. அத்துடன் இதயத்த துடிப்பை சமநிலையில் வைத்திருக்கப் பெரிதும் உதவுகிறது.

### செய்முறை

விரிப்பில் முள்ளந்தண்டானது நேராக இருக்கும்படி உட்கார்ந்து கொண்டு இரண்டு மூக்கின் வழியாக காற்றினை வேகமாகத் தொடர்ந்து 10 முதல் 20 தடவைகள் வினாடிக்கு ஒருமுறை என்ற வேகத்தில் உதற வேண்டும். பின் சில வினாடிகள் ஓய்வு எடுத்த பின் திரும்பவும் அதே மாதிரி நான்கு அல்லது ஐந்து சுற்றுகள் செய்ய வேண்டும். இதனை காலையிலும், மாலையிலும் சில நாட்கள் தொடர்ந்து பயிற்சியழித்து வந்தால் இருதயத்தின் இயக்கம் செம்மைப்படுத்தப்படும். இந்தப் பயிற்சியினை பிழையாகச் செய்தால் தீங்கு ஏதேனும் ஏற்படக்கூடுமாகையால் ஆரம்பத்தில் ஒரு யோகா நிபுணரின் வழிகாட்டலில் பயில வேண்டியது அவசியம்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721


# ஒரு மாணவனும்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

இறக்கத்திற்கும் அத்திவாரமாகின்றது.

இவர்களது வாழ்க்கைக் கல்வியானது காலத்தால் கற்பிக்கப்படுவதில்லை. மாறாக ஆதாயவாதிகள் கணத்துக்குக் கணம் காலத்தால் கற்பிக்கப்படுகிறார்கள். இந்த சாதாரண சராசரி மனிதனாகிய ஆதாயவாதியின் இந்த ஆதாய இயல்புதான் அவனது வாழ்வின் ஏற்றத்திற்கும்

வாழ்க்கைக்கல்வியின் கற்பித்தல்கள் வரையறையற்றதாக இருப்பினும் ஒரு சாதாரண மனிதனின் சந்தோசமான வாழ்வுக்கு அடிப்படைகளாக அமையவேண்டியவை எவை எனக் கணிப்பீடு ஒன்றைச் செய்வோமாயின் எண்ணிலடங்காத விடயங்களை நாம் முன்வைப்பதாக அமையும். ஆனால் காலத்தின் கற்பித்தலின் மூலமும், நமது அனுபவத்தின் மூலமும், பிறரது அனுபவத்தின் மூலமும் மிக முக்கியமான விடயங்கள் என மூன்று விடயங்களைக் குறிப்பிடலாம். அதாவது ஒவ்வொருமனிதனதும் உயர்வுக்கும் - தாழ்வுக்கும், புகழ்ச்சிக்கும் - இகழ்ச்சிக்கும், இன்பத்துக்கும் - துன்பத்துக்கும் அடிப்படையாக அமைகின்றவைதான் இந்த மூன்று விடயங்கள். அதாவது வாழ்வியலின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு மனிதனும் இயல்பாகவே ஆசைப்படுகின்ற அல்லது விருப்பப்படுகின்ற இவை தான் ஆனந்தத்தின் உச்சம் என்ற ஒரு தவறான எண்ணத்தைக் கொடுக்கின்ற விடயங்களாக அமைகின்றன. அவை காமம், செல்வம், புகழ் என்பனவாகும். உண்மையில் இந்த மூன்று விடயங்களையும் சிறப்பாக நெறிப்படுத்தி வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் புனிதனாகின்றான். மாறாக இந்த மூன்று விடயங்களிலும் நெறிகெட்டு சுயநலத்திற்காகத் தன்னை அடிமைப்படுத்திய ஒவ்வொரு மனிதனும் அதற்கான தண்டணையை அவனே கொடுத்து அவனே அனுபவிக்கின்றான். காமம், செல்வம், புகழ் என்ற இந்த மூன்று விடயங்களில் ஒரு மனிதனின் தவறான கையாடலுக்குக் கிடைக்கும் சுயதண்டனை என்பது முடிவற்றது. பிறரது தண்டனைகளுக்கு ஓர் எல்லையுண்டு. ஆனால் சுய தண்டனைகளுக்கோ எல்லையில்லை. தன்னைத் தானே தண்டிக்கும் இந்த இயல்பு தண்டனை கொடுத்தாயிற்றே நிறுத்திவிடுவோம் என்று தண்டனைக்கு முற்றுப்புள்ளிவைப்பதில்லை.

ஆம் வாசகர்ளே!

நமது வாழ்க்கைக் கல்வியின் சிறப்பம்சம் என்னவெனில் மாணவன் ஒருவன் ஆசிரியர்கள் பலகோடி. நாம் வாழும் ஒவ்வொரு கணப்பொழுதும் ஒவ்வொரு ஆசிரியர். இந்தக் காலம் எனும் சிறப்பான



ஆசிரியனின் கற்பித்தலில் நாம் பெறுகின்ற ஒவ்வொரு அனுபவமும் நமது வாழ்வைச் சிறப்பிப்பதற்காகவே கொடுக்கப்படுகிறது. எனவே காமம், செல்வம், புகழ் என்பவற்றை சீரானதும், சிறப்புமிக்கதும் மற்றவர்களது முன்னேற்றத்திற்கு வழி அமைப்பதாகவும் நெறிப்படுத்துவதே மாணவனாகிய மனிதனின் மறுக்கமுடியாத கடமையாகும்.

## ஆலய சிரமதானப் பணி
## கனடா ஸ்ரீ ஐயப்ப ஆலயம்

கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் பொதுச்சிரமதானப்பணி ஒன்றினைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐயப்ப பக்த அடியார்களே எங்களது பொதுச் சொத்தாக உள்ள ஐயப்ப கோவிலின் திருவிழாக்கள் தொடங்க இருப்பதனால் ஆலயத்தின் வெளி வீதிப் பகுதிகளைச் சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஐயப்ப பக்தகோடிகளே எதிர்வரும் யூன் 16, 2012 (16-06-2012) அன்று காலை 9.00 மணிக்கு ஐயப்ப ஆலய வளவில் ஆரம்பமாகவுள்ள சிரமதான கோவிற் பணியில் கனடா ஊர்ச்சங்கங்கள், நலன் விரும்பிகள் பொதுமக்கள் அனைவரையும் பங்குகொண்டு உதவுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: உங்களது வீட்டில் பாவனைக்குள்ள மண்வெட்டி குப்பைவாரி போன்றனவற்றை சிரமதானத்திற்கு வரும்போது எடுத்துவருமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

கௌரவ ஆலயப்பரிபாலனசபை
கனடா ஸ்ரீ ஐயப்ப ஆலயம், 635 மிடில்பீல் வீதி

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

## GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

இத்துறையில் பல வருட அனுபவமிக்க **ARU KRISH** ஜை

இன்றே அழையுங்கள்

**இலவச ஆலோசனைகளுக்கு**

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

# (416) 556-9287

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# இவ்வருடம் 'ஃ விருது' குறமகளுக்கு!

*'ஆறுமுகநாவலர் முதல் மனுஸ்ய புத்திரன் வரை எல்லா எழுத்தாளர்களையும் மறு ஆய்வு செய்ய வேண்டும்' - குறமகள்*

மேற்கண்டவாறு ரொரண்ரோவில் நடைபெற்ற 27வது பெண்கள் சந்திப்பில் குறமகள் தெரிவித்திருந்தார். மனுஸ்யபுத்திரன் குஷ்பு விவாகரத்தில் பெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறியதற்கு மேலும் இச்சந்திப்பில் கண்டனம் தெரிவித்திருந்தார். கைலாசபதி போன்ற விமர்சக மேதைகள் புகழ்ந்த ஆறுமுக நாவலரையே குறமகள் விமர்சித்துள்ளார். 'கிறிஸ்தவ அம்மையார்கள் வீடு வீடாகச் சென்று பெண்களோடு உறவாடுவதைக் கண்ட ஆறுமுகநாவலர் அவர்களும், முன்பு இருந்ததை விட மோசமான நிலையில் பெண்களுக்கான விதிமுறைகளைக் கவனத்திற்கு எடுத்தார். குடும்பத்துக்கான பொறுப்புக்களை மாத்திரமல்ல அவளது உணர்வுகளை சிதறடிக்கும் வகையில் கட்டுப்பாடுகளையும் எழுதிவைத்தார். சாத-ியத்தைவிடக் கடும்போக்காகப் பெண்களை ஒடுக்கும் வகைகளை எடுத்தியம்பினார்.' என தனது 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி' ஓர் ஆய்வு என்ற நூலில் தெரிவித்துள்ளார். பெண்கள் மறுவாழ்விற்காக தனது எழுத்துக்களை சமர்ப்பித்த குறமகளுக்கு இவ்வருடம் '∴ விருது' வழங்கப்பட்டுள்ளதாக சுயாதீன கலை திரைப்பட கழகத்தின் நிறைவேற்று இயக்குனர் திரு. த. சிவசதாசன் அறிவ-ித்துள்ளார்.

'குறமகள், 'பெண்ணியம், மனிதநேயத்திற்குப் புதிய பொலிவும் அர்த்தமும் ஆழமும் பாய்ச்சுதல் வேண்டும்'. இதனைத் துல்லியமாக உணர்ந்தவர்' என அந்தனி ஜீவா தெரிவித்துள்ளார். (புதிய பார்வை - தை 16-31 2008) 'பயந்தாங்கொள்ளிகளாக வீட்டில் முடங்கிக் கல்வியறிவற்று உலக அனுபவமின்றி வாழ்ந்த இவர்கள் ஒரு நூற்றாண்டு காலத்துள் எப்படி மாறினார்கள், இவர்களின் விலங்கொடித்தவர்கள் யார்?, கல்வியறிவூட்டியவர்கள் யார்?, தன்னம்பிக்கையை வளர்த்தவர்கள் யார்? இவ் வினாக்களுக்கு விடைதேடும் முயற்சியாக 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி' ஓர் ஆய்வு என்ற தனது நூலின் முன்னுரையில் குறமகள் குறிப்பிடுகின்றார். இந்த நூல் ஒன்றே இவரது பெண்கள் சமத்துவத்துக்கான ஒரு சிறந்த பங்களிப்பாக குறிப்பிடலாம். இந்நூலில் தரவுகளின் பின்னணி கொடுக்கப்பட்டிருப்பின் தமிழில் பெண்கள் பற்றி வெளிவந்த ஒரு சிறந்த நூல் வரிசையில் இடம் பெற்றிருக்கும். இலங்கை சட்டசபையின் முதலாவது உறுப்பினர் குமாரசாமியின் மனைவிகூட எழுத்தறிவற்றவர் என்ற அதிர்ச்சியான தகவலும் இந்நூலில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றை விட பெண்கள் ஒடுக்கு முறை பற்றிய பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட



சிறுகதைகளையும் எழுதியுள்ளார். ஏழு சிறுகதை தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

'இலங்கையில் வெளிவந்த 'தமிழ்மகள்' (1934 ஆண்டு) பெண்கள் சஞ்சிகையின் ஆசிரியரான மங்கம்மாள் என்பவரைப் பற்றி ஆய்வுக் கட்டுரையை குறமகள் எழுதியுள்ளார். இலங்கையில் பெண்கள் அமைப்புக்கள் எதுவும் இச்சஞ்சிகையைப் பற்றியோ அதன் ஆசிரியரைப் பற்றியோ எதுவும் குறிப்பிட வில்லை. இவ் ஆய்வு பெண்களின் ஆரம்ப நிலை பற்றி பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது' என கலாநிதி பார்வதி கந்தசாமி தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவரது இயற் பெயர் வள்ளிநாயகி இராமலிங்கம். பெண்கள் பத்தாம் வகுப்புடன் திருமணம் செய்த காலத்தில் இவர் இந்தியா சென்று பட்டப் படிப்பை முடித்தார். பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவியாக 'நாடகக் கல்வி' பயின்றார். பெண்கள் பாடசாலைக்கு வெளியே நாடகத்தில் நடிக்க அஞ்சும் அக்காலகட்டத்தில் நாடகக் கல்வியை தேர்வு செய்தமை மிக துணிச்சலான செயலாகும். இவர் யுவதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் கார் ஓடிய சில பெண்களில் குறமகளும் ஒருவர். கோப்பாய் ஆசிரிய பயிற்சி கல்லூரியில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் எழுத்துலகிற்கு வந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கடந்த பல வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகின்றார். எண்பது வயதை நெருங்கும் குறமகளை பல இலக்கிய கூட்டங்களில் ஒக்சிசன் சிலிண்டருடன் காணக் கூடியாத இருக்கும். பொதுவாக இந்நிலையை அடையும் எவரும் வீட்டை விட்டே வெளியே வருவதில்லை. மிகவும் மனத்துணிச்சலுடன் எவரது உதவியுமின்றி இவர் உலா வருகின்றார்.

பல பத்திரிகைகளில் எழுதிய இவர் இன்றும் 'விளம்பரம்' பத்திரிகையில் எழுதி வருவது குறிப்பிடத்தக்கது.

இவரது பெண்ணிய அணுகு முறை இன்றைய பெண்ணிய அணுகு முறையில் இருந்து வித்தியாசப்படுகின்றது. குடும்பம் என்ற அமைப்பு உடைபடக் கூடாது என்ற கவனத்தை இவரது எழுத்துக்களில் காணலாம். எங்கல்ஸ் குறிப்பிடவது போல் 'ஒடுக்குமுறையற்ற ஆணாதிக்க சிந்தனையில்லாத குடும்ப முறை' தான் இவரது தேர்வு எனலாம். குடும்ப அமைப்பு பெண் ஒடுக்குமுறைக்கு ஒரு மிக முக்கிய பிரதான காரணி.

தனது கருத்துத் தளத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் தேடல் அதிகமிக்கவர். ம னு ஸ ் ய பு த ் தி ர னு க ் கு ம ் , ஜெயமோகனுக்குமிடையில் ஒளிந்துள்ள பெண் ஒடுக்குமுறைச் சிந்தனையை வெளிப்படையாகவே விமர்ச்சிக்கும் துணிச்சலும் இவருக்குண்டு.

உமது கொடியை பறக்க விட
எம் எலும்புகள்
முறிக்கப்பட்டன

என்ற அனாரின் கவிதையைப் போல் இவரது விமர்சனங்கள் உள்ளன. அதே அனாரின் வரிகளில் வெளிப்படும்

வாழ்வை
உரிமையை
எந்த விலைக்கும்
என்னால் விற்க முடியாது

என்ற அறை கூவலும் இவரது எழுத்துக்களில் உள்ளன.

∴ விருதைப் பெறும் குறமகளுக்கு எமது வாழ்த்துக்கள். கடந்த காலங்களில் பி. விக்கினேஸ்வரன், பாலேந்திரா, டொமினிக் ஜீவா, திருமதி வசந்தா டானியல் போன்றோர் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM


**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4




*This Ad sponsored by: N. Murugadas, Mortgage Specialist, 416-543-6614*




MAKE A NEW BEGINNING




ஒரு கலன் டியூலெக்ஸ் பெயின்ரை வாங்கும் பொழுது மற்றொன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

# Buy one get one FREE*

On any gallon of Dulux Paint

With over 230 Dulux Paints locations, visit dulux.ca for a store near you.

**Dulux Paints**
**2094 Lawrence Ave, E**
**Scarborough, ON**
**M1R 2Z6**
**416 759 1161 / 416 759 2261**

June 18 to June 30

*Cannot be combined with any other offer or promotion. Buy any gallon (3.0L-3.78L) of Dulux or Glidden paint at a regular retail price and get the second gallon (of equal or lesser value) free. All products may not be available at all locations. See instore for offer details. At participating locations only.

Dulux
let's colour


பொழுதுபோக்கு இது
உங்களுக்கு உரியது
இப்பொழுது உங்களுக்கு விருப்பமான அலைவரிசைகளை றோஜேர்ஸ் டிஜிட்டல் அடிப்படை டிவி பொதி மூலம் பெருந்தொகையான தமிழ் அலைவரிசைகளில் இருந்து தெரிவு செய்யுங்கள்.
VIJAY
tamil one
JAYA TV
tvi
CBN
NDTV 24x7
இத்துடன் மேலும் பல அலைவரிசைகள் உங்கள் தெரிவுக்காகவே காத்திருக்கின்றன. கட்டணங்கள் மாற்றமடையலாம்
இப்பொழுது ஆரம்பிக்கிறது
$33.42 /மாதாந்தம்1
சேமியுங்கள் $462 2 வருட காலத்திற்கு
(உள்ளடங்கலாக $23.32/மாதாந்தம் டிஜிட்டல் அடிப்படை டிவி சாந்தா, ஒரு தமிழ் அலைவரிசை $10.10 எல்லா மாதாந்தக் கட்டணங்களும் உட்பட, அத்துடன் நியமத்தர டிஜிட்டல் பெட்டி வாடகை)
இன்றே மாற்றுங்கள் அத்துடன் சேமியுங்கள்!
அழையுங்கள் 1 877 426-6399 இணையத்தள விலாசம் www.rogers.com/MyTamilEntertainment
றோஜேர்ஸ் விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்
action ENTERTAIN SPORTS ENTERTAIN MOVIES
புதிய வெளியீடுகள் LIVE வியப்பில் ஆழ்த்தும் LIVE
ANYPLACE STUNNING ANYPLACE சௌகரியமான இதயம் கவர்ந்த EXCITING
Creating World-Leading Internet Experiences.
ROGERS™
Offer available to new Rogers Digital TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital Box required to receive Digital programming. Channel availability may vary by region. Taxes extra. Regular monthly rates apply after promotional period. 1 Includes monthly Digital Service Fee of $2.99, standard definition digital box rental of $4.49, $23.32/mo. Digital Basic TV subscription, an eligible Tamil channel of $10.10/mo. and where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription 2 Savings based on $19.27/mo (Digital Basic TV monthly discount including Local Programming Improvement Fund) for 24 months. © 2012

# ANOTHER NEW PROJECT
## By Tridel


TRIDEL BUILT FOR LIFE

# YONGE & EGLINTON




# 101 Erskine

Celebrating The Richness Of Life




HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife / GTA Realty Inc.
Brokerage*

5215 Finch Ave. E, #203, Toronto: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga: 905.712.2666

*Independently Owned & Operated

# 'முளிதயிர்.... முகனே' நினைவில் விரிவாக்கம் பெறுகிறது!

சங்ககாலத்துத் தமிழ்ப்பாடல்கள் இன்றைய காலகட்டத்தில் மொழி கையாளப்படும் வகையில் எவ்வளவு சொற்செட்டாகவும் நிறைந்த பொருள் பொதிந்தவையாகவும், அறிவுச் சுவை தருபவையாகவும் அமைகின்றன என்பன அதிசயமானவை. ஒவ்வொரு சொல்லும் விரிவாக்கம் பெறும் போது பெரும் கட்டுரைகளாக அமைகின்றன என்பது தற்காலத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற தமிழறிஞர்களால் நிரூபிக்கப்பட்டு வருகின்றது. 'இங்கிலிஸில் சொனற்' (Sonnet) வகையைச் சேர்ந்தன போலப் பலபாடல்கள் அமைந்துள்ளன. இவற்றுள் சில அடிக்கடி சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் எடுத்தாளப்பட்டுள்ளன. இங்கே விரிவாக்கம் பெறுவது 'முளி தயிர் பிசைந்த' என்பதாகும்.

'முளி தயிர் பிசைந்த காந்தள் மென்விரல்
கழுவுறு கலிங்கம் கழா துடீஇ
குவளையுண் கண் குய்ப்புகைகமழ
தான் துழந்து அட்ட
தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதில் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே'

சமீபகாலம் வரை தன் தோழிகளுடன் ஓடித் திரிந்து பந்துவிளையாடி கோடு பாய்ந்து செல்லப்பிள்ளையாக பாவாடை சட்டையுடன் வளைய வந்த ஒரு சிறுமி வயதுக்கு வந்து விட்டாள். அக்கால ஆசாரங்களின்படி இல்லற வாழ்க்கைக்குத் தகுதி கண்டுவிட்டதாக உணரும் பெற்றோர் உடனேயே மணம் முடித்துக் கொடுத்து விடுகின்றனர். மருமகளைக் கண்ட மாமியார் தேசயாத்திரைக்குக் கிளம்பி விடுகிறார்.

இப்பெண்ணோ சில சமயங்களில் தாயாருக்குச் சிறுசிறு உதவிகளை மாத்திரம் செய்திருக்கிறாள். அறிவு பூர்வமாகச் சில விடயங்களை அறிந்திருக்கலாமே தவிர அனுபவ ரூபமாகச் சமையலைக் கற்றுக்கொள்ளவில்லை. பாலகிதானே. பன்னிரண்டு வயதில் தனிக்குடித்தனம். இயல்பான சுறுசுறுப்பு சமையலிலும் தொழிற்படுகிறது.



விவாகத்தின் போதுதான், பெண்கள் தாவணி அணிவார்கள். அனுபமற்ற சேலை உடுப்பு; சொன்னது சொன்னபடி நிற்காது தளரத் தொடங்கிவிடும். முன்தானையைச் சுற்றி இடுப்பில் சொருகி விடுகிறாள். சமையலுக்கு வேண்டிய அத்தனை பொருள்களையும் சேகரித்து வைத்துக் கொண்டாள். தற்காலத்தில் புளிச்சாதம் எனவும் தயிர்ச்சாதம் எனவும் வெவ்வேறாக ஆக்கப்படுகிறது. ஆனால் அக்காலத்தில் புளிச்சாதமும் தயிரும் தான் வாய்ப்பான சோடிகள் போலும். பாகர் எனின் சோறு எனப்படுமாம்.

முளிதயிர்: கட்டித் தயிர் - தற்காலத்தில் பாலைக்காய்ச்சி உறையவிட்டால் அது தயிராகும் போது, அரைவாசி நீரில் தயிர் மிதந்து ஆடிக்கொண்டிருக்கும். நல்ல தயிர் தேவையாயின் பசுவுக்கு நல்ல புல்லு, பச்சை இலைவகை போட்டு அதன் பாலைக் கறந்து வற்றக் காய்ச்சி உறையிட்டு வைத்தால் அது கட்டியாக உறைந்து நீர்ப்பிடியின்றி அப்பம்போல் காட்சி தரும். இருவருக்கும் மட்டுமே தயாரித்த தயிருக்கு ஒரு பானை, மத்து எல்லாம் எடுத்துக் கரைக்கவோ வெண்ணெய் எடுக்கவோ தேவையில்லை. ஆகவே அடுப்பிலே அரிசி வேகிறது. துழாவிப் பதம் பார்க்கிறாள். கட்டித் தயிரைத் தன்கைளாலே பிசைந்து பதப்படுத்தும் போது பானைச்சோறு பொங்கி நீர் அடுப்புள் வடிகிறது. அவசரமாக எழுந்து துழாவ முந்தானை கழன்று விழுகிறது. நெருப்பு பிடித்து விடுமே என்ற அச்சத்தால் தயிர் பிசைந்த கையால் சேலையைப்பிடித்துச் செருகுகிறாள். கையிலிருந்த தயிரோ சேலை எங்கும் பிரளுகிறது.

பிசைந்த விரல்கள், காந்தள் மலர் போன்ற மென்மையானது. பெண்களின் விரல்களை காந்தள் - செங்காந்தள் மலருக்கு ஒப்பிடுவார்கள். ஊரிலே கார்த்திகை மாதத்தில் பூப்பதால் கார்த்திகைப் பூ என்போம். ஐந்து அல்லது ஆறு இதழ்களைக் கொண்டும் சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள் நிறங்களைக் கொண்டும் ஒரு இதழ் கட்டையானதாகவும், விரல்களைக் குவிந்த நிலையில் வைத்திருப்பது போலவும் காட்சியளிக்கும்.

இதழ்களின் மென்மையும் அதன் எண்ணிக்கையும் மட்டுமே பொதுத்தன்மை என எண்ணியிருந்தோம். ஆனால் கனடாவுக்கு வந்த பின்தான் வெவ்வேறு தொடர்பான நிறங்களிலும் காணமுடிந்தது. செஞ்சிவப்பு நிறத்தில் அதாவது றோஸ் நிறத்தில் கண்டபோது தான் எங்கள் புலவர்கள் பொய் கூறவில்லை என அறிய முடிந்தது. சிவந்த தோலுடைய பெண்களின்



**வள்ளிநாயகி இராமலிங்கம்**

தொடர்ச்சி 31ஆம் பக்கம்


Summer Tutoring

(Grade 1-12, College, & University)

* ENGLISH * FRENCH * MATH * SCIENCE *
* ENGINEERING * ACCOUNTING *

(647) 705 0725

* Prepares the students for next grade they enter in september
* Individual plan for each student to help build strong base
* Completely aligned with Ontario Curriculum
* Highly qualified and experienced teachers conduct lessons

# BASEMENT RENT

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC. Single girl or single boy preferred.
Avail. immediately.
416.587.5843 / 905.472.1454

**MEADOWVALE & SHEPPARD**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, Tamil store. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.6282

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, no parking. Close to all facilities. Avail. immediately. Rent $650.
தொடர்புகளுக்கு: 416.558.7262

**BIRCHMOUNT & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to TTC, mall, YRT. Avail. immediately.
905.940.8609 / 647.760.5914

**BELLAMY & PANDORA CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking, kitchen. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.261.2279

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Full washroom, laundry. Close to TTC, school. Avail. immediately. 1 Room also available.
தொடர்புகளுக்கு: 647.895.8703
647.895.8702 (Before 1.00 PM)

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
416.720.2171 / 416.298.1872

**PHARMACY & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt fo rent. Sep. entrance, parking. Close to TTC, school & all amenities. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.722.1853

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 15, 2012.
3 Bedroom also avail in main floor.
தொடர்புகளுக்கு: 416.302.9022

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to bus (24 hrs), Sobey's, Wal-mart.
Avail. July 01, 2012.
416.724.9125/647.895.4336

**MCCOWAN & 16 TH AVE.**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry, bills including. Close to mall, babu catering.
தொடர்புகளுக்கு: 905.887.5385

**MCCOWAN & 14 TH AVE.**
2 Bedroom + 1 washroom bsmt for rent. Sep. entrance, parking. Rent $750. We are looking for people as soon as quick.
தொடர்புகளுக்கு: 416.318.4964

**JANE & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.850.9401

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. Small family preferred.
416.873.0549 / 416.297.0549

**NEILSON & MORNINGSIDE**
Newly finished 1 Bedroom basement apartment for rent with separate entrance. Laundry and utilities included. Minutes from TTC, malls, Tamil stores, HWY 401 & 407. Available July 1st. Couple or small family preferred.
தொடர்புகளுக்கு: 416.335.9436

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

**9TH LINE & 14 TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable, parking, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.400.5525

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.448.6464

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.471.2582 / 647.505.2582

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.828.6278

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance,parking, laundry. Close to TTC, YRT, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.9509

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.439.2535

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. July 01, 2012.
905.201.6043 / 416.725.3665

**LAWRENCE & ORTONPARK**
தனிவழியுடன் கூடிய Bsmt இல் சகல வசதிகளுடனும் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
647.928.0667 / 416.701.0667

**MORNINGSIDE / 401 / MCLEVIN**
Newly renovated 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Gardening செய்யும் வசதியும் உண்டு. அருகாமையில் Mall, TTC, school, library U OF T. Small family preferred. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.1081

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to plaza, Highschool, elementary school. தொடர்புகளுக்கு:
416.728.8552 / 905.201.8552

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent.Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.624.6290 / 416.278.1132

**MARKHAM & SHEPPARED**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, Spicyland. Avail. Anytime. One Room also available.
தொடர்புகளுக்கு: 416.754.7172

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom walk-out bsmt for rent.Sep. entrance. Close to TTC, mall, school. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 905.946.5167 / 416.281.2509 / 416.473.7518

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temle. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**MORNINGSIDE & OLDFINCH**
3 bedroom + 2 washroom - $1200.
2 bedroom - $900. Bachlor apt. - $550.
Sept. entrance, laundry, cable. Close to Centennial college U of T.
தொடர்புகளுக்கு: 416.722.3450

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, full washroom, kitchen. Close to TTC (116 & 133), school. Couple preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.464.4132 (After 5:00pm)

**MARKHAM & ELSON**
Newly done 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.816.9912

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.880.8585

**MARKHAM / STEELES / STAINS RD**
2 Bedroom, sep. entrance. School, TTC bus very close. Cable, parking, internet included. Walmart, nofrills, Tamil stores எல்லாம் மிக அருகாமையில் உள்ளன.
Available June 15, 2012.
416.554.6557 / 416.299.7794

**BRIMLEY & STLEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.701.8681 / 647.947.9172

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, tamil stores, temple, Grace Hospital, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.230.7696 / 647.966.8612/ 416.412.0406

**BELLAMY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. 3 Rooms also avail. Close to all facilities. Avail. immediately. 416.261.4130 / 416.278.4133 / 416.286.0203

**OASIS & SEASONS**
2 bedroom walkout bsmt with separate entrance for rent in Scarborough. Walk to school, TTC & park. Close to shopping mall, Highway 401&407. Separate laundry room, New paint, one outdoor parking.
Available Immediately.
Call Kenga @ 416.318.0171
email to Kengak@Capitalink.ca

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

**MCCOWAN & ELSON**
2 Bedroom apt with washroom & kitchen, sep. entrance. Walking distance to Amadala Public School.
Close to Elson street.
905.201.6670 / 647.962.1492

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt apt. for rent with all facilities. Sep. entrance. Close to TTC, mall, etc. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.779.3411

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. TTC. Avail. July 01, 2012. தொடர்புகளுக்கு:
905.201.9901 / 416.648.1987

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. TTC, YRT. Avail. immediately. No pets. தொடர்புகளுக்கு: 416.735.5623

**WARDEN & ST.CLAIR**
2 Bedroom, 3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
647.693.3107/ 416.637.2277

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom in a bsmt available $325 inclu. utilities. Sep. entrance.
தொடர்புகளுக்கு: 416.890.5267

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

## BASEMENT RENT

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. 2 or 3 people preferred.
905.599.1622 / 416.939.8656

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Available. Avail. immediately.
4 bedroom house also available.
தொடர்புகளுக்கு: 416.931.3444

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.648.0257

## ROOM RENT

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent. Close to GTA Square Mall, TTC, Tamil stores. Avail. August 01, 2012. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.546.3491

**DONMILLS & SHEPPARD**
3 Bedroom in main floor rent. Kitchen, laundry, parking. Close to TTC, bank, school, Donmills subway, HWY 401, 404. Avail. August 01, 2012.
தொடர்கபுளுக்கு: 416.502.8053

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது. Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom condo. வில் 1 bedroom வாடகைக்கு உள்ளது. Parking, cable, internet. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.1436

**BIRCHMOUNT & FINCH**
2 Bedroom condo வில் 1 bedroom வாடகைக்கு உள்ளது. Sep. washroom, parking. Ladies preferred. Big closet, sep. full washroom. Close to all facilities. Avail. immediately. Young couple. தொடர்புகளுக்கு:
416.623.9121 / 416.804.1291

## ROOM RENT

**MCCOWAN & 14 AVE.**
1 Bedroom for rent. Parking, laundry. Closet to YRT, mall. Avail. immediately.
416.845.4568 / 905.946.8843

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc.
தொடர்புகளுக்கு: 647.981.3771

**MARKHAM & MCNICOLL**
2 Bedroom for rent in a main floor. Parking. Close to all facilities. Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.837.9441

**MARKHAM & STEELES**
1 Room for rent. Close to all facilities. Internet. Walmart, TTC, YRT. Avail. immediately. Working women or student preferred.
416.722.5631 / 905.472.8212

**BSMT / ROOMS FOR RENT**
**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. avail. immediately. Close to TTC, mall, centennial college.
647.706.4881 / 416.439.4076

**MCCOWAN & FINCH**
1 Room for rent. Close to TTC, mall. Avail. immediately. வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.929.0539

**MORNINGSIDE & NEILSON**
1 large Master room for rent. Washroom, parking. Ladies /couple preferred. Includig bedroom set. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.210.4292

**KEELE & FINCH**
Furnished room for rent in condo. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.648.1679

**KEELE & RUTHERFORD**
One Master bedroom with washroom. 1 Bedroom also avail. Close to all facilities. Avail. immediately. Ladies or young couple preferred.
647.389.9193 / 905.832.2203

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.8999

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
416.431.9950 / 416.557.7241

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

## ROOM FOR RENT

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

## HOUSE FOR RENT

**MIDDLEFIELD & ELSON**
4 Bedroom + 2 full washroom house for rent. 2 Car parking. Close to all facilities. Avail. July 01, 2012. Family preferred.
416.819.3204 / 905.534.2121

**MCCOWAN & SHEPPARD**
3 Bedroom + 1 bedroom house for rent. Close to all facilities. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.554.7114

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom main floor for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
416.291.1752 / 416.460.2549

**NEILSON & FINCH**
4 Bedroom House + 1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.1568

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.867.2129

## CONDO. FOR RENT

**MCLEVIN & NEILSON**
2 bedroom Condo.வில் 1 bedroom வாடகைக்கு உண்டு. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.896.8388

**MIDLAND & LAWRENCE**
2 Bedroom + 2 washroom condo. for rent. Close to RT, TTC, mall. Avail. July 10, 2012.
647.300.3535 / 647.924.6679

## PRIVATE CONDO FOR SALE

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom + 2 full washroom condo. for sale. Sep. laundry, 5 appliance, parking, locker. Ready to move in.
Asking price $254,900.
905.471.8695 / 647.867.7816

## JOB JOB JOB

வாகன வசதி இல்லாதவர்கள், வயதானவர்கள் தங்கள் வாகன தேவைகளை பூர்த்திசெய்ய (Pick-up, drop-off )
அழையுங்கள்: 647.607.9927

New Market இல் இயங்கி வரும் Breakfast Restaurant க்கு வார இறுதி நாட்களில் (Saturday & Sunday) அனுபவமுள்ள cook தேவை.
தொடர்புகளுக்கு: 905.392.6080

**MARKHAM & SHEPPARD**
Computer Store ஒன்றிற்கு Sales person தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
idealstairs21@gmail.com

### DRIVERS WANTED

Part-time drivers wanted with car. monday to friday 12.00 - 5.00 pm.
தொடர்புகளுக்கு: 416.836.0074

### HANDYMAN

Renovation, repairs & paint. போன்ற வேலைகளுக்கு
அழையுங்கள்: 647.998.3535

### Experienced Hardwood installer

Monday - Friday - 8.00am - 6.00pm.
தொடர்புகளுக்கு: 416.613.1919

**B.K HOME RENOVATION**
Bsmt, flooring, washroom, painting, kitchen, plumping, tiling போன்ற வேலைகளுக்கு அழையுங்கள். Free estimate.
Basgar: 416.712.8949

**YONGE & YORKMILLS**
Sandwich maker & chef in the kitchen. Part-time, full-time.
தொடர்புகளுக்கு: 416.823.3849

## HOUSE FOR LEASE

**MCCOWAN & STEELES**
3 Bedroom + 3washroom house for lease. Close to TTC, mall, school.
416.438.5085 / 647.628.6236

## PRIVATE HOUSE FOR SALE

**MCCOWAN & DENISON**
3 Bedroom + single garage house for sale. House number 59. 4 Car parking. Close to school,mall, TTC, etc.
416.670.8248 / 416.900.7782

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. அருகாமையில் பஸ் வசதியுடன் உடனடியாக இருந்து வாடகைக்கு விடப்படும்.
**தொடர்புகளுக்கு: 647.402.9490**

# வழித்துணை

## கடந்த இதழ் தொடர்ச்சி...

றஷ்மியின் இந்த நூலிலுள்ள நெடுங்கவிதை அல்லது கவிதைகளின் அரசியல் பற்றியும், அவற்றினூடாக அவர் வெளிப்படுத்தும் அரசியல் விமர்சனம் பற்றியும் குறிப்பிடுவது மட்டுமே இந்நூல் பற்றிய ஒரு முழுமையான குறிப்பாக அமைந்து விட முடியாது. எழுபதுகளின் பிற்கூறுகளில் இருந்து இற்றை வரையான கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வெளிவந்த பெரும்பாலான தமிழ் கவிதைகள் இவ்வாறான அரசியலைக் கொண்டவையாகவே இருந்திருக்கின்றன. இந்த அரசியலில் மாறுபட்ட கருத்து ஒருவருக்கு இருக்க முடியுமாயினும் இக்காலக் கவிதைகள் நேரடியான அரசியல் தன்மையைக் கொண்டிருந்தமை ஒரு முக்கியமான உண்மையாகும். இந்தக் காலகட்டம் மக்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் அல்லாடிக் கொண்டிருந்த ஒரு காலகட்டம்: வாழ்வின் உயிர்த்துடிப்பான ஒவ்வொரு கணத்தையும் அச்சத்துடனும் நிச்சயமின்மையுடனும் கழித்த காலகட்டம். தமது துயர் நிறைந்த, எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை மட்டுமே நிரந்தரமாக இருந்த ஒரு சூழலில் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற நம்பிக்கையை வலிந்து உருவாக்கிக் கொண்ட வாழ்வுக்காக போராடிக் கொண்டிருந்த காலகட்டம். இதனால் இக்காலகட்ட கவிதைகள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் அரசியலுடன் நேரடியாகத் தவிர்க்க முடியாதபடிக்கு தொடர்புபட்டவை யாகவே இருந்திருக்கின்றன.

ஆனால் இந்தக்கவிதைகளின் மத்தியில் கவிதை மொழியிலும் அவை பேசிய அரசியலிலும் தனக்கேயுரிய ஒரு தனித்துவமான பண்பைக் கொண்டதாக அமைந்திருந்தன றஷ்மியின் கவிதைகள். தனது கவிதையின் மொழியினூடு றஷ்மி விரிக்கின்ற காட்சிகள், அக்காட்சிகள் வெளிப்படுத்துகின்ற உணர்வின் தன்மை என்பவை அவரது கவிதைகளின் தனித்துவத்திற்கு காரணமாகின்றன. அவரது மொழி சிந்தனையின் அல்லது உணர்வின் நேரடியான வெளிப்பாடு. அவர் வார்த்தைகளை தேர்ந்தெடுக்கும் விதம் அவற்றை அவர் கோர்க்கும் விதம் என்பவை மற்றைய கவிஞர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தி நிறுத்துகிறது.

சரிநிகரினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற ஒரு கவிதையுடன் எனக்கு அறிமுகமான றஷ்மி இன்னமும் மீசை அரும்பா வளரிளம் பருவத்தினனாக இருந்தான். பின்னாளில் அவன் சரிநிகரில் வடிவமைப்பாளராக கடமையேற்று வந்து சேர்ந்தபின் எழுதிய கவிதைகள் அவ்வப்போது சரிநிகரில் வெளியாகின. கவிதையில் அவன் கையாளும் மொழியின் செட்டு, வார்த்தைகளை அவன் பயன் படுத்தும் விதம் என்பவற்றில் தனக்கேயுரிய ஒரு பாணியை வளர்த்து வருவதை நான் அடையாளம் கண்டு வியந்திருக்கிறேன். வயதில் சிறியவனாக இருந்தபோதும் நல்ல மொழி ஆளுமை கொண்டவனாக அவன் இருந்தது. எனது கவனம் அவன்மீது பதியக்காரணமாக இருந்தது.

அவன் வரையும் சித்திரங்கள் போலவே மொழியும் அவனது சிந்தனை ஓட்டத்திற்கு ஏற்ப வளைந்தும் முறிந்தும் இடங்கொடுத்தது.

'ஆண்டுகள் ஆயிரம் இரண்டு பழைய புத்தர்
பூச்சு வாசம் புதிதாய்
மண்ணின் கண்ணிலிருந்து முகிழ்த்தார்
இரவு ஒன்றிற்குள் வானளாவ மரம் வளர்ந்த
அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினர்
புனித பூமி இதுவென்றார்'

'இரண்டாயிரம் ஆண்டுகள் பழைய' என்று எழுதக்கூடிய இந்த வரியை எதற்காக இப்படி எழுத வேண்டும்? எழுதலாம். அப்படித்தான் எல்லாக் கவிஞர்களும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் றஷ்மியின் பார்வையில் காட்சிகள் விரிகின்ற விதம் இப்படித்தான் அமைகிறது. புதிதாக முளைத்திருந்த புத்தர் சிலையைப் பார்க்கையில் றஷ்மிக்கு மனதில் எழுவது அதன் பழமை பற்றிய எண்ணம்தான். உடனே அதன் பழமைக்கான ஆண்டுகள் பற்றிய நினைவு மனதில் எழுகிறது. பிறகுதான் பூச்சு வாசம் தெரிகிறது புதிது என்ற புரிதலுக்கு வர. அவரது கவிதையின் வீச்சு மையம் கொண்டிருப்பது இந்தவகை வெளிப்பாட்டு முறையும், சமகால அரசியலின் பின்னணியில் காட்சியை சித்திரிக்கும் முறையும் தான். அந்த வரிகளில் நேரடியான கோபத்தையோ கவலையையோ அல்லது வேறெந்த உணர்ச்சியையோ காணமுடியாது. பதிலாக அவை அவனது சித்திரக் கோடுகள் போல சேர்ந்து நின்று விரிக்கும் காட்சி பல புதிய அர்த்தங்களுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த அப்பாவிச் சிங்கள மக்கள் தாக்கப்பட்ட போது ஜனநாயகம் மனிதத்தன்மை என்பவற்றை மதிக்கிற ஒவ்வொருவரும் திடுக்கிட்டுத்தான் போனார்கள். ஆனாலும் ஒரு சிலர்தான் அதனை மறுத்துக் குரல் எழுப்பினார்கள். பேச நாவிழந்திருந்த பலரும் ஆக்கிரோசமாக குரல்கொடுத்த சிலரிலும்கூட அதன் பின்னாலிருந்த அரசியலை கணக்கெடுத்து புரிந்து கொண்டு தமது எண்ணத்தை வெளிக்காட்டியவர்கள் மிகச்சிலரே. அந்தச் சிலரில் றஷ்மியும் ஒருவன். அவனது வரிகளில் கோபம் இல்லை. ஆனால் கூர்மை இருக்கிறது. மனதில் அழுமான தாக்கத்தை ஏற்றவல்ல கூர்மை. அந்த அரசியல் போக்கினை விமர்சிக்கும் விதத்தில் அவனது வரிகள் கோடுகளாக சித்திரம் தீட்டுகின்றன.

வெருட்டிகளை வெருள வைக்கின்ற அச்சம்.
பாலேறி முற்றாச் சோளம் மாந்திப்போக
கொலை நிகழ்ந்த சேனைகளில்
குருவிகள் அமர்வதுமில்லை
பாடல்கள் கேட்பதுமில்லை.

கிளிகளின் பாட்டம் இடம்பெயர்ந்திற்று
மரங்கொத்தி குடைந்த பொந்துகளுக்கு மீள
அவை திரும்பவில்லை.

குஞ்சுகள் மரிக்க காற்றில் ஆடியது
குருவியின் கூடு.

தண்டுகளின் அறுக்கும் இலைகளூடு
தவழ்ந்து யாரும் தப்பவில்லை கதைசொல்ல
கரும்புக் கண்டங்களிலிருந்த வாழ்வு
சாறு நீங்கிய சக்கையாகிற்று.

சாலையோரத் தேநீர்க்கடைகளிலிருந்து
நன்னாரி வேரின் வாசம் போன நாட்களில்
கித்துள் கருப்பட்டி கசிந்து கூழாகிற்று'

கடைசியில் அவர்கள் கையிலும் துவக்கு..

வன்முறை அப்பாவி மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் போது அது எதிரியின் கைகளை எவ்வாறு பலப்படுத்துகிறது என்ற அரசியல் உண்மையை வெளிப்படுத்துவதோடு பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வு சக்கையாகிப் போனதை அழகாக காட்சிப்படுத்துகின்றன றஷ்மியின் கவிதை வரிகள்.

**- எஸ்.கே. விக்கினேஸ்வரன் -**

றஷ்மியின் கவிதை மொழியின் இந்தச் சிறப்பை அவரது கவிதைகள் நெடுகிலும் காணலாம். இதற்கு வலுவூட்டுபவை அவரது கிழக்கு மாகாண விவசாயக் குடும்பப் பின்னணி காரணமான அவரது கிராமத்து மொழியும் அந்தக் கிராமத்து மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த அவரின் உறவும் என்று சொல்லலாம். அந்த மக்களின் நம்பிக்கைகள் ஐதீகங்கள் இவற்றால் வளமூட்டப்பட்ட அவர்களது வாழ்வியற் கோட்பாடுகள் அனைத்தும் றஷ்மியின் கவிதைகளில் அவ்வப்போது அவரது சித்திரக் காட்சிகளுக்கு வலுவூட்டும் சொற்கோடுகளாக வந்து போகின்றன. கிராமத்து விவசாயக் குடிகளின் நம்பிக்கையின் பின்னணியில் விவசாயிகள் மீதான தாக்குதல் தொடர்பான அவரது கவிதை வரிகள் இப்படி விரிகின்றன.

பல்கழன்று வீழப் பலர் கனவில்
கண்டுகொண்டிருந்த நாளொன்றில்
முன்னறிந்து
பூனைகள் சொல்லிய பிரகாரம்
சா விழுந்தது

கிராமத்து வாழ்வு பற்றிய சித்திரம் அவர் வரிகளில் வரும் அழகை இந்த வரிகளில் காணலாம்.:

தின்றதை விட யானை துவைத்தது அதிகம்
பன்றி தின்பதில்லை - கிண்டும்
பாலேறு பருவத்தில் கிளி குருவி சேதம் -
பதராகும்
அறக்கொட்டி படைநடாத்தி அரிந்து
சாய்க்கும்
பயிரேற வெயில் எறிக்கும் அறுப்பில் -
மழையடித்துத்
தங்கம் மணி கறுக்கும்
வயிற்றுக்குப் போக நட்டத்தில்
விலைபோகும் மீதி'

வரும்போகம், அடுத்தது
அதற்கும் அடுத்ததென
சேறுமாறிப் புழுதி புழுதிமாறிச் சேற்றிலாய்
விரட்டும் வயிற்றொடு விட்டதைப் பிடிக்க
ஆயுளை வைத்துச் சூதாடிக்கொண்டிருந்த
தலைமுறையொன்றின் காலத்தில்.
வெளிச்சம் எரியும் வயலில்
விளைச்சல் கொழிப்பதான ஐதீகம்
அறிந்தோர் எவரும்
வயலில் இறங்கப் பயந்த இரவுகளில்.

றஷ்மியின் கவிதைகளின் வடிவம் அவரது சித்திரக் கோடுகள் போன்று அமைகின்றதென்றால் அதன் பலம் அவரது மொழியும் அவர் வாழும் சூழலுடனான அவரது நெருக்கமான உறவும் என்று சொல்லலாம்.

இந்தவகையில் றஷ்மியின் கவிதைகட்கு மூன்று விதமான பரிமாணங்களில் முக்கியத்துவம் உண்டு. ஒன்று அதன் தொடர்ச்சியான புறவயமான பார்வையோடான மக்கள் நலன் சார்ந்த அரசியற் சார்பு. இரண்டாவது அதன் வெளிப்பாட்டு முறையில் ஒரு ஓவியரின் தூரிகையின் லாவகமான ஓட்டம் எப்படி அவர் விரும்பும் காட்சியை உருவாக்கி விடுகிறதோ அதேபோன்று லாவகமான மொழியின் சொற்களும் வரிகளும் தூரிகையின் கோடுகளாக மாறி காட்சிகளை விரிக்கும் சிறப்பு. மூன்றாவதாக வாழும் மண்ணோடும் மக்களோடுமான அவர்களது வாழ்வின் விழுமியங்களோடான சேதனாபூர்வமான பிணைப்பைக் கொண்டிருக்கும் அதன் தன்மை.

றஷ்மியின் பத்தாண்டுகளுக்கு மேலான காலப்பகுதியில் எழுதப்பட்ட இந்தக் கவிதைகளின் தொகுப்பு அல்லது நீள் கவிதை - எது என ஆராயும் முயற்சியில் நான் ஈடுபட விரும்பவில்லை - அவரதும் அவரது கவிதையினதும் இந்த மூன்று பரிமாணங்களையும் வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

றஷ்மியின் இந்த நூல் தமிழ்க் கவிதையுலகில் முக்கியமான ஒரு இடத்தைப் பிடிக்கும் என்று நான் நம்புகிறேன். அவருக்கு எனது அன்பான பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்!


BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

## காணி விற்பனைக்கு

குப்பிளான் தெற்கு 10 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 905.209.0876

## FOR SALE

கொழும்பு நாரயம்பிட்டியாவில் New upgraded 2 Bedroom apartment சகல வசதிகளுடனும் விற்பனக்கு உள்ளது. Nice neighborhood.
தொடர்புகளுக்கு: 416.496.3327

## RESTAURANT FOR SALE IN AJAX

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Restaurant ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.230.5535
(Leave Message)

## SPACE FOR SALE

**ST.CLAIR & VICTORIA PARK**

Restaurant, stores, classes, போன்றவை நடத்தக்கூடிய இடம் விற்பனைக்கு உண்டு.
Price $289,000.
தொடர்புகளுக்கு: 416.454.4466

## தமிழ் உணவகம் விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் குறைந்த வாடகையுள்ள Take-Out Catering உணவகம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.587.8902

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## மணமகள் தேவை

வன்கூவரில் அரசாங்க நிறுவனம் ஒன்றில் பணி புரியும் பிராமண குல 33 வயது ரேவதி நட்சத்திரம் சாதகத்தில் பாவம் குறைந்த மணமகனுக்கு நல்ல மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பரம்
***5215 FINCH AVE. E., #201,***
***TORONTO, ON M1S 0C2, CANADA***

## மணமகன் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், விவாகமாகி குறுகிய காலத்தில் விவகாரத்து பெற்ற 30 வயது பிராமணப்பெண்ணுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்திமான மாப்பிள்ளை தேவை.
தொடர்புகளுக்கு: maha78@live.com

## SPACE FOR RENT

***MARKHAM & LAWRENCE***
***(North East Corner)***

Office space is available on the 2nd Floor, 695 Markham Road, Scarborough,Ontario. There are plenty of parking available. Closer to all four major banks.
Contact, ***Sam - 647.339.4927***

## VAN FOR SALE

2004 Honda Odyssey 7 passenger mini van, power lock & window, A/C, silver,no accident, clean in and out, 227000KMS, leather interior, DVD, CD changer, E-TESTED. 5800$
தொடர்புகளுக்கு: 647.880.1416

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

## BUSINESS FOR SALE

***MCCOWAN & EGLINTON***

Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது.
1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

மேலும் பக்கங்கள் 24, 25

## KEY BOARD CLASSES

***MARKHAM & LAWRENCE***

எதிர்வரும் July 01, 2012 இல் key board classes ஆரம்பிக்கவுள்ளது. தமிழ், ஆங்கில பாடல்களை 3 மாதத்தில் வாசிக்கக் கற்றுக்கொடுக்கப்படும். முதல் இரண்டு வகுப்புக்கள் இலவசமாக கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## TUTORING

By tutor experienced at colombo schools, university & technical college.

- Math 6 - 12, • Physics, Data Management
- Computer Training
- Web Design & Development

Use computer program to manage bills, payments, reminders, birthdays etc.
Contact: 416.706.1654

## மணமகன் தேவை

1985 இல் பிறந்த பல்கலைக்கழகப் பட்டதாரியான 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ரொரன்ரோவில் படித்த வேலை புரியும் நற்குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பரம்
***5215 FINCH AVE. E., #201,***
***TORONTO, ON M1S 0C2, CANADA***

## TUTORING

Grade 6 - 10: Math/Science
Grade 11 - 12: Physics / Chemistry
Biology / Accounting
647.893.9253 / 647.994.3341

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
**2383 Eglinton Ave. East**
**(Wind Mobile Store) Kennedy & Eglinton**
**416 - 879 7489 / 647 - 340 5568**

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

### KENNEDY & EGLINTON

*3 Bedroom house with all facilities. Very good for small family with children. Very convenient location with schools, banks, shopping, docotors etc. Also parking and garden. Avail. immediately*

**Contact: 416.285.4695**

## HOUSE FOR SALE - COLOMBO

கொழும்பில் அழகிய தொடர்மாடிகள் அதி நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 2 அறைகள், 3 அறைகளுடன் மொத்தம் 3 இடங்களில் (Temples Road, Samundra மாவத்தை, College Ave.) மொத்தமாக 70 வீடுகள் விற்பனைக்கு உண்டு. (Sea Side view & Land side view) உங்களுக்கு பிடித்தமான முறையில் வீட்டு வேலைகள் முடித்துத்தரப்படும். (GYM, Roof Top BBQ மற்றும் பல). உங்களுடைய வீடுகளை பதிவு செய்து உங்கள் முதலீட்டை உறுதிப்படுத்துங்கள்.

kulagan: **647.880.1416**

## PRIVATE TUTORING

### *By 25 years experienced teacher*

- Math - Grade 9 – 12 & college & university students
- Physics – Grade 11 – 12
- Pre university students calculus (Summer classes)
- Computer subject Grade 9 – 12
- We do computer repair and

***We do custom application programming for you business (Web base and non web base too)***

Contact: ***Siva M. Easwaramoorthy*** (B.sc. and Computer Programmer)
அழையுங்கள்: ***416.271.8467 / 416.265.9138***

## JOB JOB JOB

Financial Office is located in Mississauga which is need an office Assistant with Tele marketer hourly pay will be $12.00 per an hour and commission.

***Contact: 416-646-8860***

## OFFICE SPACE FOR RENT

### *MORNINGSIDE & SHEPPARD*

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

# அதிரப்பள்ளி - இந்தியா நயாகரா!

பல தமிழ்த் திரைப்படங்களில் நீங்கள் பார்த்த காட்சிதான். ஆனாலும், 'ஹோ'வென நிலம் அதிரும் ஆர்ப்பாட்டத்தோடு, 80 அடி உயரத்தில் இருந்து நுரைத்தபடி கீழே விழும் அதிரப்பள்ளி அருவியை நேரில் அனுபவிப்பது சுகானுபவம். அந்த அதிரப்பள்ளிதான் இந்த இதழில் நம் சுற்றுலா இடம்!

நயகாராவைப் பார்த்தவர்களுக்கு நிச்சயம் அதிரப்பள்ளி குட்டிப் பையன்தான். ஆனால், அதிரப்பள்ளியைப் பார்க்காமல் விட்டால், கேரளா பயணத்தின் முடிவில் முழுமையாக கேரளாவைச் சுற்றிப் பார்த்த நிறைவு இருக்காது. மேலும், குட்டிப் பையனாக இருந்தாலும் ஒவ்வொரு அருவியும் ஒரு பேரனுபவம்தான். எனவே, அதிரப்பள்ளியின் பேரனுபவத்தையும் பார்த்துவிடுவோம். புறப்படுங்கள்!

கேரளாவின் திருச்சூர் அருகே இருக்கிறது அதிரப்பள்ளி அருவி. சாலக்குடியில் இருந்து, தேக்கு மரங்களும் பாக்கு மரங்களும் அடர்ந்து வளர்ந்திருக்கும் மலைப்பாதையில் 35 கி.மீ. தூரத்தைக் கடந்தால், அதிரப்பள்ளி வரும். திருச்சூர் - சாலக்குடி சாலை அவ்வளவு அருமையான சாலை. இந்தப் பயணமே ஒரு பேரனுபவம்தான்.

பேருந்தில் நடத்துனர், ஓட்டுனர், ஏறுவோர் என எங்கும் நீக்கமற ஆண்கள் வேஷ்டியில் இருக்கிறார்கள். பேருந்தில் கண்டக்டர்கள் தமிழ்நாடு போல் விசில் அடிப்பதில்லை. ஓட்டுனர் தலைக்கு மேல் சின்ன மணி ஒன்று உள்ளது. இது கயிறில் கட்டப்பட்டு அதன் மறுமுனை பேருந்தின் கடைசி வரை செல்கிறது. கண்டக்டர் அந்தக் கயிறை பிடித்து இழுத்தால் முன்னே ஓட்டுனருக்கு ஒலி கேட்டு பேருந்தை நிறுத்துகிறார் அல்லது கிளப்புகிறார். மலைப் பிரதேசம் என்பதால் சாலை ஓரங்கள் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். சாலையோர வீடுகளில் சில மிக பாதாளத்தில் உள்ளன. அதற்கு அடுத்த வீடோ மிக உயரத்தில் உள்ளது. பொதுவாக மலையாள பெண்கள் என்றாலே வெள்ளை நிறத்தில் இருப்பார்கள் என்கிற கருத்து உண்டு. இதற்கு மாறாக நம் ஊரை போலவே கருப்பு நிறத்திலும் நிறைய பெண்களை பேருந்திலும் தெருக்களிலும் பார்க்கலாம். பெண்களின் பெரும்பாலானவர்கள் தலைக்குக் குளித்துவிட்டு, காதுக்கு இரு புறமும் கொஞ்சம் முடியை எடுத்துப் பின்னலுக்கு நடுவே ஒரு முடிச்சு போட்டு விட்டு, மீதம் முடியை லூசாக விட்டுள்ளனர்.



## கேரளா சுற்றுலா இடங்கள் - 12

சுற்றிலும் ரசித்துக்கொண்டே பயணம் செய்தால் திடீரென அருவி அதிரும் ஓசை காதில் விழும். அதிரப்பள்ளியை 'இந்தியாவின் நயாகரா' என்கிறார்கள். இந்த ஒப்பீட்டுக் காரணம், அதிரப்பள்ளியின் அகலம்! கிட்டதட்ட 150 மீட்டரைவிட அதிக அகலம் கொண்டது. அவ்வளவு அகலமான மலை உச்சியில் இருந்து மூன்று பாகமாகப் பிரிந்து விழுகிறது அருவி. வெள்ளம் வரும்போது அபூர்வமாக கிட்டத்தட்ட 100 மீட்டர் அகலத்துக்கு அருவியில் தண்ணீர் விழுவதுண்டு. இந்த அருவிக்கு இந்தியா முழுவதும் இருந்து சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். இந்தியாவில் இரண்டாவது பெரிய நீர்வீழ்ச்சி அதிரப்பள்ளிதான். (முதலாவது கர்நாடகாவில் உள்ள ஜோக் நீர்வீழ்ச்சி). ஆனால், இந்தியாவில் அகலமான நீர்வீழ்ச்சி என்றால் அது அதிரப்பள்ளிதான்.

அதிரப்பள்ளியை இரண்டுவிதமாக ரசிக்கலாம். வாகனப் பாதைகள் யாவும் அருவியின் மேல்பகுதிக்கு நம்மைக் கொண்டு செல்லும். அருவியின் மேற்பரப்பில் ஆர்ப்பாட்டத்துக்கு முன்னதாக சிறு சலசலப்போடு அமைதியாக ஓடிக்கொண்டு இருக்கிறது சாலக்குடி ஆறு. உயர்ந்து வளர்ந்த மூங்கில்கள் காற்றின் உபயத்தில் ஒன்றோடொன்று உரசும் 'ட்ர்ர்ர்க்க்' சத்தத்தைக் கேட்டபடியே, உயரமான மலைப் பாதையில் நடந்தால் ஆற்றைக் காணலாம். சோலையார் மழைக் காடுகளில் விழும் மழையும், உற்பத்தியாகிற சுனை நீரும்தான் அதிரப்பள்ளி அருவியின் மூலம். மலையில் மழை பெய்து திடீரென வெள்ளம் வரும் அபாயம் இருப்பதால், சுற்றுலாப் பயணிகள் ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடை விதித்திருக்கிறார்கள் வனத் துறையினர். ஆனாலும், ஆற்றின் கரைகளில் பாதுகாப்பாக 'சில்' தண்ணீரில் நனைந்து விளையாடி மகிழலாம்.

நீர்வீழ்ச்சி குறுக்கு வாட்டில் உள்ளதால், அதன் ஒரு முனை வரைதான் நாம் நடக்க முடியும். மறுமுனைக்குச் செல்ல முடியாது. இதனால், அருவியின் முழு அழகையும் ரசிக்க வெண்டுமென்றால் நாம் அருவிக்குக் கீழே இறங்கி செல்ல வேண்டும். செல்லும் பாதை மிக மோசமாக உள்ளதால், மலையேற்றம் போவது போல் சற்று சிரமப்பட்டுதான் செல்லவேண்டும். இதனால், பலரும் கீழே இறங்குவது இல்லை. மலைப் பாதையில் 2 கி.மீ. தூரத்துக்கு இறங்கி நடக்க வேண்டும். மலைப் பாதையின் முடிவில் மூங்கில் மரங்கள், செடி கொடிகள், கரும் பாறைகளின் ஊடாக வெள்ளித் திரவம் போல விழும் அருவியைக் காணும்போது பரவசத்தில் சிலிர்ப்பது நிச்சயம். நனைந்து கறுத்திருக்கும் பாறைகளின் மேல் ஏறி நின்று அருவியின் பிரமாண்டத்தை, விசிறியடிக்கும் சாரலில் மனமும் உடலும் நனைந்தபடி பார்ப்பதுதான் அதிரப்பள்ளி அருவியின் கொடை! அருவியும் மேகமூட்டம் போல் தூவும் அதன் சாரலும் மனதை அள்ளும்.

இந்தப் பகுதியில் குளிப்பதற்கு அனுமதி கிடையாது. அதற்குத் தேவையும் இல்லை. கொஞ்ச நேரம் அருகில் நின்றாலே பனிப்பூவைப் போன்ற மென்மையான சாரல் நம்மைக் குளிப்பாட்டிவிடும். கேமராவை வெளியே எடுத்தால் கவனமாக இருக்கவும்.

கமல்ஹாசன் நடித்த 'புன்னகை மன்னன்' திரைப்படம் இங்குதான் எடுக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழகத்தில் 'புன்னகை மன்னன்' அருவி என்று இதற்கு ஒரு பட்டப்பெயர் உண்டு. 'இருவர்' திரைப் படத்தில் வரும் 'நறுமுகையே நறுமுகையே' பாடல் இங்குதான் எடுக்கப்பட்டதாகும். சமீபத்தில் வந்த 'இராவணன்', 'பையா', 'பேராண்மை' திரைப்படங்களின் படப்பிடிப்பும் அதிரப்பள்ளி அருவியில்தான் எடுக்கப்பட்டன.

எத்தனை அழகோ அத்தனை ஆபத்தானது அதிரப்பள்ளி. பாறைகளைத் தாண்டி அருவியை அடைவது உயிரைப் பணயம் வைக்கும் விடயம். அருவியின் வேகம், ஆங்காங்கே காத்திருக்கும் அபாயச் சூழல் இரண்டுமே ஆபத்தானவை! அதிரப்பள்ளிக்கு மேலே 6 கி.மீ தூரம் பயணித்தால் வருகிறது மெதுவாக ஓடி வரும் நீர் 20 மீட்டர் தூரம் சரிந்திருக்கும் பாறைகளின் வழியாக அதிவேகமாக வழிந்து ஓடுவதுதான் வளச்சல் அருவி. இது முழுக்க முழுக்கக் கேரள வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. வளச்சல் அருவியை ரசிக்க அதை ஒட்டியே ஒரு பூங்கா அமைத்திருக்கிறார்கள். அருவிக்கு சில அடிதூர பூங்காவில் இருந்து பாறைச் சரிவுகளின் வழியாக ஓடும் அருவியை ரசிப்பது ஆனந்த அனுபவம். வளச்சல் அருவியும் ஆபத்தானது என்பதால் இங்கேயும் குளிக்கத் தடை!

எப்படிச் செல்வது? எங்கே தங்குவது? சென்னையில் இருந்து திருச்சூருக்கு ரயில் வசதி உண்டு. அங்கிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள சாலக்குடிக்கு ஒரு மணி நேரப் பயணம். அங்கிருந்து அரை மணி நேரப் பயணத்தில் அதிரப்பள்ளி வந்துவிடலாம். தேனீயில் இருந்தும் சாலக்குடிக்கு பஸ் வசதி உள்ளது. கொச்சி விமான நிலையம் வந்து, அங்கிருந்தும் அதிரப்பள்ளி செல்லலாம். கொச்சியில் இருந்து அதிரப்பள்ளி 54 கி.மீ. வருடம் முழுவதும் அதிரப்பள்ளியில் தண்ணீர் விழுந்தாலும் மிக அதிகமான தண்ணீர் விழுவது ஜுன் முதல் ஆகஸ்ட் வரைதான். எனவே, இக்காலகட்டத்தில் செல்வது நல்லது. அதிரப்பள்ளி அருவி போகும் பாதையின் வழி நெடுக நல்ல நல்ல ரிசார்ட்டுகள் உள்ளன. அங்கே சாப்பிடலாம்!

# இலங்கையில்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

"ஒருவேளை ஜனாதிபதி தேர்தலில் வென்றால், தமிழர்கள் பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைப்பீர்கள்?"

"ஓட்டுக்காகப் பொய் பேசும் அரசியல்வாதி இல்லை நான். இந்தப் பிரச்சினைக்கான தீர்வு காகிதங்களிலோ, வார்த்தைகளிலோ இல்லை. மனித மனங்களில் இருக்கிறது. அதை நான் சொல்ல விரும்பவில்லை. செய்துகாட்டுவேன்."

"சர்வதேச நீதிமன்றம் போர்க் குற்றங்களுக்காக சார்லஸ் டெய்லருக்கு 50 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்திருக்கிறது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?"

"வரவேற்கிறேன். போர்க் குற்றங்களில் யார் ஈடுபட்டாலும் அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்."

"எதிர்கால வரலாறு உங்கள் பெயரை ஹிட்லர், முசோலினி, போல்பாட் வரிசையில் வைக்கும். இதை உணர்கிறீர்களா?"

"ராணுவத்தைக் கையாண்டவர்கள் என்பதாலேயே அவர்களோடு என் பெயரை வரலாறு சேர்த்துவிடாது. நீங்கள் குறிப்பிடுபவர்கள் எல்லோருமே சர்வாதிகாரிகள். நானோ ஜனநாயகத்துக்காக உழைத்துக்கொண்டு இருக்கிறேன்!"

நன்றி
ஆனந்த விகடன்


## உன்னை நீயே அறிந்துகொள்

பாலைவனம் சோலையாக மாற பருவமழை வேண்டும்.
பரவிய இருள் அகல விளக்கு ஒன்று வேண்டும்.
துன்பத்தின் அலை அகல இன்பத்தின் ஊற்று வேண்டும்.
உள்ளத்தில் அமைதி பெற உன்னையே நீ அறிய வேண்டும்.
உன்னையே நீ அறிவதற்கு ஆசானின் உதவி வேண்டும்.

**TORONTO** வில் மகராஜியுடனான நிகழ்ச்சி
**காலம்:** ஞாயிற்றுக்கிழமை July 8th, 2012.
**இடம்: *Roy Thomson Hall***
***60 Simcoe St., Toronto, Ontario M5J 2H5***
இதற்கான அனுமதி இலவசம். ஆனால் முன்கூட்டியே பதிவு செய்தல் அவசியம். ஆசன பதிவுகளுக்கு ***www.wopg.org/en/events***
தொடர்பு கொள்ளவும்: ***416.431.5000***

# வேனர் கைசன்பேர்க் *(Werner Heisenberg)*
# உறுதியின்மைத் தத்துவம் *(The Uncertainty Principle)*

## நுண்ணுலகியல் 36

$$\Delta x \Delta p \geq \frac{h}{4\pi}$$

THE UNCERTAINTY PRINCIPLE

## குவாண்ரம் பிறந்த கதை

குவாண்ரம் கருதுகோளினை மாக்ஸ் பிளாங் ஒளித் துணிக்கைகளுக்கு எடுத்து வர, அயன்ஸ்ரைன் அதனை உறுதிப்படுத்த, அக்கருதுகோளினை நீல்ஸ் போர் அணுக்களில் இலத்திரன்களின் இயக்கங்களுக்குப் பொருத்தி, அணுக்களில் இலத்திரன்களின் இயக்கம் நியூட்டனின் செம்மைப் பொறிமுறையை விலத்திய இயக்கமெனவும் காட்டினார். தொடர்ந்து இளவரசர் லூயிஸ் புருக்லீயின் அருமையான கருதுகோளாம் அணுக்களில் இலத்திரன் களின் அலை - துணிக்கை இருமை எண்ணம், அணுக்களில் இலத்திரன்களின் இயக்கங்களுக்கும் மற்றும் நுண்ணுலகிக் நுண்துகள்களின் இயக்கங்களுக்கும் புதுவடிவினைக் கொடுத்தது. இதன் தொடர்ச்சியாகக் குவாண்டம் பிறந்த கதையில் புதுத்திருப்பம் ஒன்றினைக் கொண்டு வந்தார். இந்நிலையில் அலை-துணிக்கையென இயங்கும் இலத்திரனின் சக்தி, குறிப்பிட்ட கணத்தின் சக்தி, நிலை, வேகம் என்பவை பற்றி எண்ணம் விஞ்ஞானிகளிடையே வந்தது. எல்லாவற்றி லும் செம்மைப் பௌதீகத்தினை மீறிய பொறிமுறையில் இயங்கும் இந்த இலத்திர னின் சக்தியையோ அல்லது வேகத்தினையே அல்லது நிலையினையோ துல்லியமான செம்மைப் பொறிமுறையால் அறிய முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். இந்நிலையில் அக்கணியங்களின் அளவீடுகளில் ஏற்படக் கூடிய சிக்கல்களை ஜெர்மனியின் இளம் விஞ்ஞானியான வேனர் கைசன்பேர்க் குறிப்பிட்டுக் காட்டினார். கைசன்பேர்க்கின் சிந்தனையில் உதித்த வற்றைப் பாருங்கள், அதிசயித்துப் போவீர்கள். அவரது சிந்தனையின் வலிமையைப் புரிந்து கொள்வதற்கு சில விபரங்களைத் தெரிந்து கொள்வோம்.

ஏதோ ஒருவகையில் அணுக்கருவைச் சுற்றி வருகின்ற இலத்திரன்கள், கதிரவனைச் சுற்றி வருகின்ற கோள்களை ஒத்ததான இயக்கத்தில் இருப்பது போலத் தோன்று கின்றன. ஆனாலும் இவ்விரண்டு இயக்கங்களும் அடிப்படையில் பெரும் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன என்பதும் எமக்குத் தெரியும். இவ்விபரங்களை இன்னமும் ஆழமாகப் பார்ப்போம். கோள்கள் மிகப் பெரியன. இலத்திரன்களோ மிகவும் சிறியன, இலத்திரன்களைப் புள்ளித் துணிக்கைகள் என்பார்கள். இவை யிரண்டினதும் திணிவுகள் கூட அளவுகளில் மிகவும் வித்தியாசமானவை. கோள்களுக்கும் கதிரவனுக்கும் இடையிலான இயக்கங்களே, அவற்றின் திணிவுகளின் காரணமான ஈர்ப்புவிசையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனால் அணுக்கருவின் திணிவினாலும், இலத்திரனின் திணிவினாலும் ஏற்படக்கூடய ஈர்ப்புவிசையின் விளைவானது மிகவும் சிறியது இல்லையென்றே கூறலாம். இங்கே, இலத்திரன்களின் இயக்கமானது ஈர்ப்பில் தங்கியில்லை. மின்விசையின் விளைவாக அவை இயங்குகின்றன எனலாம். அடுத்து கதிரவனுக்கும் கோள்களுக்கும் இடையிலான தூரங்களை, அணுக்கருவிற்கும் இலத்திரன் களுக்கும் இடையிலான தூரங்களுடன் ஒப்பிடும்போது இரண்டாம் வகைத் தூரங்கள் மிகவும் குறுகியன. முன்னைய தூரங்களுடன் ஒப்பிடும் போது இல்லை என்றே கூறுவேண்டும். ஆனால் இலத்திரன்களினதும் அணுக்கருவினதும் பருமன்களுடன் ஒப்பிட்டு அவற்றின் இடையேயான தூரங்களைப் பார்க்கையிலே, அணுக்கருவுக்கும் இலத்திரன்களுக்கும் இடைப்பட்ட தூரங்கள் கோள்களைப் போன்றே மிகப் பெரியனதான்.

இனி, கோள்களின் சுற்றுகைக் காலங்களையும் இலத்திரன்களின் சுற்றுகைக் காலங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். எடுத்துக் காட்டாக எமது புவியையே எடுத்துக் கொள்ளுவோம். கதிரவனில் இருந்து சராசரியாக 93 மில்லியன் மைல்கள் (150 மில்லியன் கிலோமீற்றர்) தூரத்தில் சுற்றிக் கொண்டு வரும் புவி, கதிரவனை ஒரு முறை சுற்றி வருவதற்கு 365 நாட்கள் எடுக்கின்றன. (ஒரு கணக்கிற்கு இது எவ்வளவு செக்கன்கள் எனக் கணிப்பிட்டுப் பாருங்கள்.) இனி அணுவில், இலத்திரன் ஒன்று அணுக்கருவைச் சுற்றவதைக் கணிப்பிட்டால் ஒரு செக்கனில் கிட்டத்தட்ட 3 பில்லியன் எண்ணிக்கையிலான தடவைகள் அளவில் சுற்றி வரக் கூடியன. (அணுக்கருவில் இலத்திரனின் வேகத்தை செக்கனுக்கு ஒரு இலட்சம் கிலோமீற்றர்கள் என எடுத்துக் கொண்டு கணிக்கப்பட்டது.) எவ்வளவு விரைவாகச் சுற்றுகிறது எனப் பாருங்கள். இந்நிலையில் அணுக்கருவினைச் சுற்றும் இலத்திரனின் பாதையை எவ்விதம் தெரிந்து கொள்வது? காட்டுவது?

இது போதாது என்றால் இலத்திரனும் அலைவடிவில்தான் அணுக்கருவைச் சுற்றி வருகின்றது. எனவே, அணுக்கருவைச் சுற்றி வருகிற இலத்திரன்களை இலத்திரன் முகில்கள் எனக் கூறினார்கள். அடுத்து இன்னொரு விடயத்தினையும் பார்ப்போம். கோள் ஒன்று கதிரவனைச் சுற்றி வரும் இயக்கத்தில், கோளினது நிலையினை எந்தவொரு கணத்திலும் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அக்கணத்தில் அதன் வேகத்தினைக் கூடத் துல்லியமாகக் கணித்துக் கொள்ளலாம். இதிலிருந்து எதிர் காலத்தில் அக்கோளின் நிலையை, வேகத்தினைக் கணித்து அறிந்து கொள்ளலாம், செம்மைப் பொறிமுறையின் உதவியுடன். இன்னமும் குறிப்பாகக் கூறுவதெனில் சார்புத் தத்துவத்தின் உதவி யுடன் இதனைக் கணித்துக் கொள்ளலாம். ஆனால் செம்மைப் பொறிமுறையின் உதவியுடனே அல்லது சார்பியலின் வழியினிலே அணுக்கருவினைச் சுற்றி வருகின்ற இலத்திரன்களின் நிலையையோ அல்லது வேகத்தினையோ அறிந்து கொள்ளமுடியாது. இவற்றினை அறிந்து கொள்வதற்கு செம்மைப் பொறிமுறையோ அல்லது சார்பியலே பொருத்தமானதாக இல்லை. ஏனெனில் அணுக்கருவைச் சுற்றி வருகிற இலத்திரனின் நிலையையோ, அதன் வேகத்தினையோ, அல்லது அவ்விலத்திரன் கொண்டுள்ள சக்தியையோ எந்தவொரு கணத்திலும் உறுதியான பெறுமானத்தில் அறிய முடியாது. இது குவாண்டம் பொறிமுறையின் பெரும் வித்தியாசமாகும். இப்பெறுமானங்களில் காணப்படக் கூடிய உறுதியின்மைகளின் அடிப்படையிலேயே கைசன்பேர்க்கின் உறுதியின்மைக் கொள்கை பிறந்தது.

அடுத்த முறை அதனைப் பார்ப்போம். சரிதானே!




- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டம் - 110

**56 Mortimer Crescent Ajax**



***Stunning 5 Level Backsplit. 3325 square feet John Boddy Home with 4 Bedrooms, 4 washrooms. open concept with skylight and professionally finished basement with a built in wet bar and laminate floor.***

- Large master bedroom with 6 pc ensuite, fireplace with sitting area, 2 walk-in closets.
- Extra large family room with walk out to patio.
- Eat-in kitchen with centre island & granite countertop, ceramic tiles overlooking the family room.
- 2 car tiled garage with plenty of storage.
- Brand New Roof and too many upgrades to mention.

***Lumi / Joseph Rodricks: 416 439-2813 / 647-668 2813***

***Homelife/Bayview Realty Inc., Brokerage.***
***505 Hwy & E., Ste. 201, Thornhill, L3T 7T1***
***905 889-2200***

# "இனப்பிரச்சினை, மனித உரிமை, மாற்றுக்கருத்து, பெண்ணுரிமை, விளிம்பு நிலையாளர்கள் உரிமை, சூழலியல் அழிவு போன்றவை குறித்து மார்க்சியம் தன்னை அகலித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது ."

## யமுனா ராஜேந்திரனுடன் ரதன் உரையாடல்


### கடந்த இதழ் தொடர்ச்சி...

**இன்று உலகில் மார்க்சியம் தேய்ந்து வருகின்றது. பல மார்க்சிய நாடுகள் முதலாளித்துவ நாடுகளாக மாறியுள்ளன. மார்க்சியம் மீண்டும் தழைப்பதற்கான சாத்தியக் கூறுகள் எவ்வாறு உள்ளன. சற்று விரிவாக கூறுங்கள்.**

சில குறிப்பிட்ட விடயங்களை அங்கீகரித்துக் கொண்டுதான் நாம் இன்று மாரக்சீயம் பற்றிப் பேசமுடியும் என நினைக்கிறேன். லெனின் தோற்றுவித்த சோவியத் யூனியன் இன்று இல்லை. அதனது அரசியல்-பொருளியல் மாதிரிகளாக கிழக்கு ஐரோப்பாவில் நிலவிய சோாசலிச நாடுகள் இன்று இல்லை. மாவோ கனவு கண்ட சீனம் அல்ல இன்று மூலதனத்தை ஆப்ரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் வட்டிக்கு ஏற்றுமதி செய்யும் சீனா. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற லெனினியக் கோட்பாட்டையும், நாடுவிட்டு நாடுகடக்கும் மூலதனம் பற்றிய ரோஸா லக்சம்பர்க்கின் பார்வையையும் இன்று நாம் சீனாவுக்கும் பொருத்திப் பார்க்கவேண்டும். சோசலிசம் முதலாளித்துவம் என இரண்டிலும் இருக்கிற நல்லதை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்கிறார் வியட்நாமிய மக்கள் யுத்தக் கோட்பாட்டின் பிதாமகர் ஜெனரல் கியாப். தனியார் தொழில், சொத்து மற்றும் நிலம் வாங்குதல் என்பதனை கியூபக் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ் அங்கீகரித்திருக்கிறது. இலத்தீனமெரிக்காவில் இனி ஆயுதப் போராட்டத்திற்கு இடமில்லை, அது கடந்த காலம் என்கிறார் கொலம்பிய ஜனாதிபதி சேவாஸ். கியூபப் புரட்சியின் தலைவர் பிடல் காஸ்ட்ரோ அதனை மௌனமாக அங்கீகரிக்கிறார். நாம் வாழும் உலகு அமெரிக்கா-சோவியத் யூனியன் என இருந்த இரட்டைத்துருவ உலகு அல்ல. அமெரிக்கா மட்டுமே அனைத்தும் என ஆகின ஒற்றைத் துருவ உலகும் அல்ல. அமெரிக்கா-ரஸ்யா-சீனா-ஐரோப்பா-இந்தியா எனும் சக்திகளால் பங்குபோடப்படும் பல்துருவ உலகு இது.

இனப் பிரச்சினை, மனித உரிமை, மாற்றுக் கருத்து, பெண்ணுரிமை, விளிம்பு நிலை யாளர்கள் உரிமை, சூழலியல் அழிவு போன்றவை குறித்து மார்க்சியம் தன்னை அகலித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இன்று தொடரக் கூடிய இலட்சிய சோசலிச சமூகம் என்பதற்கான எடுத்துக் காட்டு என எதுவும் இல்லை. கூட்டுத்தலைமையை அழித்த ஸ்டாலின் மார்க்சிய மரபில் இருந்திருக்கிறார். தேசியக் கலாச்சாரத்தின் பெயரில் இனப்படுகொலை புரிந்த போல்பாட் இருந்திருக்கிறார். மாவோவின் கலாச்சாரப் புரட்சிக் கொடுமைகள் இருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சி என்பது சோசலிச நாடுகளில் மூன்றாவது வர்க்கமாகச் சீரழிந்த வரலாறு இருக்கிறது. இதனை சோசலிசம் எனும் இலட்சியத்தின் அழிவாகப் பார்க்க முடியாது, இவை அனைத்தையும் வெவ்வேறு நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட சோசலிச மாதிரிகளின் சோதனை முயற்சியாகவே பார்க்க வேண்டும் எனும் பார்வையை இன்று மார்க்சீயத்தை மறுகட்டமைப்பு செய்யும் மாரக்சீயர்கள் பேசுகிறார்கள். இந்த நிலைபாட்டை நாம் ஒப்புக் கொண்டாலும், மார்க்சியம் முன்வைத்த சுரண்டலற்ற, அந்நியமாதல் நீங்கிய, அரசு உதிர்தலை நோக்கிய சமூகத்திற்கு, இதுவரை நடந்தவை பெரும்பாலானவை தீங்கு விளைவித்தன எனில் நாம் அவற்றை கறாராக நிராகரித்து விட்டுத்தான் மேலே செல்ல வேண்டும்.

இதற்கான கோட்பாடுகளை மறுவரையறை செய்வதற்கான முயற்சிகளை கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும், மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும், இலத்தீனமெரிக்க நாடுகளினதும் மார்க்சியர்கள் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். கடந்த கால் நூற்றாண்டில் ஆயிரக் கணக்கிலான நூல்கள் இது குறித்து எழுதப்பட்டுள்ளன. நியூலெப்ட் ரிவியூ, ரேடிகல் பிலாசபி, ரீதிங்கிங் மார்க்சிசம், ஹிஸ்ட்டாரிகல் மெட்டிரியலிசம் போன்ற அச்சிதழ்கள் இவ்வாறான கட்டுரைகளைத் தாங்கி வருகின்றன. ஆப்டர் பால், மார்க்சிஸ்ட் ரிவியூ ஆப் புக்ஸ், டிரான்ஸ் நேசனல் இன்ஸ்டிட்யூட், கலச்சர் அன்ட் ஹிஸ்ட்டரி போன்ற இணைய மார்க்சிய இதழ்கள் இதற்கெனவே நடத்தப்படுகின்றன. ஹிஸ்ட்டாரிகல் மெட்டிரியலிசம் இதழ்



அதிஅற்புதமான நூல் தொகுதிகளைக் கொண்டுவந்திருக்கிறது. இதில் மிகமுக்கிய மான நூல் எ கம்பேனியன் டு கன்டம்பரரி மார்க்சிசம் எனும் நூலாகும். ஜிஸாக், தாரிக் அலி, ஆன்டர்சன், அலைன் பதியு, கிரிகரி எலியட், சாம் சாயர்ஸ், அந்தோனியோ நெக்ரி, ரொனால்ட் மங்க், பிரெடரிக் ஜேம்ஸன்,ஜேம்ஸ் பெட்ராஸ் போன்றவர்கள் இந்தப் போக்கின் முக்கியமான கோட்பாட்டாளர்கள்.

அரபுப் புரட்சி, வால்ஸ்ட்ரீட்டைக் கைப்பற்றுங்கள் என்பதனை நாம் இடது சாரிகளின் மறுவருகைக்கான புதியவெளி எனவே பார்க்க வேண்டும். சோசலிசம் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது எனும்போது நாம் அதனை முதலாளித்து வத்தின் வெற்றி எனப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. முதலாளித்துவத்திற்கு மாற்று உலகம் சாத்தியம் என்பது இன்று இடதுசாரிகளின் ஒற்றுமை அரசியலாகப் பரிணமித்து வருகிறது. மார்க்சீயப் பகுப்பாய்வு என்பது ஒரு அறிவு வெளிச்சம். அது கடந்த காலத்தில் அனைத்து அறிவுத்துறைகளின் மீதும் மாபெரும் பாதிப்பைச் செலுத்தியிருக்கிறது. இன்றும் அது அவ்வாறாகவே பாதிப்புச் செலுத்தி வருகிறது. மார்க்சியம் இன்று நூறு நூறு பார்வைகளில் பயிலப்பட வேண்டும். நிரா-கரிக்க வேண்டிய கடந்த காலத்தைக் கறாராக நிராகரித்து, புதிய நிலைமைகளில் புதிய தேடல்களில் மார்க்சிய வெளிச்சம் பாய்ச்சப்பட வேண்டும். கருத்தியல் எனும் அளவில் உலகெங்கிலும் வாழும் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மனிதர்களின் விடுதலைக் கருத்தியலாக, விமோசனத் தத்துவமாக இன்னும் மார்க்சியமே இருக்கிறது என்பதனை அறிவார்ந்து சிந்திக்கிற எவரும் மறுக்கவியலாது.

**மார்க்சியம் ஒரு கடவுள் போன்ற மறைபொருள், அது சாத்தியமற்றது என கருத்துத் தெரிவிப்பவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

மார்க்சியத்திற்கும் மதங்களுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. இரண்டும் உலகளாவிய பார்வைகள். மனித வாழ்வின் அர்த்தம் குறித்து இரண்டும் பேசுகின்றன. இரண்டும் வேறு வேறு வாழ்க்கை முறைகள். மதங்கள் விண்ணில் சொர்க்கத்தைக் காட்டுகின்றன. மார்க்சியும் மண்ணில் படைக்க முயல்கிறது. இரண்டும் ஒரு வகையில் கனவு மயமான திட்டங்கள்தான். மதநிறுவனங்கள் மனித மேன்மைக்கு என்ன செய்தன எனப் பாருங்கள். மார்க்சியம் என்ன செய்தது எனப் பாருங்கள். தொழிலாளர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், சமூகநலத் திட்டங்கள், கல்வி, மருத்துவ நலம், சமூகப் பாதுகாப்பு இவை அனைத்தும் எந்த இயக்கத்தினது பெறுபேறுகள் எனப் பாருங்கள். காலனியாதிக்கத்திலிருந்து ஆசிய-ஆப்ரிக்க-இலத்தீனமெரிக்க மக்கள் விடுதலை பெற்றதன் ஆதார ஊற்று எதுவென உரசிப் பாருங்கள். இவற்றை நிறுவனமயப்படுத்தி நிரந்தரப் படுத்துவதற்கான ஆதர்ஷம் எங்கிருந்து வந்தது எனப் பாருங்கள், அவை மதங்களிடமிருந்தல்ல மார்க்சியத்திடம் இருந்துதான் வந்தன. அதனது ஆதார இடம் அக்டோபர் புரட்சி என்பதனை நாம் காணமுடியும்.

மார்க்சியம் மதம் போலவே ஒரு கற்பனா வுலகை முன்வைக்கிறது. சுரண்டலற்ற, ஒடுக்குமுறையற்ற, கருணை சுரக்கிற, அன்புமயமான, கலைகள் செழிக்கிற, அந்நியமாதலற்ற, ஆண்டான் அடிமை உறவுகள் அற்ற ஒரு கனவுலகை அது முன்வைக்கிறது. அதனை அடைவதற்கு அது பிரார்த்தனையை, சடங்குகளை வழிமுறை யாக வைப்பதில்லை. இரத்தமும் சதையுமான மனிதச் செயல்பாடுகளை முன்வைத்து அதற்கான ஸ்தாபனங்களை, அமைப்புக் களை அது உருவாக்குகிறது. கனவு காணுதல் என்பது மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வரம். அதனால்தான் கனவு காணுங்கள் என்றார் லெனின். மார்க்சியர்கள் கனவுமயமானவர்கள்தான். அதனால்தான் உலகின் மகத்தான இலக்கியவாதிகள், ஓவியர்கள், திரைப்பட இயக்குனர்கள், கோட்பாட்டாளர்கள், விஞ்ஞானிகள் மார்க்சியத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டவர் களாக ஆனார்கள். சாத்தியமற்றது எனக் கனவு காண்பதை மறுப்பது அல்ல மார்க்சியம். சாத்தியமற்றதையும் சாத்திய மாக்கக் கனவு காண்பதுதான் மார்க்சியம். புதிய கடவுளர்களை நாம் உருவாக்குவோம் என மார்க்சிம் கார்க்கி இதனால்தான் சொன்னான்.

தொடரும்...

யமுனா ராஜேந்திரன் சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உலக அரசியல், லத்தீன் அமெரிக்கா, சினிமா, மார்க்சிய விமர்சனம் போன்ற துறைகளில் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர் தமிழராக இலண்டனில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார். கோயம்புத்தூர் இவரது பிறப்பிடம். அண்மையில் ரொரண்ரோவில் நடைபெற்ற தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் விளம்பரத்துக்காக பிரத்தியேகமாக அளித்த பேட்டி இது.


**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

வருடாந்த கல்விசார்போட்டிகள் - 2012

(Educational Contest 2012 )

கொக்குவில் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் -கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்த கல்விசார் போட்டிகள்.

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச் சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: St. Stephen's Pressbyterian Church
3817 Lawrence Ave.East, Scarborough,Ontario, M1G 1R2

காலம்: ஜுலை 07, 2012 - சனிக்கிழமை - காலை 8:30 மணி
விண்ணப்ப முடிவுத் திகதி: ஜுன் 30, 2012

தொடர்புகளுக்கு : **(416) 293.2851 / (416) 414.3327 / (416) 283.5265**
**(416) 299.5083 / (416) 299.6645**

# 'முளிதயிர்....

## 23ஆம் பக்கத்தொடர்ச்சி

விரல்கள் (மேல்நாட்டுப் பெண்களில் அதிகம் பேர்) இரத்தம் பாயும் போது அதே நிறத்தில் வரும் காந்தள் புஷ்பங்களைக் கண்டுள்ளோம்.

'கழுவுறு கலிங்கம் கழாதுடீஇ': சேலைஉடுத்துப் பழக்கமின்மையால் அவசர வேலையில் அடிக்கடி நழுவும் சேலையை சொருகிச் சொருகித் திண்டாடுகின்றாள்.

குவளையுண்கண்: இந்துக்கலாச்சாரத்தில் குழந்தை பிறந்து 31ஆம் நாள் ஆணோ பெண்ணோ கண் மை பூசுவார்கள். மை தீற்றுதல் ஒழுங்காக ஐந்துவயது வரை நடைபெறும். ஐந்து வயதின்பின் ஆண்களுக்குத் தீற்றுவதில்லை. ஐம்பூதங்களில் ஒளிக்குரியது கண். சிறுபிள்ளைகளாய் இருக்கும்போது பிற ஒளிகளால் தாக்கப்படாமல் இருப்பதற்காக கரிய நிறமையைத் தீற்றுவார்கள். இன்றும் கண்ணுக்கு ஏதும் சிகிச்சை செய்ய வேண்டிவரின் ஆயுள்வேத வைத்தியர் ஆமணக்கம் விதை போன்றவற்றைச் சுட்டு அதே எண்ணெயில் குழைத்துக் கண்ணைச் சுற்றிப் பிறவளையம் போடுவார்கள். டாக்டர்கள் கறுப்புக் கண்ணாடி அணிய வைப்பார்கள். சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை பெண்களை வர்ணிக்கும்போது 'மையிட்ட கண்ணாள்' என எழுதாமல் விடார்கள். நமது கதாநாயகியும் மையிட்டிருக்கிறாள்.

**குய்ப்புகை கமழ:** எரிந்து கொண்டிருந்த அடுப்பு, பொங்கி வடிந்த நீரினால் நூர்ந்து புகை மண்டலமாக எழும்புகிறது. அதற்குரிய நாற்றத்தோடு உதாரணமாக சிகரெட் பிடித்தால் அதன் நாற்றம் காற்றில் கலந்து யாரோ புகைக்கிறார்கள் என்பது பலருக்கும் தெரிந்து விடும். மல்லிகை அல்லது இராசமல்லிகை பூத்தால் அதன் சுகந்தம் பல வீடுகளுக்குப் பரவும். இங்கேயும் என்னென்ன விறகுகள் வைக்கப்பட்டனவோ அதுவும் நன்றாக எரியட்டும் என எத்தனை விறகுகள் அடுப்புக்குள்ளே அடையப்பட்டனவோ புகைமண்டலம் அவளைச் சூழ்ந்து கண்ணை எரிய வைக்கின்றது. கண்ணீர் மல்கி கண்மையைக் கரைத்துக்கு கொண்டு முகத்தில் கோடு கோடாக இறங்கிக் காய்கிறது. சாதம் பதமாகிறது. புளியைக் கரைத்து விட வேண்டும்.

**தீம்புளிப்பாகர்:** இனிப்பும் புளிப்பும் கலந்த சாதம். தீம் என்பது இனிய என வந்தாலும் இங்கே ருசிமிக்க என எடுக்கலாம். அவசரமாகப் புளியைப் பினைந்து விதையையும்



தோலையும் நீக்கிப் பிழிந்து சாதத்துள் விடுகிறாள். துழாவுகிறாள். நழுவும் சேலையைப் புளிக்கையால் தழுவிப் பிடிக்கிறாள். இந்த ஈரப்பத சேலையில் புகை படிகிறது. கமழ என்பதை நாம் நறுமணத்துக்கே அதிகமாகப் பயன்படுத்துவோம். எனவே நறும்புகை எனக் கொள்ளலாமோ? நல்ல ஜாதி மரங்களின் புகை உடம்புக்கும் நல்லது. கிருமிகளை நாசம் செய்யும் வல்லமை பொருந்தியது. கொசு, நுளம்பு போன்ற இம்சை தருவனவற்றை விரட்ட வல்லன. விறகுகள் எவை எனச் சொல்லப்படாவிட்டாலும் ஜாதிமரங்கள் தாம் என அனுமானம் செய்து கொள்ளலாம். இத்தனை அல்லோல கல்லோலங்களுக்கிடையே கணவன் வந்து விட்டான். தெருவிலே விளையாட்டித் திரிய வேண்டிய வயதில் தன் மனைவி பட்டிருக்கும் பாட்டைக் கண்டு பதறுகிறான். பரிதாபப்படுகிறான். புகைமணத்துடனும் அழகு முகத்தை மறைத்த கரிக்கோடுகளுடனும் பிசுக்கும் அழுக்கும் நிறைந்த ஆடையுடனும் முத்துப்பல்லைப் 'பளிச்' எனக் காட்டிக் கொண்டு நிற்கும் மனைவி.

மிகமிக அழகாகக் காட்டிக் கொண்டு நிற்பவளைக் கண்டு காதல் பொங்கக்கண்காணிக்கிறான். திரும்பிப் போகவேண்டிய கணவனுக்கு உணவு பரிமாறுகிறாள். இத்தனை அலங்கோலங்களும் அவனுக்குத் தெரியவில்லை. அவளது அன்பு, அவளது பரிதாபமானதோற்றம் அனைத்தும் உள்ளத்தைக் களிக்க வைத்து பீறிட்டு வந்த காதலின் சுவையில் புளி கூடி அடிப்பிடித்த சுவையற்ற உணவு என்பதை உணர வைக்காது அவளை மட்டுமே சுவைப்பது போல 'ஆகா! இனிது இனிது' என உணர்ந்து சொல்கிறான். அதைக்கேட்ட அவளது கரிக்கோடுகளிட்ட புகைபடிந்த முகம் பூரிப்பால் ஒளி வீசுகிறது.

பரிதாபம் என்பது காதல் அல்லது அன்பு தோன்றுவதற்கு ஒரு காரணமாகும் எனும் தத்துவம் (Pity is akin to love) என எழுந்தாளர்களிடையே சர்ச்சை ஏற்பட்டு பல இங்கிலிசு நாவல்கள் போட்டி போட்டு வந்தன. காதல் என்பதன் இலக்கணம் வேறுவகையாகச் சித்தரிக்கப்பட்டது. பரிதாபத்தோடு தொடங்கிய காதல் மெல்ல மெல்ல அழிந்து போவதாக; பரிதாபத்துக்குரியவர் தமது உரிமைகளை திரும்ப பெற்றுக் கடமையாற்றும் போது மற்றவர் அதை விரும்புவதில்லை என்பதாக; பரிதாபப்பட்டவரோ பரிதாபத்துக்குரியவர் எப்போதும் தமக்கு அடிமைபோல் தன் சொற்கேட்டு நடக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் கருத்துக்கள் பரிமாற்றம் பெற்றன. இவை இங்கிலிசு பெண் எழுத்தாளர்களிடையே போட்டி மனப்பான்மையை வளர்த்து நாவல்களை எழுத வைத்தன.

இவற்றை ரமணிச்சந்திரன் அப்படியே உள்வாங்கி வகைவகையான உத்திமுறைகளை கையாண்டு தமிழ்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்




அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
CURRY (CHILLI) POWDER
900g
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru
BRAND ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru
நிரு பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# மிஷெல் ஒபாமா - உலகில் மிகவும் செல்வாக்கு உள்ள பெண்




மிஷல் ஒபாமா (Micelle Obama) அமெரிக்காவின் 'முதல் பெண்மணி' (First Lady) மட்டும் அல்ல. அவர் பல பொதுவிடயங்களில் ஈடுபடுவர். அவர் இராணுவ குடும்பங்களுக்கு உதவுவார், பெண்களுக்கு உதவுவார், பொது சேவையை செய்வதை ஊக்குவிக்கிறார், கலை, படிப்பை ஊக்குவிக்கிறார், குடும்பங்கள் சுகமாக இருத்தலை ஊக்குவிக்கிறார் இன்னும் பல விடயங்களையும் செய்கிறார்.

மிஷல் லவான் றொபின்சன் (Michelle Lavaughn Robinson) 1964 ஆம் ஆண்டு ஜனவரி 17இல் சிகாகோவில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் Fraser Robinson (தந்தை) மற்றும் Marian Sheilds (அன்னை) ஆவர். அவருடைய அப்பா வழி பாட்டனின் பாட்டனும், அம்மாவழி பாட்டியின் பாட்டியும் அடிமைகளாக இருந்தனர்.

மிஷல் சட்ட படிப்பு முடித்த பின்னர், Sidley Austin சட்ட நிறுவனத்தில் சேர்ந்தார். அங்கு அவர் பராக் ஒபாமா (Barack Obama) வை சந்தித்தார். அவர்கள் ஒக்ரோபர் 1992 இல் திருமணம் செய்தார்கள். அவர்களுக்கு Malia (1998) மற்றும் Natasha (2001) என இரு மகள்கள் இருக்கிறார்கள். மிஷல், தனது கணவன் முதலில் அமெரிக்க தேர்தல் பிரசாரம் செய்யும் போது, அவருக்கு அதில் விருப்பமில்லை. அவருடைய பிள்ளைகளுக்கு எதிர்மறை (Negative) விளைவுகள் ஏற்படும் என அஞ்சினார். ஆனால் பெப்ரவரி 2008 க்கு பின்னர் அவர் தேர்தல் பிரசாரத்தில் அதிகம் பங்கு பற்றினார். அருடைய கணவன் அமெரிக்க அதிபர் ஆனதால், மிஷல் முதல் ஆபிரிக்க - அமெரிக்க முதல் பெண்மணியானார். இதன் பின்னர் மிஷல் உலகில் மிகவும் செல்வாக்குள்ளவரானார்.

மே 2006 இல் 'Essence' அவரை உலகில் முதல் 25 'மற்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் பெண்களில்' ஒருவராக தேர்வு செய்தனர். 'Vanity Fair' அவரை உலகின் முதல் 10 'அழகாக உடுக்கும் பெண்களில்' ஒருவராக தேர்வு செய்தனர். அவருடைய அழகிய உடுக்கும் முறையினால் அவரை Jacquline Kennedy போலவும், ஒழுக்க முறையினால் Barbara Bush போலவும் கருதுகிறார்கள்.

அவருடைய இலட்சியம் ஒன்று, 21 ஆம் நூற்றாண்டில் உடல் பருத்தலை (Obesity) சிறுவர்களில் குறைப்பதாகும். இதற்காக 'Let's Move' என்னும் அமைப்பை தொடக்கிவைத்தார்.



**ஞா. ஆரணி**
அகவை 13

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


HomeLife / GTA Realty Inc., Brokerage*

*Independently Owned and Operated



Gulshan Sharma, B. Eng.
Broker

Cell: 416.407.5911

5215 Finch Ave. E. # 203 Toronto, ON.
Office: 416.321.6969

MARKHAM & 14TH AVE.
Spacious new 1220 Sq.ft Retail or Restaurant use unit. Great exposure in a new plaza (New Delhi Drive).
Available for Sale / Lease.
Immediate occupancy.

Busy supermarket Convenience.
Long established and well known in Scarborough (MIDDLEFIELD RD.) area.
Lotto 649.
video income.
Asking only $139, 900.

KENNEDY & FINCH
Prime Office / Retail / Restaurant.
Can be divided into smaller units.
Lots of parking. Upto 4600 Sq.ft.
Situated on Finch Ave.

MARKHAM & DENISON
Busy Supermarket / Sri Lankan South Indian. Well known and long established
Very resonable price.

# இராஜபூக்கள் - கலைவிழா - 2012

சிவத்தமிழ்வாணி திருமதி பூங்கோதை அமுதனின் 'இராஜபூக்கள்' தமிழ்கலைக் கல்லூரி தனது 14வது ஆண்டு கலைவிழாவை யூன் 02, 2012 ஆம் நாள் கனடா கந்தசாமி கோவில் அரங்கில் கொண்டாடியது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக மகாஜனா கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.பொ. கனகசபாபதி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக திரு. சிவபாலு மாஸ்டரும் Toronto Collegiate Institute அதிபர் சிவாஜி (திரு. சிவம் மகாலிங்கம்) அவர்கள் அவரது பாரியார் சகிதமும் வந்திருந்தார்கள்.

கலைவிழா மாலை 5.30 மணியளவில் மங்கல விளக்கேற்றுதல், கனேடிய தேசியகீதம், தமிழ்தாய்வாழ்த்து மற்றும் அமைதி வணக்கம் என்பவற்றுடன் ஆரம்பமானது. தனுஷியா ஜெயகாந்தன் தனது வரவேற்புரையில் பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்களையும் சபையோரையும் வரவேற்றார். இவ்விழாவை பிரியா சிவானந்தன் தொகுத்து வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகள் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமானது. அதை தொடர்ந்து 'அபிராமிப்பட்டர்' நாடகம் நடைபெற்றது. இந் நாடகத்தை இம்மாணவர்கள் மூன்றாவது தடவையாக மேடையேற்றுவதால் மாணவர்கள் இடையே தயக்கம் இன்மையும் அனுபவமும் தெரிந்தது. அபிராமி அந்தாதியை இசைத்தட்டின் ஒலியுடன் சேர்ந்து பாடி அபர்ணா அரிதாஸ் அபிராமிப்பட்டராகவே மாறி உணர்ச்சி பூர்வமாக நடித்திருந்தார். அடுத்து 'அணிநடை' அபிநயப்பாடல் நிகழ்வு நடந்தது.

இவற்றை தொடர்ந்து 'பதின்ம வயதினர் பெற்றோரின் அறிவுரையையா அல்லது நண்பர்களது சொல்லையா கேட்கிறார்கள்' என்ற பட்டிமன்றம் திருமதி வாசுகி நகுலராஜா நடுவராக இருக்க நடைபெற்றது. இதில் நண்பர்கள் கூறுவதைத் தான் கேட்பதாக கூறிய மாணவர்களது காரணங்கள் பெற்றோர்களை சிந்திக்க வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பெற்றோர்கள் தங்களது நீண்டகால நல்வாழ்வை நோக்காக வைத்தே அறிவுரை கூற முற்படுவதாகவும் தங்களது அன்றாட பிரச்சினைகளை பொறுமையாக இருந்து கேட்டு ஆலோசனை வழங்காமல் அவற்றை சின்ன விடயமாக தட்டிக் கழித்து விடுகிறார்கள் என்றார் ஒருமாணவி. நண்பர்களோ அன்றாட பிரச்சினைகளை பொறுமையாக இருந்து கேட்டு சரியோ, பிழையோ தமக்கு ஒரு தீர்வை எடுக்க உதவுகிறார்கள் என்றார். பட்டிமன்றத்தை தொடர்ந்து ஐதிலா யோகேஸ்வரனின் 'நல்லதோர் வீணை செய்து' பாரதியார் பாடலுக்கான நடனம் நடைபெற்றது.

திரு. சிவபாலு மாஸ்ரர் சிறப்பு விருந்தினர் உரையில் ரொறொன்ரோவில் வாழும் தமிழ் மக்களில் மிகவும் சிறுபான்மையினரே தமது பிள்ளைகளை தமிழ் கற்க அனுப்புகிறார்கள் என்றார். இதனால் கல்வி அமைச்சால் தமிழ் படிப்பிக்க வழங்கப்பட்ட சலுகைகள் தமிழ் மாணவர்களால் போதிய அளவு உபயோகிக்கப்படாதபடியால் நிற்பாட்டப் படக்கூடிய நிலைக்கு வந்துள்ளதாக கூறினார்.



அடுத்ததாக சௌமியா மற்றும் சாமினியின் வழிநடத்தலில் கவியரங்கம் ஒன்று நடந்தது. இதில் 13 மாணவர்கள் 'தமக்கு பிடித்தவர்கள்' என்ற தலைப்பில் அம்மா, அப்பா, நாய்க்குட்டி, ஒபாமா, கோதை ரீச்சர், அன்னை திரேசா மற்றும் இசை (Justin Bieber) பற்றிய கவிதைகளைப் படித்தார்கள். கலை நிகழ்வுகளின் இடைஇடையே மாணவர்களது 'திரையிசை நடனங்கள்' நடைபெற்றன. முதலாவது 'திரையிசை நடன' நிகழ்வைத் தொடர்ந்து 'அபிநய பாடல்' நிகழ்ச்சியும் அதை தொடர்ந்து 'உழவர் திருநாள்' பற்றிய நடன நிகழ்வும், 'கலோவின்' அபிநய பாடலும் நடைபெற்றன. விழாவில் இடைஇடையே S.T செந்தில் நாதனின் 'தமிழோடு தமிழ் பேசலாம்' போட்டி நிகழ்வு நடைபெற்றது. இதில் ஐவர் பங்குபற்றியிருந்தாலும் ஒருவராலும் செந்தில் நாதனுடன் மூன்று நிமிடங்கள் தொடர்ந்து கதைக்க முடியவில்லை.

கலைவிழாவின் இரண்டாவது பட்டிமன்றத்தில் கணபதி இரவீந்திரன் நடுவராக இருக்க பத்து மாணவர்கள் தமிழ் கற்று தமிழில் கதைப்பது தேவையா? இல்லையா? என விவாதித்தார்கள். தமிழ் பெற்றோர்களே தமது பிள்ளைகளுடன் தமிழில் கதைக்காமல் இருக்கும் போது பிள்ளைகளாகிய தாம் ஏன் தமிழில் கதைக்க வேண்டும்? என தமிழில் கதைக்க தேவையில்லை என்ற பக்கத்திற்கு வாதிட்ட மாணவர் ஒருவர் கேட்டார்.

அடுத்த நிகழ்வாக 'என்மகள்' முத்தமிழ் நிகழ்வு நடைபெற்றது. இதில் ஒரு தாய் எவ்வாறு தனது மகளை பெற்று, சீராட்டி வளர்த்து, கல்வி புகட்டி, அன்றாட கடமைகளை செய்து வளர்க்க, மகள் கன்னியாகியதும் காதலில் விழுந்ததை கண்டு துடிப்பதும், பின்னர் நிலமையை உணர்ந்து அவளை காதலனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதும் நன்றாக நடித்து காணப்பிக்கப்பட்டது. இதில் சாமினி சாந்தலிங்கம் உட்பட 30 மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள். கன்னிப் பெண்ணாக வந்த திவ்யா மற்றும் அவரது காதலனாக வந்த ஆரணி அவர்களுடைய 'நறுமுகையே நறுமுகையே நீ ஒரு நாழிகை நில்லாய்' என்ற பாடலுக்கான நடிப்பு நன்றாக இருந்தது. இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த இலங்கை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. ஈழவேந்தன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் 1904இல் சேர் பொன் இராமநாதன் சிங்களமக்களுக்கு கூறியதையேதான் இப்போது தமிழ் மக்களுக்கு தான் கூறுவதாகவும், தமிழ் மொழியை தமிழ் மக்கள் பேசாவிட்டால் வேறுயார் தமிழ் பேசுவார்கள் என்றார்.

இவற்றை தொடர்ந்து வந்த 'யார் சிறந்தவர்கள்? நிகழ்ச்சியில் பறவைகள், பூச்சிகள், குரங்கு, யானை, மரம் என்பவற்றுடன் மனிதனும் தாங்கள் ஏன் சிறந்தவர்கள் என்று கூறினார்கள். இவற்றில் சிலர் கேட்ட கேள்விகள் சிந்தனையை தூண்டக்கூடியவை. ஒழுங்காக இலக்குத் தவறாது மரத்திற்கு மரம்தாவும் குரங்குகளை பார்த்தும் மனிதன் ஏன் தமது நிலையில்லாத மனத்தை குறிப்பதற்காக 'குரங்குமனம்' என்கிறார்கள் என குரங்கு கேட்டது. மனிதர்களில் தான் தேவைக்கு அதிகமாகி சாப்பிடுபவர்கள் இருக்கும் போது மனிதன் ஏன் 'யானையை கட்டி தீனி போட ஏலுமா' என்கிறான் என்று யானை கேட்டது. எவ்வளவோ பயன்களை மரங்கள் தரும்போது மனிதன் ஏன் ஒன்றுக்கும் உதவாதவனை பார்த்து 'மரம்' என ஏசுகின்றனர் என மரம் கேட்டது.

இராஜபூக்கள் நிகழ்விற்கு ஜேர்மன் நாட்டில் இருந்து வந்து கலந்து கொண்ட கணேசு நவரட்ணம் 'காலங்களில் அவள் வசந்தம்' என்ற சினிமா பாடலை பாடி சபையோரை மகிழ்வித்தார். இவ்இசையை தொடர்ந்து பிரதம விருந்தினர் பொ. கனகசபாபதி அவர்கள் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் அபிராமிப்பட்டர் நாடகத்தில் அம்மனாக வந்து அசையாமல் இருந்த மாணவியின் திறமையையும் பொறுமையாகவும் மெச்சினார். பட்டிமன்றத்தில் கலந்து தமிழ் கதைக்கத்தேவையில்லை என மகனை தனது சொந்த கருத்தை கூறவிட்ட கோதை அமுதனின் ஜனநாயக பண்பை புகழ்ந்தார். திரு. பொ. கனகசபாபதி அவர்கள் மூன்று தொலைக்காட்சி நிறுவனங்கள் மண்டபத்தில் நடுவில் நின்று விழாக்களை ஒளிப்பதிவு செய்து கொண்டு இருந்தது. பார்வையாளர்களுக்கு நிகழ்வுகளை பார்ப்பதற்கு இடைஞ்சலாக இருந்தது என்றும், அது பெரும்பாலானோர் விழா முடியும் வரை நிற்காமல் இடையில் போனதிற்கு ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் கூறினார். இனிவரும் நிகழ்வுகளில் பார்வையாளர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஒளிப்பதிவு செய்யும் முறை ஒன்றை இந்நிறுவனங்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பிரதமவிருந்தினர் உரையை தொடர்ந்து சிவசிறி பஞ்சாட்சர விஜய குமாரகுருக்கள் தனது வாழ்த்துரையை வழங்கினார். வாழ்த்துரையை தொடர்ந்து 'நட்பு' நாடகம் நடைபெற்றது. இதில்



அருந்ததி ஞா.

தொடர்ச்சி 40ஆம் பக்கம்



AYURVEDA

MASSAGE GOOD FOR HEALTH & PAINS

Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.

**Women For Women, Men For Men - 416.434.9251**



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# இன்னொரு...

**பாகம் - 4**
**பகுதி 42**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

**◊ சி.வி. நாதன் ◊**

இன்னமும் முடியவில்லை
மழை விட்டும்,...
நான்சி! அழகாக இருந்தாள். உயரமாக, பருமனில்லாமல் சிறிய குதிரைவால்க் கொண்டையுடன் இருந்தவளில் எங்கேயோ இந்தியச் சாயலும் தெரிந்தது. தாயாரோ அல்லது தகப்பனாரோ இந்தியாவைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும்.

முப்பதுகளின் ஆரம்பப் பகுதியில் இருக்கும் அவளது முகத்தில் எப்பொழுதும் புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கும் போல் தெரிந்தது.

'மிஸ்டர் சான், புரபெசர் ஜென்கின்சோ இன்னமும் அரை மணித்தியாலத்தில் வந்து விடுவார். அதுவரையில் நீங்கள் காத்திருப்பீர்கள்தானே'

'ஓமோம் காத்திருப்பேன். நன்றி' என்றவர் அந்த அறையைச் சுற்றிப் பார்த்தார். அறை சுத்தமாக இருந்தது. மூலையில் ஒரு தாங்கியில் வெள்ளை மேலங்கி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. புரபெசர் ஜென்கின்சோவினுடையதாக இருக்க வேண்டும். 'நீங்கள் தயவுடன் இப்படி அமருங்கள்' என்றவள் அவர் இருப்பதற்கான இருக்கையைக் காட்டினாள்..

புரபெசரின் மேசைக்கு முன்பாக இருந்த இருக்கையில் அமர்ந்தார் சான். இருக்கை வசதியாகத்தான் இருந்தது.

காலை பத்தரைக்குத்தான் சந்திப்பதாக இருந்தது. ஆனாலும் நேரம் முந்தியே வந்திட்டார் சான்.

'பத்தரையில் இருந்து பதினொரு மணிவரையிலும்தான் பொதுவாக பிரேக் எடுக்கிறவர், புரபெசர். இன்றைக்கு உங்களது சந்திப்பால் ஒரு மணித்தியாலம் பிரேக் எடுக்கப் போகிறார்' புன்னகையுடனே கூறினாள்.

'நல்லது நான் அதை வரவேற்கிறேன்:' என்ற சானிடம் திருப்பிக் கேட்டாள் 'ரீ, கோப்பி அல்லது எதாவது குளிர்பானம்?' நான்சி தலையைத் திருப்பி சானைப் பார்த்துக் கேட்டாள் சான் மெதுவான யோசனையுடன் அவளைப் பார்க்க, 'புரபெசர் பிரேக் நேரம் ரீயும் பிஸ்கட்டும் எடுப்பார். அவருக்கு ரீ போடப் போகின்றேன். உங்களுக்குமாகப் போடவா? எனக்கு ஒரு சிரமமும் இல்லை.'

'ஓக்கே' என்றார் சான்.

தேனீருக்கான ஆயத்தங்களை நான்சி செய்து கொண்டிருக்கையில் புரபெசர் ஜென்கின்சோ அறைக்குள் வந்தார்.

அறுபது வயது இன்னமும் வரவில்லை. நல்ல நேரான கூரிய மூக்கின் மேல் கண்ணாடி அணிந்திருந்தார். கண்ணாடியின் வில்லைகள் நல்ல தடிப்பாக இருந்தன. வெண்ணிற முடி சிலும்பிப் போய் இருந்தது, வாரிவிடாதது போல். உச்சியில் முடி ஏதுமில்லை. நல்ல வெண்மையாய் மினுங்கிக் கொண்டிருந்தது. முதுகுப் பக்கம் சற்று வளைந்திருந்ததால் அவரது சரியான உயரத்தைக் கூறமுடியவில்லை.

வெள்ளை மேலங்கியை வலது கையில் கொண்டு வந்தவர், அதைத் தாங்கியிற் கொழுவிவிட்டு, சானின் பக்கமாய்த் திரும்பி, 'ஹலோ மிஸ்டர் சான்' என்று கூறியபடியே சானிடம் வந்தார்.

வழமையான அறிமுகம், குசல விசாரிப்புகள் எல்லாம் முடிந்ததும், ஜென்கின்சோ கேட்டார்

'சரி, உங்களுக்கு நான் எவ்விதம் உதவலாம், மிஸ்டர் சான்'

ஜென்கின்சோ, அடிப்படைத்துகள்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர். அவருக்கு உதவியாகத்தான் நான்சி இருக்கின்றாள்.

அண்மையில் இவர்கள் இருவரும் வெளி விட்ட அறிக்கை ஒன்று மிகவும் பிரபல்யமாக இருந்தது. பேரண்டத்தின் ஆரம்பத் துகள்கள் பற்றிய இவர்களது கட்டுரை ஒன்று விஞ்ஞானச் சஞ்சிகையில் வெளி வந்திருந் தது. அதனை வாசித்த பின்னரே சான் புரபெசர் ஜென்கின்சோவைச் சந்திப்பதற்கு விரும்பி அனுமதியும் பெற்றிருந்தார்.

'நான் பல்பேரண்டங்கள் பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.'

புரபெசர் மூக்குக் கண்ணாடியைக் கீழே இழுத்துவிட்டு, சானைப் பார்த்தார். சான் எங்கு வேலை செய்கிறார், அவருக்கிருக்கும் செல்வாக்கெல்லாம் ஓரளவுக்குத் தெரிந்தும் வைத்திருக்கின்றார்.

நான்சியைத் திரும்பிப் பார்த்துவிட்டு,
'பல்பேரண்டம் பற்றியென்றால்'

'பல் பேரண்டம் என்பது உண்மையா? அப்படியிருந்தால் அங்கேயும் உயிரினங்கள், மனிதர்களைப் போல புத்திசீவிகளாய் இருக்க, அல்லது வர வாய்ப்புண்டா? அது எப்படி? இவை போன்ற கேள்விகளுக்கு விடை காணவேண்டிய நிலையில் இருக்கின்றேன்'

நாசாவிற்கும் ஜென்கின்சோவின் ஆய்வு மையத்திற்கும் நிர்வாக நிலையில் தொடர்பு கள் ஏதுமில்லை. ஆனாலும் பல சிக்கல் களுக்கான தீர்வுகளை, விளக்கங்களை ஜென்கின்சோவின் ஆய்வு மையம் நாசா விற்கு தந்துதவியுள்ளது.

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

Train to be a ...
Community Service Worker With CO-OP

Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER ontario association of career colleges
citi COLLEGE
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify

# முழுதுக்கும் முதல்வியை தொழுதல் விழுமிய வாழவளிப்பாள்!

நீலத்திரைகடல் நித்தமும் முத்தம்தரும் பக்திவளம் மிக்க சக்தி பீடமாக விளங்குவது நயினாதீவு. வரலாற்றுச் சிறப்பும் வற்றாத அருள் வளமும் உடையது இச்சிறுதீவு. சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் இத்தீவில் சர்ப்பம் தொழுதேற்றிய சர்வவல்லமையுடைய சக்திபீடம் அமைந்துள்ளது. கடல்சூழ் நயினையில் காக்கும் தெய்வமாக அருள்மழை பொழிகின்றாள். அம்மை நாகபூசணி, நாகம் பூசணை புரிந்ததால் அம்மை நாகபூசணி ஆயினள். ஆடிவரும் ஓடமதில் நாடி வரும் பக்தர்களுக்கு தேடிடும் சுகம் பெற, வளம் பெற கூடி நின்று அருள் சுரப்பவள் அன்னை. பயத்தினாலும் பக்தியினாலும் பராபரையின் பாதாரவிந்தங்களை பரவுதற்கு பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் ஆனி மாதத்து, ஆண்டு மகோற்சவத்தில் அன்னையின் ஆலயம் அணைந்து தொழுதும் அழுதும் பாடியும் ஆடியும் கூடி நிற்பர். அன்னையின் அருள் மழையில் நனைந்து மருள் நீங்கி ஆனந்தக் கூத்தாடுவர்.



சர்வமும் சக்தி மயம், ‘எங்கெங்கும் காணினும் சக்தியடி’ என்று பாடினார் பாரதி. உலகங்களும், உயிர்களும் ஊழி முதல்வனும் கூட சக்தியைச் சார்ந்தே தொழிற்படுவனவாகும். ‘சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்’ என்பது திருவருட்பயன். பரமசிவன் கூட பராசக்தி இன்றி செயற்படமுடியாது. பாரொடு விண்ணாய் பரந்த எம்பரற்கு பாகமாய் பாதியாய் உடையவள் சக்தி.

சக்தி என்றால் ஆற்றல், வல்லமை, இயக்கம், உந்துதல், செயல்திறன், சாமர்த்தியம் என்று பல பொருள்படும். சக்தியின் இயல்பிற் கேற்பவே செயல்திறனும் அமைகின்றது. சக்திமிக்கவன் வல்லவன். சக்தி மிக்கநாடு வல்லரசு. சக்திக்கு வல்லாம்பிகை என்ற பெயரும் உளது. சக்தியை முழுமுதலாகக் கொண்ட சமயம் சாக்தம். சக்தியை வழிபடுவோர் சாக்தர்கள். சக்தி வழிபாடு மிகவும் தொன்மையானது. நமது வழிபாட்டிற்குரிய கடவுள் வடிவங்கள் எல்லாவற்றிலும் மிகவும் தொன்மையானது சக்தி வடிவம் தான். சக்திக்குரிய ஆலயங்கள் பலவுண்டு. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இலங்கையின் சக்திபீடமாக இலங்குவது நயினை நாகபூசணி அம்மை ஆலயம். புவனேஸ்வரி பீடம் என இது அழைக்கப்படுகின்றது. ஏகசக்தியை இவ்வாறு பாடியுள்ளார் சுத்தானந்த பாரதியார்.

**ஏகசக்தி இன்ப வரம் தரும்**
**யோக சக்தி உயிர்க்குயிராகிய**
**போக சத்தி புனித பராசக்தி**
**நாகபூசணி நாரணி அம்மையே!**

**அல்லலை நீக்கி அருள் பாலிக்க வேண்டும் என்று பராசக்தியிடம் விண்ணப்பம் செய்கின்றார் பக்தர் ஒருவர்.**

**தெய்வீகமே அன்பருளச் சீர்கோயில் வாழ்விளக்கு**
**பொய்தவிர்ந்த மெய்ஞானப் பூரணமே செய்சிறந்த**
**நல்ல நயினைப் பகுதியில் நாகராசேஸ்வரியே**
**அல்லலை நீக்கியருள்!**

தாய் சேய் உறவு தரணியில் தன்னிகரற்றது. தாய்தனை சேய்மறந்தாலும் சேய்தனை தாய் மறப்பதில்லை. அது தாவிப்படரும் தன்மையது. துணையாகவும் பிணையாகவும் இருப்பவள் அன்னை. ஆண்டவனை பற்றிய அப்பர் தேவாரம் தாயவளுக்கும் பொருந்தும்.

அருந்துணையை அடியார் தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத்தகத்துள் தோன்ற
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்கள் அகத்தடக்கி மடவாரோடு
பொருந்தனைமேல் வரும்பயனை போகமாற்றி
பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கென்றுவிட
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானை
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!

அன்னையின் அநேக திரு நாமங்களை அனுதினமும் அசைபோட்டால் நன்மைகள் ஆனந்த மயமாக விளங்குபவள் அன்னை. அவளை மறவாது நினைமின் என்பதே அபிராமி பட்டர் ஆணை.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது துன்மலர்த் தாள்
ஒன்று மரும் பொருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே!

‘தன்னை மலர் தூவித் தாள்கள் தொழுதேத்த எண்ணும் அடியவர்க்கில்லை இடுக்கண்ணே’ என்பதற்கேற்ப அன்னையின் அடிக்கமலங்களை அகத்தில் நிலை நிறுத்தினால் பாதக மலங்கள் நீங்கும். செல்வோம் வாரீர் திரு நயினைப்பதிக்கு.

ஆத்தாளை ஆதியந்தம் இல்லாதாளை அகிலமொடு
சரமனைத்து எங்கும்
பூத்தாளை அருமறையின் பொருளினாளை
பொருப்பரையன் புத்திரியாய் பூ
காத்தாளை மாதுளம்பூ நிறத்தினாளை கடல்புடைசூழ்
தரு நயினார் தீவில் இன்பஞ் சேர்த்தாளை
அடியார்க் கருளுவாளை திரு நாகபூசணியை தரிசிப்போமே.



நா. க. சிவராமலிங்கம்

# இன்னொரு

### 35ஆம் பக்கத்தொடர்ச்சி

புரபெசரின் கண்களில் ஆர்வம் பொங்கியது. அணுக்களைப் பற்றியும், அடிப்படைத் துகள் கள் பற்றியும் விளக்கம் சொல்வதெனில் அவருக்கு இனம் தெரியாத பூரிப்பு ஏற்படும்.

‘அவை பற்றி அண்மையில்தான் ஒரு கட்டுரையை எழுதியிருந்தோம். இருப்பினும் உங்களுக்கு அவற்றினை மீண்டும் எடுத்துச் சொல்வதில் எங்களுக்கு மகிழ்ச்சிதான்’ என்றவர், நான்சியின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார். அதன் கருத்தினை உணர்ந்த நான்சி,

‘அது பற்றித் தெளிவான விளக்கம் பெற வேண்டுமெனில் நாங்கள் இன்னொரு அறைக்குப் போவது வசதியாக இருக்கும் என நம்புகின்றேன்’ என நான்சி கூற, ஏதோ நினைத்தவராக,

‘இல்லை நான்சி, இங்கேயே பார்க்கலாம். நீங்கள் அந்த விளக்கப்பட அட்டையை மாத்திரம் இங்கு கொண்டுவந்தால் போதுமென எண்ணுகின்றேன்’ என்றார் ஜென்கின்சோ.

‘அதுதான் நல்லது நானும் அதைத்தான் விரும்புகின்றேன்’ என சானும் கூற, அறையை விட்டுவெளியே சென்ற நான்சி சில நிமிடங்களில் கையில் ஒரு தடித்த அட்டையைச் சுருட்டிக் கொண்டுவந்தாள். வுந்தவள், அவ்வட்டையை சானின் முன்னால், மேசையில் விரித்து வைத்தாள்.

சான் அட்டையைப் பார்த்தார். பல வட்டங்கள் சிறியனவாகவும், பெரியனவாக வும் தொடர்ச்சியாக வரையப்பட்டிருந்தன. படங்களின் அடியிலும், அருகிலுமாக விளக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. பொதுவாகவே கருப்பு நிற மையால் எழுதப்பட்டிருந்தாலும், சில சொற்கள் சிவப்பினாலும், வேறு சில எழுத்துக்கள் பச்சையிலும் இருந்தன. மஞ்சள், ஊதா நிறங்கள் கூடப் பாவிக்கப்பட்டிருந்தன. படங்களும் கூட பல நிறங்களில் இருந்தன. அந்த அட்டை கவர்ச்சியாக அழகாகக் காணப்பட்டது. விளக்கங்களில் சில கீறப்பட்டுத் திருத்தப்பட்டும் இருந்தன. சானுக்கு கொஞ்சம் விளங்கினது போல இருந்தாலும் முற்றிலும் தெளிவுபடவில்லை.

நெற்றியைச் சுரக்கிக் கொண்டு நிமிர்ந்தவர், இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். உங்களின் உதவி தேவை என்பது போல இருந்தது அந்தப் பார்வையில். தொடரும்...

## நவீன தமிழ் அரங்கியல் ஷேக்ஸ்பியரிலிருந்து ந. முத்துசாமி வரை

பிரபல தமிழ் எழுத்தாளரும், இலக்கியவாதியுமான திரு. எஸ் ராமகிருஷ்ணன் அவர்கள் “நவீன தமிழ் அரங்கியல் ஷேக்ஸ்பியரிலிருந்து ந. முத்துசாமி வரை” என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

**காலம்:** 20 June 2012, புதன்கிழமை மாலை 6:30 மணி
**இடம்:** கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய மண்டபம்
***635 Middle field Road, Scarborough - ON M1V 5B8***

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் . பிரவேசம் : இலவசம்

- மனவெளி கலையாற்றுகுழு

# மனம் கொத்திப்பறவை - திரை விமர்சனம்



- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

விஜய் டிவி சிவ கார்த்திகேயன் கதா நாயகனாக நடித்து வெளிவந்திருக்கும் இரண்டாவது படம். டிவியில் இருந்து சினிமாவுக்கு வந்து நகைச்சுவை நடிகராக கலக்கிக் கொண்டிருக்கும் சந்தானம் மாதிரி வருவார் என சிவகார்த்திகேயன் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நம்பிக்கையைக் காப்பாற்றுவாரா மாட்டாரா என்பதற்கு இந்தப் படம் பதில் சொல்கிறது. எப்படி என்று பார்ப்போம்...

கதை:

ஒரு காரில் சிவா தன் கிராமத்துக்குள் வருகிறார். காரில் யார் வருகிறார் எனப் பார்த்து, சிவாவை அடையாளம் தெரிந்து கொண்ட அவரது நண்பர்கள் தலைதெறிக்க காரை தொடர்ந்து ஓடி வர்றாங்க. கார் ஒரு வீட்டு முன்னால் நிற்கிறது. அந்த வீட்டுக்கு எதிர்ப் பக்கம் ஒரு பெரிய வீடு. காரில் இருந்து இறங்கும் சிவா, அந்த வீட்டைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டே, நம்மிடம் அவரின் கதையைச் சொல்கிறார்.

சிவா வீட்டுக்கு எதிர்ப் பக்கம் இருக்கும் அந்த பெரிய வீடு கதாநாயகி ஆத்மியா வீடு. அடியாட்கள், அம்பு, பணபலம் எல்லாம் இருக்கிற பெரிய குடும்பம். சிவா வீடு ஒரு நடுத்தரக் குடும்பம். சிவாவின் அப்பா இளவரசு. இவர், ஆத்மியா வீட்டுக்கு சொந்தமான பள்ளிகூடத்தில் காண்ட்ராக்ட் வேலையெடுத்து செய்துகொண்டு வருகிறார். எதிர் எதிர் வீடு, தொழில் சம்பந்தமாகவும் அடிக்கடி சந்திக்க வேண்டி இருப்பதால் இளவரசு அடிக்கடி அந்த வீட்டுக்குச் செல்கிறார். அவருடன் சிவாவும் செல்கிறான். சிவாவும் ஆத்மியாவும் குழந்தைகள், ஒரே வயசு என்பதால் சகஜமாக பழகுகிறார்கள். வளரும்போது சிவாவுக்கு ஆத்மியா மேல் காதல் உருவாகிறது. ஆத்மியாவுக்கு காதல் இருக்கிறதா இல்லையா என்பது குழப்பமாக இருக்கிறது. ஆனால், இருப்பது போலவும் தெரிகிறது. சிவா தன்னை காதலிப்பது தெரிந்தும் தெரியாத மாதிரி நடந்துக் கொள்கிறார், ஆதித்யா. சிவா, ஆத்மியாவின் கைக்குட்டையை திருடும்போது கண்டு கொள்ளாமல் இருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேல், வண்டியில் போகும்போது ஆத்மியா வின் இடுப்பைப் சிவா புடிக்கும்போதும் கண்டுகொள்ளாதது மாதிரியே இருக்கிறார்.

வயசுப் பையன்களுக்கே உள்ள விஷயம்... சிவா தன் நண்பர்கள் மத்தியில் தான் ஆதித்யாவை காதலிப்பதாகவும் அவளுக்கும் தன் மேல் காதல் என்றும் ஏகப்பட்ட கற்பனைகளுடன் கதையளக்கிறார். இருவரும் சகஜமாக பழகுவதைப் பார்க்கும் நண்பர்களுக்கு அதை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை.

திடீரென்று ஆத்மியாவுக்கு அவர்கள் வீட்டில் மாப்பிள்ளைப் பார்த்து, நிச்சயம் செய்கிறார்கள். அதன்பிறகு, சிவா தன் காதலை ஆத்மியாவிடம் சொல்கிறார். ஆத்மியா அதனை மறுத்துவிடுகிறார். அவருக்கு ஆசை இருக்கிறது ஆனால், நிச்சயம் செய்துவிட்டதையும் வீட்டில் உள்ளவர்களையும் நினைத்து சிவாவின் காதலை மறுப்பது போல் தெரிகிறது.

அதன்பிறகு, சிவா சோகமாகவே அலைகிறார். அதைப் பார்த்து அவரோட நண்பர்கள் களத்தில் இறங்குகிறார்கள். அவர்கள் திட்டத்தால் ஆத்மியா கல்யானம் நிற்கிறது. பிரச்சினை பெரியதாகிறது. சிவா - ஆத்மியா பிரிகிறார்கள். அதன்பிறகு, சிவா வெளிநாடு போகிறார். நீண்ட இடை வெளிக்குப் பிறகு பழைய நினைவுகளுடன் சிவா ஊருக்குத் திரும்புவதுதான், நாம் முதலில் பார்த்த காட்சி.

சிவா வெளிநாடு புறப்பட்ட பிறகு ஆத்மியா வாழ்க்கையில் நடந்தது என்ன? சிவாவின் நண்பர்கள் ஏன் அப்படி காரை பின் தொடர்ந்து ஓடி வந்தார்கள்? இந்தக் கேள்விகளுக்கான விடைதான் மீதி படம்.

நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள்:

சிவகார்த்திகேயன், ஆத்மியா, சூரி, சிங்கம் புலி, இளவரசு மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். பாடல்கள்: யுகபாரதி, இசை: இமான், இயக்கம்: எழில்.

பலம்:

கல்லூரிப் பையன் போல் இருந்தாலும், அப்பாவி வெட்டி அதிகாரி பாத்திரத்துக்கு சிவகார்த்திகேயன் சரியாக பொருந்துகிறார். நண்பர்களாக வரும் சிங்கம்புலி, சூரி, ரவி-மரியா, ஷாம்ஸ், ஸ்ரீநாத் அணி கலக்கல். முறுக்கு மீசை ரவிமரியாவிடம் மாட்டிக்கொண்டு, ஊர் ஊராக அடி வாங்கும்போதும், நெடுஞ்சாலை ஓரத்தில் தேன் கிண்ணத்துக்கு நடனமாடும்போதும், கோபத்தில் ரவிமரியா பந்தாட, "நல்லாத்தான்யா இருந்தான்... ரீ-சார்ஜ் பண்ணிவுட்டாய்ங்க!'' என்று கலங்கும்போதும்... வாய்விட்டுச் சிரிக்க வைக்கிறார் சிங்கம்புலி. "அவன் என்னை 'மச்சான்'னு கூப்பிட்டுட்டாண்டா!'' என்று வெந்து வெம்பும் இடத்தில் ரவிமரியாவும் அரங்கத்தை அதிர வைக்கிறார்.

பாடல்கள் கேட்க அத்தனை இன்பமாக இருக்கிறது.

சின்ன வயசில் இருந்தே கதாநாயகனும் கதாநாயகியும் பழகும் படங்களில், அவர்களுக்குள் அப்போதே காதல் என்றும், அவள் நடக்கும் போது முள்ளு குத்தாமல் இருக்க அவன் தன் கையைக் கொண்டு அவள் காலை தாங்குவதும்... இப்படி இருப்பதுதான் தமிழ் சினிமா வழக்கம். பார்த்து பார்த்து அலுத்துப்போய் விட்டது. நல்ல வேளை இதில் அப்படியெல்லாம் காட்சிகள் இல்லை.

காதல், கதாநாயகியின் அடாவடி குடும்பம், காதலை சேர்த்து வைப்பதற்காய் சோறு தண்ணி இல்லாமல் உழைக்கும் கதாநாயகனின் நண்பர்கள் கூட்டம் என முற்பாதி கொஞ்சம் நகைச்சுவை, கொஞ்சம் நல்ல பாடல்கள் என நகர்கிறது.

பலவீனம்:

ஆத்மியா, புதுமுகம். கண்டதும் காதலிக்கலாம் போலத்தான் இருக்கிறார். ஆனால் படு குழப்பமான அவரது பாத்திரப் படைப்பு அவரை ரசிக்க விடாமல் செய்கிறது. தன் விருப்பமின்றி, அதுவும் கல்யாணப் பொண்ணைக் கடத்தி வந்துவிட்டார்கள் என அவ்வளவு கோபமாக குமுறும் ஆதித்யா, அடுத்த காட்சியிலேயே... சரி, வந்தது வந்துவிட்டோம்... இரண்டு மாதம் ஜாலியாய் இருந்துட்டு போகலாம் என்கின்ற மனநிலைக்கு மாறிவிடுவது, ஏற்றுக்கொள்ளும் படியாய் இல்லை.

சிவகார்த்திகேயன், குழந்தைத் தனமாய் முகத்தை வைத்துகொள்ளும் போதும் ஆதித்யாவிடம் வழியும்போதும் பிரமாதமாகச் செய்கிறார். ஆனால், அதே உடல் மொழியையே தீவிரமான காட்சிகளிலும் காட்டும்போது ரசிக்கும்படி இல்லை.

படுபயங்கரமாக வில்லன் அறிமுகப்படுத்தப்படுகிறார். தான் திருமணம் செய்யவிருக்கும் பெண்ணை கடத்தியவனை கண்டுபிடித்து, "பொடிமாஸ் ஆக்குவேன்" என சூளுரைத்து சுமோ ஏறுகிறார். ஆனால், படம் முடிந்து அரங்கத்தை வெளியேறுவது வரைக்கும் அவர் வந்த பாடில்லை. தங்கை ஆத்மியா மீதான அண்ணன்களின் பாசத்திலும் எந்த உயிர்ப்பும் இல்லை.

ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, பின்னணி இசை எல்லாமே ஓ.கே. ரகம்தான்.

பல படங்களிலும் பார்த்து பார்த்து சலித்து போன காட்சிகள், பெரிய பெரிய லாஜிக் குளறுபடிகள் என பயங்கர அலுப்பு தருகிறது, இரண்டாம் பாதி.

பார்க்கலாமா?

ஒரு கலைப் படைப்பு வெற்றிபெற பார்வையாளர்கள் அதனுள் கரைந்து போக வேண்டும். படத்துக்குள் தன்னை உணர வேண்டும். இந்த படம் அதனைச் செய்ய தவறுகிறது. காதலையும் காமெடி போலவே எடுத்துக்கொள்ளும் கதாநாயகன், அவனைக் காதலிக்கிறோமா இல்லை குடும்பத்தை காதலிக்கிறோமா என தானும் குழம்பி நம்மையும் குழப்பும் கதாநாயகி... என ஒட்டியும் ஒட்டாத பாத்திரங்களும் கதையும் சேர்ந்து காதல் மீதோ படத்தின் கதை மீதோ நமக்கு ஈடுபாடு வருவதை தடுக்கிறது.

இவ்வளவு சொல்லிவிட்டோம். இதை வைத்து பார்க்கலாமா வேண்டாமா என்பதை நீங்களே முடிவு செய்துவிடுவீர்கள்தானே!

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 647.831.0363

ELECTRICAL WORKS
FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

YARL WINDOW BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
Tel: 416.806.5397
905.201.7733
CALL: N. SELVAM

நகைச்சுவைத் தொடர் 248

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



## பேசப் படாத அனுபவங்கள்



ஒரு கரும்பலகை ஒரு சோக்கட்டி திறந்த அமைப்பிலுள்ள வகுப்பறை ஆசனத்தில் அமராமல் அங்குமிங்குமாக நடந்து பாடம் நடத்தும் ஆசிரியர்கள். போட்டோ கொப்பி மெசின் இல்லை இன்ரநெற் ஈமெயிலில்லை.

தமிழ் இலக்கண இலக்கிய, சமயம் மற்றும் பாடங்களை அன்றைய ஆசிரியர்கள் படிப்பிக்கும்போது அந்தக் காட்சிகள் கண்முன் நிக்கும்.

இன்று நாகரிகத்தின் உச்சத்தில் நிற்கிறோம். மாணவர்கள் படிக்கிறார்களோ இல்லையோ வாரா வாரம் போட்டோ கொப்பி கட்டுக்கட்டாக. மாணவர்கள் இரவு பகலாக யாருடனாவது கூட்டாலோசனையில் கொடுக்கும் வேலைகளைச்செய்து முடிக்கின்றனர். புள்ளிகளும் தாராளமாகக் கிடைக்கிறது

பழமை பற்றி கதைப்பதை யாரும் விரும்புவதில்லை. ஆனால் புதைபொருள் ஆராய்ச்சியையும் பண்டைய மருத்துவக் குறிப்புகளையும் அன்றைய சமையலையும் ஆராய்ச்செய்து பட்டங்கள் பெறுகின்றனர்.



நான் மாணவனாக இருந்த காலத்திலும் கலகலப்பு பத்திரிகை நடத்திய காலத்தில், கலகலப்பு பாஸ்கர் இப்போ அமெரிக்காவில் இருப்பவர், கலகலப்பு பத்திரிகையின் உதவியாசிரியர் இயக்கிய 'ஆச்சிக்குட்டிக்கு வாச்ச மாப்பிள்ளை' முழுநீள நகைச்சுவை நாடகம். இது யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் மேடையேற்றப்பட்டது. இடங்களுக்கேற்றவாறு சனங்களும் காட்சியமைப்பும் மாறும். நான் இலண்டன் மாப்பிள்ளை என்ற பாத்திரத்தையும் பாஸ்கரன் ஆச்சிக்குட்டி பாத்திரமும் ஐசாக் இன்பராஜா ஆறுமுகம் பாத்திரத்தையும் கலகலப்பாக பாஸ்கரன் உருவாக்க 3 மணிநேரம் போவதே தெரியாமல் நடைபெறும். நான் அதில் நடித்திருந்தாலும் வவுனிக்குளத்தில் மேடையேற்றப்பட்டபோது பொம்பிளை என்ன நிறம் எனக் கேட்கும்போது வவுனிக்குள செத்தல்மாதிரி நல்ல சிவப்பு எனச்சொன்னபோது அங்குள்ள அன்றைய இளம் பெண்கள் தம்மை மறந்து சிரித்த காட்சி இன்றும் கண்முன் நிற்கிறது. வன்னி மண்ணையும் வயல் காட்சிகளையும் மறக்கமுடியுமா?

அன்று புகைப்படங்களோ வீடியோக்களோ இல்லை. கமெறாக்களே தட்டுப்பாடான காலம். பலரின் முகங்களை கமெறா முதன் முதலில் பார்ப்பது பத்தாம் வகுப்பு பரீட்சையில் தான். அதாவது எஸ்.எஸ்.சி பரீட்சைக்கு போஸ்ரல் அடையாள அட்டை ஸ்ரூடியோவில் எடுக்கும் போது தான்.

அந்த நாடகத்தில் சீதனப்பிரச்சினை, படித்த குடும்பம், படிக்காத குடும்பம், வெளிநாட்டு மோகத்தால் திருமணங்கள் மூலம் ஏமாற்றப்படுதல், வேலை போன்றவை நகைச்சுவைமூலம் வெளிப்படுத்தப்பட்டதால் பலரைக் கவர்ந்திருந்தது. நாடகங்கள் பார்ப்பவர்கள் மனதைத் தாக்கவோ புண்படுத்வோ இல்லாமல் இருந்ததால் பலரின் அபிமானத்தைக் கவரக்கூடியதாக இருந்தது

ஆச்சிக்குட்டி ஆச்சிக்குட்டி தனிமையென்னை வாட்டுதடி…
தாகமாய் இருக்குதடி மானே …எனும் பாஸ்கரன் எழுதிய நகைச்சுவைப்பாடல் பாஸ்கரன் இன்பராஜா இணைந்து சொந்தக்குரலில் பாடியது வயல் வெளிகளில் திறந்தவெளிகளில் சிரிப்பொலியுடன் இப்பொழுதும் ஒலிக்கிறது.

இரண்டுபிள்ளை போதுமென்று ரேடியோவிலை சொல்லுறாங்கள்-ரேடியோவிலை சொல்லுறாங்கள்
ஆசைசெக்கொன்று ஆஸ்திக்கொண்டு போதும்
அடுத்துப்பெத்தா உடம்பு என்ன ஆகும்
…….
……இரண்டு..பிள்ளைக்..கணக்கெதுக்கு இரண்டு பிள்ளை கணக்கெதுக்கு
பிள்ளை.. யொன்றை கூடப்பெத்தால் தானே..
சூப்பன் சீனி..கூடவாங்கலாமே
நகைச்சுவை நாடகம் மட்டுமல்ல பாடல்களும் தான்.



பழைய ஞாபகங்கள் அசைபோட்டுக் கொண்டிருக்கும் பொழுது செக்கண்ட்புளோர் செல்லம்மா, அதிர்ச்சிச் செய்தியுடன் வந்தா. அன்னம்மாக்கா இந்தக் கடும் வெக்கேக்கை காருக்குள்ளை ஆரோ நாயை தனியவிட்டிட்டு மோலுக்குப் போனவையாம். நாய் செத்துப் போச்சாம். அதை விட்டிட்டுப் போன இளம் தம்பதியினரை பொலிஸ் அரஸ்ற் பண்ணியிருக்காம். சிறைத்தண்டனை கிடைக்குமாம் அதோடை இனிமேல் செல்லப் பிராணிகளை வளர்க்கேலாதாம்….
(நண்டின் காலை ஒடிக்காதே நாயைக் கல்லால் அடிக்காதே)



ஆட்டிலறி அன்னம்மா ஊரிலுள்ள தனது வயல் காணி ஆமிக்காரன்ரை மாமி வாடகைக்கு இருக்கினம். எப்பிடி எழுப்புவது என திக்குமுக்காடிக் கொண்டிருந்த பொழுது செக்கண்ட்புளோர் செல்லம்மாவின் கதை பிரசரை ஏத்தியது. செல்லம்மா பெத்த தாயை வீட்டிலை பாக்க மேய்க்க ஆக்களில்லாமல் முதியோர் இல்லத்திலை விட்டிட்டு சனம் திரியுது. அதை விட்டிட்டு ஜீவகாருண்யம் கதைக்காதை என தொங்கிப் பாய்ந்தா ஆட்டிலறி.

இலட்சக்கணக்கான மக்கள் இறந்தும் சர்வதேச ரீதியில் விசாரணை நடக்கிறது அல்லது நடக்கிறமாதிரி இருக்கிறது. இங்கு நாய் இறந்தால் சட்டம் உண்டு. அங்கு யார் இறந்தாலும் கொல்லப்பட்டாலும் கேட்பதற்கு யாருமில்லை.




யூன் 2012 ஞாபகம் வருகிறதா!

17. தந்தையர் தினம் (fathers day)
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



20. மகாகவி உருத்திரமூர்த்தி நினைவு தினம் 1971 - (1927-1971)
சிறுநண்டு மணல்மீது படமொன்று போடும் சிலவேளை அலைவந்து அதைக்கொண்டு போகும் - மகாகவி
21. கோடை காலம் ஆரம்பம்
30. நிலா குகதாசன் நினைவுதினம். (இளையநிலா குகதாசன்)
இன்னொரு நாளில் உயிர்ப்பேன்

சொல்லத்தான் நினைக்கிறேன்

- கலகலப்பு தீசன்



எங்கு சென்றாலும் எம்மவர்கள் (முதியவர்கள்) இயைஞர்களை விமர்சிப்பதே வேலை இந்தக்காலத்துப் பிள்ளையள் என ஆரம்பித்து குறைகளை அடுக்கிக்கொண்டே போவார்கள். நடை உடை பாவனை சடங்கு சம்பிரதாயங்களை நீட்டி முடக்கி கதைப்பார்கள்.
அண்மையில் திருமணவிழாவில் அதுவும் கனேடிய பல்கலைக்கழகங்கள் மாணவன் அவரது திருமணத்திற்கு வந்திருந்த மாணவர்கள் அனைவரும் பட்டுவேட்டியணிந்து வரிசையாக நின்று மணமகன் மண மேடைக்கு வரும்பொழுது இருமருங்கிலும் நின்று வரவேற்றனர். அதைப்பார்த்து கோட் சூட்டுடன் ரசித்துக் கொண்டிருந்த என்னை முதியவர் ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்.

---

# 'முளிதயிர்….

31ஆம் பக்கத்தொடர்ச்சி

உலகுக்கு அளித்தார். மொழிமாற்றம் செய்யப்பட்டவை சில; கலாசார மாற்றங்களை அனுசரித்தவை சில; இணையான பழமொழிகள், சொற்றொர்கள் சில; எமது கலாசாரத்திலும் பார்க்க அதீதமான முற்போக்குகளைக் காட்டுவன சில என வகையான மாற்றங்களோடு வெளிவந்து இங்கிலிஷ் நாவல்களை வாசிக்காதவர்கள் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின.

ஒன்றிலிருந்து ஒன்றாக நினைவுகள் அலை பாய்கின்றன. ஊடகங்களில் தமிழர் துக்கதினம் என வருகின்றது. என்ன துக்கதினம்? சிறிது காலமாயினும் நம்மை நாம் ஆண்ட சரித்திர காலம் ஏன் துக்கநாள் ஆகிறது. பழையபடி செங்காந்தள் நினைவுக்கு வருகிறது.

இலக்கிய நயம் பொருந்திய காந்தள் மலர்பற்றிய வர்ணனை காலங்காலமாகப் புலவர்கள் மத்தியில் பிரபலம் வாய்ந்ததாக வழிவழிவந்து கொண்டிருக்கிறது. நளவெண்பாவில் புகழேந்திப் புலவரும் பெண்ணின் வதனத்தை வர்ணிக்கும் போது தாமரை என முகத்தையும் நீலோற்பல மலர் எனக் கண்ணையும் நினைத்த வண்டுகள் முகத்தில் மொய்க்கின்றன. வண்டுகளின் தொல்லை பொறுக்கமாட்டாத அப்பெண் தன் கரங்களால் கண்ணைப் பொத்துகிறாள். வண்டுகள் மேலும் ஆரவாரப்பட்டு காந்தள் மலரென விரல்கள் எல்லாம் மொய்க்கின்றன.

கவிஞர் கண்ணதாசன் இன்னமும் விலாவாரியாய் சங்ககாலப் புலவர்கள் ஒருவரியில் எழுதி விளங்கவைத்ததை காலமாற்றங்களுக்கேற்ப எழுதி வைத்துள்ளார்.

இன்று அந்த செங்காந்தள் மலர் புலம்பெயர் தமிழர் மத்தியில் தாயகத்தின் இறைமையாகவும் வீரத்தின் சின்னமாகவும் விளங்குகிறது.

வடலி பதிப்பகத்தால் வெளியான,
"ஒலிக்காத இளவேனில்" (2009):
18 பெண் கவிஞர்களின் கவிதை நூல் அறிமுக நிகழ்ச்சி...

**இடம்: ஸ்காபரோ சிவிக் சென்டர்.**
**திகதி: சனிக்கிழமை யூன் 16, 2012**
**நேரம்: 3:00 - 6:00 pm**

உங்கள் அனைவரையும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்க வருமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்...








# வாசகர் எண்ணம்

'கனடாவில் வாழ்வில் நாய் ஒன்றிடம் கடி வாங்கினால் நட்டஈடு பெறுவது எப்படி? என்ற தலைப்பில் சிவ பஞ்சலிங்கம் எழுதிய கட்டுரையை வாசித்த போது பல வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. அதனை விளம்பரம் பத்திரிகை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற நோக்கில் இதனை எழுதுகின்றேன்.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தமிழ் இளைஞர்கள் ஐரோப்பிய நாடுகளில் முதன் முதலில் கால்பதித்து அதில் சிலர் உடம்பிலை நோகாமல் துரித வேகத்தில் காசு எப்படி உழைக்கலாம் என்ற எண்ணங்களில் ஆலாய் பறந்த காலங்களில் இது நடந்தது என்பது ஒரு செய்தி!

அந்த நாட்டு செல்வந்தர்கள் சிலர் வீதியில் தங்கள் வளர்ப்பு நாய்களுடன் நடந்து வருவார்கள். நம்ம இளைஞர்கள் சிலர் அந்த நாய் தங்களுக்கு கடியாதா? என்ற எதிர்பார்ப்பில் கிட்ட கிட்ட போய் பார்ப்பார்கள்.

தாயக மண்ணில் கிராமங்களில் பிறந்து வாழ்ந்தவர்களுக்கு நாய் ஒன்றிடம் கடி வாங்குவது என்பது ஒரு பாரிய விடயமல்ல. பலதரப்பட்ட அனுபவம் இருக்கும். ஒரு இளைஞன் ஒருமுறை ஒரு நாய்க்குப் பக்கத்தில் நெருக்கமாக போய் போய் பார்த்தான்? அந்த நாய் இவனை ஒன்றும் செய்யவில்லை. ஏமாற்றமாய் போன நிலையில் கால் இடறி அதன் மீது விழுவது போல் விழுந்து கட்டிபிடித்து புரண்டு பார்த்தான். கடைசியாக என்ன நடந்தது தெரியுமா?

'நாயைத் தாக்கியது' (Assaulted To Dog) என்னும் குற்ற சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். மனிதனை மனிதன் கோபத்தில் தாக்குவது வழமை. என கேள்விப்பட்டிருக்கிறோம். நாய் கடித்தால் நல்ல இன்சூரன்ஸ் காசு வரும் என நம்ம சினேகிதங்கள் சொன்னார்கள். அதுதான் முயற்சி செய்தேன் என்று பதில் தந்தான்.

- சிவபாதம்

விளம்பர ஆசிரியர் அவர்கட்கு.
வெகுளாமை - 15

கோபம் உண்டாவதற்கு சில காரணிகளைப் பற்றி கடந்த 01.06.2012 இல் வெளிவந்த பத்திரிகையில் அகணி அவர்கள் குறிப்பிட்டு இருந்தார். சிறு பிராயங்களில் துன்புறுத்தப்படுபவர்கள் அல்லது முறையாக அன்பு பாராட்டிப் பராமரித்து வளர்க்கப் படாதவர்கள், வளர்ந்ததும், எதற்கும் கோபப்படும் தன்மை கொண்டவர்களாக அதிகமானோர் காணப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். ஆகவே சிறு பிராயத்தில் அன்பு, ஆதரவு காட்டி வளர்க்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். மேலும், வெகுளாமைக்கு ஆரோக்கியம் அற்ற உணவு வகையும் ஒரு காரணியாக அமைந்து இருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். யோக்கட், சொக்கலேட், பாதாம் பருப்பு போன்றவை வெகுளாமைக்கு அருமருந்தாகும் என்பதை அறிய வைத்துள்ளார். நேர காலத்திற்கு உணவு அருந்தாமல் இருப்பதனால் மூளையில் செறற்றோனின் அளவு குறைந்து கோபத்தை ஏற்படுத்துவதையும் கட்டுரையில் காட்டியுள்ளார்.

மேலே தெளிவு படுத்திய விபரங்களை அறிந்து, கோபத்தை தணித்து., எல்லோர் மத்தியிலும் நல்லுறவைப் பெரிதும் வளர்க்க அகணியின் கட்டுரை எங்களுக்கு நற் பலனை தருகின்றது. நன்றி உரித்தாகுக.

சிவராமன் விசாகப்பெருமான்




# பிரக்ஞை: ஓர் அறிமுகம்
## நிகழ்வு ஒரு பார்வை

'பிரக்ஞை' என்ற சொல்லின் மீதும் அந்த விடயத்தின் மீதும் எனக்கு ஒரு பிரியம் இருக்கிறது. அதனால் அது சம்பந்தமான ஒரு பயிற்சிப்பட்டறையும் புத்தக வெளியீடும் நிகழ்கிறது என்ற போது அதில் கலந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அந்த ஆர்வம் தந்த மன உந்துதல், கடந்த சனிக்கிழமை யூன் மாதம் 9 ஆம் திகதி, நிகழ்ந்த மீரா பாரதியின் பிரக்ஞை ஓர் அறிமுகம் நூல் வெளியீட்டு நிகழ்வில் என்னையும் கலந்து கொள்ளவைத்தது.

இது முதலாவது அனுபவமாக இருந்ததாலும் வேறு சில தடைகள் ஏற்பட்டதாலுமோ என்னவோ என்னால் அதனை முழுமையாக உணர முடியவில்லை. இருந்தாலும் எந்த விடயத்தையும் ஆறுதலாக அனுபவித்துச் செய்யும் போது உள்ள சுகத்தை உணரத் தேவையான அந்த இயல்பை வளர்த்துக் கொள்ள எமக்கு பயிற்சி வேண்டும் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

பிரக்ஞை - ஓர் அறிமுகம் என்ற மீரா பாரதியின் புத்தகத்தை வெவ்வேறு கோணங்களில் தர்சன், மகாலிங்கம், சுல்பிகா, மைதிலி, நாதன் ஆகிய ஐவரும் மெலிஞ்சி முத்தனின் தலைமையில் அறிமுகப்படுத்தினர். அந்த அறிமுகம் பிரக்ஞை என்றால் என்ன, அது எப்படித் தனி மனித வாழ்வையும் சமூகத்தையும் பாதிக்கிறது போன்ற பல நல்ல விடயங்களையும் கருத்துக்களையும் சபையினருக்குத் தெளிவு படுத்தியது. மேற்குலக உளவியல் ஆய்வுகள் மனப்பிறழ்வு கொண்டவர்களில் நடத்தப்பட்டதால் அவற்றிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் சாதாரண மனிதர்களுக்குப் பொருந்துமா என்ற விவாதம் உட்பட வேறு சில ஆரோக்கியமான விவாதங்களும் நிகழ்வில் இடம் பெற்றன. வெறுமனவே அறிமுக விழாக்களுக்குப் போய் மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுத்து விட்டு வருவதற்குப் பதிலாக சபையினர் பங்குதாரர்களாக மாறி அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்ளும் நிகழ்வாக இது இருந்ததில் அனைவருக்கும் மிகுந்த திருப்தி ஏற்பட்டிருக்கும் என நான் கருதுகின்றேன். அது மட்டுமன்றி இரு நிகழ்வுகளையும் குறித்த நேரத்துக்குள் நடத்தி நேரத்துக்கு மதிப்புக் கொடுத்தமையும் என்னைக் கவர்ந்தது.





**- ஸ்ரீரஞ்சனி -**

'பிரக்ஞை' பயிற்சிப்பட்டறை, உணவை ருசிக்கும் அனுபவம் முதல், மிருகங்களாகவும் சிறு பிள்ளைகளாகவும் மாறும் அனுபவம் வரை, வேறுபட்ட வித்தியாசமான அனுபவங்களை எமக்குத் தரும் பல செயற்பாடுகளைக் கொண்டிருந்தது.

# இராஜபூக்கள்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

பணக்கார குடும்பத்தில் இருந்துவரும் மாணவியை அவருடைய தோழிகள் எவ்வாறு ஏமாற்றி பணம் செலவழிக்க வைக்கிறார்கள் என நடித்து காண்பிக்கப்பட்டது. இதை தொடர்ந்து லோகனா ஜெயராஜாவின் நன்றி உரையும், மாணவர்களுக்கு சான்றிதழ்களும், விருதுகளும், வழங்கப்பட்டன.



இராஜபூக்கள் தமிழ் கலைகல்லூரியின் 14வது ஆண்டு கலைவிழா இரவு 11.30 மணியளவில் நிறைவு பெற்றது.


Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc.
HOMELIFE HIGHER STANDARDS Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393


உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated


Thayalan (Thaya) Gobalakrishnan
Mortgage Development Manager
Scarborough North, Markham and Stouffville
Call me for any Mortgage Financing questions
* New Mortgages
* Refinance
* Equity take out
you're richer than you think.
Cell: 416-575-3211
Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@scotiabank.com
Scotiabank


NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES


Low Mortgage Rates
TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute